3rd November 1965] [Mr. Speaker]

The nomination papers will be taken up for scrutiny at **1 p.m.** on Monday, the 8th November 1965. I also fix 2 p.m. on Tuesday, the 9th November 1965 as the last hour and date for the withdrawal of candidature.

If the number of candidates nominated exceeds the number of seats to be filled, namely, two, a poll will be taken on Thursday, the 11th November 1965 between the hours of 9 a.m. and **1 p.m.**

VIII.—GOVERNMENT RESOLUTION.

Condemnation of Pakistani Aggression and Solemn Dedication to Defence Efforts.

* The Hon. Sri M. BHAKTAVATSALAM : Sir, I move that—

" This House strongly condemns the naked and wanton aggression by Pakistan and assures the Prime Minister that the Government and the people of the Madras State solemnly pledge their wholehearted support, service and sacrifice in men, money and material for the defence of our Motherland;

This House further expresses its grateful appreciation of the magnificent response of the people to the call of the Nation and exhorts them to maintain and promote the unity, patriotism, sense of service and sacrifice displayed by them in this hour of grave crisis;

This House expresses its profound tribute to the Armed Forces for their heroism, valour and patriotism in the face of grave danger and pays its sincere homage to those who made supreme sacrifice and laid down their lives in defence of the Motherland and its Freedom;

This House solemnly affirms that it is for us here to dedicate ourselves anew to the great task that remains to be fulfilled, that from these honoured dead we take increased devotion to the cause for which they gave their lives and we hereby resolve that these dead shall not have died in vain and that this Nation conceived in liberty and dedicated to peace, democracy and secularism shall expel the aggressor from our sacred soil and march forward in fulfilment of the cherished goal. "

கனம் சபாநாயகர் அவர்களே, மூன்றாண்டுகளுக்கு முன்பு இந்த மன்றத்திலே ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது கனம் உறுப்பினர்களுக்கு நினைவிருக்கும். அப்பொழுது சீனு நம்முடைய எல்லையிலே திடீரென்று அக்கிரமமாக ஆக்கிரமிப்புச் செய்தது. மக்கள் எல்லோரும் வீறுகொண் டெழுந்து தங்கள் உறுதியைத் தெரிவித்தார்கள். இந்த மன்றமும்

[திரு. எம். பக்தவத்சலம்] [3rd November 1965

அதே வகையில் வித்தியாசங்களை மறந்து ஒரு மனத்தோடு, ஒரே சிந்தனையுடன், ஒரே உறுதியுடன், ஒரே குரலில், "நம்முடைய நாட்டை ஆக்கிரமித்திருப்பவர்களைத் துரத்தி அடிப்போம்" என்ற உறுதியைத் தெரிவித்தது. நம்முடைய நாடெங்கிலும் இத்தகைய உறுதியைக் கண்ட சீனுக்காரர்கள் கொஞ்சம் பின்வாங்கினார்கள். எனினும், இன்னும் அவர்கள் நம்முடைய எல்லையைவிட்டு அகன்றபாடில்லை.

அதேமாதிரி, 1948-ஆம் ஆண்டிலே பாகிஸ்தான் திடீரென்று காஷ்மீரில் நுழைந்தது. இந்த நாட்டிலிருந்து அவர்கள் பிரிந்ததிலிருந்து காஷ்மீர் மீது வைத்த கண்ணை இன்னும் அவர்கள் எடுக்கவில்லை. காஷ்மீரை எப்படியாவது பிடித்துக்கொள்ள வேண்டுமென்ற பேராசை கொண்டவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் திடீரென்று காஷ்மீரில் நுழைந்தபொழுது, நம்முடைய வீரர்கள் தீரத்துடன் அவர்களை எதிர்த்து நின்றார்கள். ஆனால், அப்பொழுது வெளியிலே உள்ளவர்கள் "போர் வேண்டாம், பேசித் தீர்த்துக்கொள்வோம்" என்று கூறியதால் அவர்களும் சுடுவதை நிறுத்தினார்கள்; நாமும் போர் நிறுத்தக் கோட்டைத் தாண்டிப் போவதில்லை என்ற நிலையிலே இருந்தோம். இந்த நிலை பல ஆண்டுகளாக இருந்துகொண்டிருக்கிறது. "காஷ்மீர் பிரச்னை" என்று அவர்கள் சொல்வார்கள்; நாம் "இல்லை" என்று சொல்லிக்கொண்டு இருந்தோம். இருந்தபோதிலும், மத்திய அரசாங்கத்தினர் 'அவர்கள் அக்கிரமமாகக் காஷ்மீரில் நுழைந்திருக்கிறார்கள், அவர்களை விரட்டவேண்டும்' என்று அவசரப்படாமல், 'ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் இருக்கிறது, அவர்கள் அப்ஸர்வர்கள் போட்டிருக்கிறார்கள், அவர்கள் கவனித்து வருவார்கள்' என்ற காரணத்தினால் மிகவும் பொறுமையாக இருந்தார்கள் என்பதைக் கனம் உறுப்பினர்கள் எல்லோரும் உணர்வார்கள்.

ஆனால், சென்ற மே மாதத்திலே குஜராத் மாநிலத்திலே, கட்ச் பகுதியிலே பாகிஸ்தான் ஆக்கிரமித்தது. அப்பொழுதும் நம்முடைய வீரர்கள் எதிர்த்து நின்றார்கள். அந்த இடம் மிகவும் கஷ்டமான இடம். அதைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் முன்வந்தார்கள். மறுபடியும் அவர்கள் மேலும் முன்னேறுவதற்கு இடம் கொடாமல் நம்முடைய வீரர்கள் தடுத்தனர். பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் நமது பிரதம மந்திரி அவர்களை இங்கிலாந்தில் சந்தித்தபொழுது, "நாங்கள் தொடர்ந்து போரை நடத்த விரும்பவில்லை, அதனால் அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாம் பாதிக்கப்படுகின்றன" என்று உண்மையிலேயே போரை வெறுப்பவர்போல் பேசி, போரை நிறுத்த வேண்டுமென்று கூறினார். நமது பிரதம மந்திரி அவர்களும் அதற்கு ஒப்புக் கொண்டார்கள். அதன் பிரகாரம் 'ஸீஸ் ஃபையர்' ஏற்பட்டது. ஆனால் அதன்பிறகு, அயூப்கான் நயவஞ்சகமாக, திருட்டுத்தனமாக ஊடுருவல்காரர்களைத் தயாரித்து, அவர்களுக்குப் பயிற்சி அளித்து, தளவாடங்களைக் கொடுத்து காஷ்மீருக்குள் அனுப்பினார். ஏறத்தாழ, 4,000 அல்லது 5,000 ஊடுரு

3rd November 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

வல்காரர்களை நுழையச் செய்தார்கள். அவர்களுடைய திட்டம் கனம் உறுப்பினர்களுக்குத் தெரியும். ஆகஸ்டு 9-ம் தேதி என்று நாள் குறிப்பிட்டு, அந்த நாளன்று ஊடுருவல்காரர்கள் மூலம் காஷ்மீர் மக்களை—முஸ்லீம் மக்களை --தூண்டிவிட்டு அவர்களைக் கலகம் செய்யச் சொல்லலாம்; காஷ்மீரில் கலகக் கொடி நாட்டலாம்; காஷ்மீர் மக்கள் அப்படிச் செய்தால், 'காஷ்மீர் மக்கள் கலகம் செய்கிருர்கள்' என்று உலகத்திற்குப் பறைசாற்றலாம் என்று திட்டமிட்டார்கள். காஷ்மீர் மக்கள் முஸ்லீம்களாக இருந்தாலும், அவர்கள் அதை ஆதரிக்கவில்லை. ஆகையால், அவர்களுடைய திட்டம் படுதோல்வி அடைந்தது. இதில் ஏமாற்றமடைந்ததால்தான் பாகிஸ்தான் பகிரங்கமாக மேலும் ஆக்கிரமித்தது. அதைத் தவிர்க்கும் நோக்கத்துடன் தான் நாம் லாகூர், சியால்கோட் பகுதியிலே தாக்க ஆரம்பித்தோம். நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில், போர் வேண்டுமென்ற எண்ணமில்லை. போர் வெறி என்பதே கிடையாது. உலகத்தில் போரைத் தவிர்க்க வேண்டுமென்ற சிறந்த வழியை நம்முடைய ஒப்புயர்வற்ற தலைவர், மறைந்த ஜவஹர்லால் நேரு அவர்கள் காட்டினுர்கள். அதைப் பற்றி உலக நாடுகளுடன் அவர் கலந்து பேசி அவர்களை அதற்கு இணங்கச் செய்தார். ஏனென்ருல், இரண்டாவது உலக யுத்தம் நடந்தபொழுது, அந்த யுத்தத்திலே சிக்கிக் கொண்ட நாடுகள் மகத்தான நாசத்திற்கு ஆளாயின. லட்சக்கணக்கான மக்கள் மடிந்தார்கள்; எனவே, பாதிக்கப்பட்ட நாடுகளுக்குப் போர் என்ருல் எவ்வளவு அவதிகள் ஏற்படும் என்பது தெரியும். அதனுல் தான் அந்த நாடுகள் எல்லாம் உலகத்தில் போரைத் தவிர்க்க வேண்டும் என்று நினைத்தன. ஆனுல், சீனு, பாகிஸ்தான் போன்ற நாடுகள் இதற்கு விதிவிலக்காயின. இந்த நாடுகள், போரை நடத்தித் தங்களுடைய எகாதிபத்தியத்தை உலகத்திலே பரப்ப வேண்டும் என்றும், தாங்கள்தான் உலகத்திலே முதன்மையான எகாதிபத்தியவாதிகளாக இருக்கவேண்டுமென்றும் நினைக்கின்றன. இவைகளுக்கு ஜனநாயகத்திலே நம்பிக்கையில்லாத காரணத்தினுல் தான் இவை ஒன்றுக்கொன்று உறவுகொண்டிருக்கின்றன. இந்த உறவைப்பற்றி இன்றைக்கு ஒரு பத்திரிகை நிருபர் என்னிடம் கேட்டார். "பாகிஸ்தானுக்கும், சீனுவுக்கும் இப்படி உறவு இருந்தாலும், சீனுவை எதிர்க்கின்ற நாடுகள் கூட ஏன் பாகிஸ்தானை ஆதரிக்கிருர்கள்?" என்று கேட்டார். "அந்த நாடுகளுக்கு விவஸ்தை இல்லை; நம்முடைய நாட்டின்மேல் நல்லெண்ணம் கிடையாது. மேலும், இந்த நாடு ஜனநாயகத்தை ஸ்தாபித்துப் பதினெட்டு ஆண்டுகளாக வளர்ந்துகொண்டு வருகிறதே என்ற பொருமை—பொருமை என்பது கொடிய நோய்—அதனுல் வருகின்ற அச்சம், இவைகள்தான் அதற்குக் காரணம்" என்று நான் விடை கூறினேன். இப்படிப்பட்ட விசித்திரமான ஒரு நிலையை நீங்கள் காண்கிறீர்கள். ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு ஸ்தாபிக்கப்பட்டது. அது சீரிய நோக்கத்தோடு அமைக்கப்பட்டது. அது பல துறைகளிலே பல்வேறு அரிய தொண்டுகள் செய்து வருகிறது.

[திரு. எம். பக்தவத்சலம்] [3rd November 1965

அறியாமையைப் போக்குவதிலும், வியாதியை ஒழிக்கும் வகையிலும், அது சிறிய தொண்டாற்றி வருகிறது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். உலகத்திலே அமைதியை நிலைநாட்ட வேண்டிய ஒரு ஸ்தாபனம், அமைதிக்குப் பங்கம் விளைவித்தவர்களைக் கண்டிக்கக் கூடிய ஒரு ஸ்தாபனம் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம். இதே போன்று முன்பு 'லீக் ஆப் நேஷன்ஸ்' என்று ஒரு ஸ்தாபனம் இருந்தது. ஆனால், எத்தியோப்பியா நாட்டு விஷயத்திலே அந்த ஸ்தாபனம் சரியாக நடந்து கொள்ளவில்லை. ஆகவேதான், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் என்ற புதியதொரு ஸ்தாபனத்தை உலக நாடுகள் எல்லாம் சேர்ந்து அமைத்தன.

பாகிஸ்தான் அக்கிரமமாக இந்தியா மீது போர் தொடுத்திருக்கிறது. ஆனால் நம்முடைய பிரதம மந்திரி அவர்கள், 'பாகிஸ்தான் மக்கள் மீது நமக்கு ஒன்றும் வெறுப்பில்லை' என்று திருப்பித் திருப்பிக் கூறிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நல்வாழ்க்கை வாழ வேண்டுமென்றுதான் அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்த அன்று முதற்கொண்டு இன்று வரை விரும்புகிறோம். நாம் பாகிஸ்தான் மீது போர் தொடுக்கவில்லை. பாகிஸ்தான்தான் இந்தியா மீது போர் தொடுத்திருப்பதாகப் பிரகடனம் செய்திருக்கிறது. நம்முடைய சைனியங்கள் தாக்குவது எல்லாம் பாகிஸ்தானுடைய தளவாடங்களைத்தான். ஆனால், அவர்கள் ஜாம் நகர், துவாரகா நகர், அமிர்தசரஸ் ஆகிய இடங்களில் எவ்வளவு சேதத்தை விளைவித்திருக்கிறார்கள். நான் சில நாட்களுக்கு முன்பு பஞ்சாபிலுள்ள அம்பாலா நகருக்குப் போயிருந்தேன். அங்கு இரண்டு அடுக்குள்ள இராணுவ ஆஸ்பத்திரியின் ஒரு பகுதி தரை மட்டமாக ஆக்கப்பட்டிருக்கிறது. அங்கு எப்படியோ முன் ஜாக்கிரதையாக, சிகிச்சை பெற்று வந்த 150 வீரர்களை அப்புறப் படுத்திவிட்டார்கள். இல்லையென்றால் அந்த 150 பேரும் இறந்திருப்பார்கள். அங்கு இராணுவ அதிகாரிகளுக்கு என்று வார்டு இருக்கிறது. அதிலிருந்து ஒரு இராணுவ அதிகாரி மறைந்து விட்டார். இதை விடக் கோரமான காரியங்களும் நடந்திருக்கின்றன. அங்கு சரித்திரப் பிரசித்தி பெற்ற, 150 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட மாதா கோயில் இருந்தது. அது சிறந்த அழகான கட்டடம். 150 ஆண்டுகளாக உள்ள அந்தக் கட்டடத்தைப் பற்றி ஒரு வரலாறு கேள்விப்பட்டேன். சிப்பாய் மியூடினியின்போது அங்குள்ள பிரிட்டிஷ்காரர்கள் தங்களுக்கு ஏதாவது ஆபத்து வருமோ என்று அச்சப்பட்டு அந்தச் சர்ச்சிலே போய் அடைக்கலம் புகுந்தார்கள். பிரிட்டிஷ் குடும்பங்களுக்கு அடைக்கலம் அளித்த பிரசித்தி பெற்ற சர்ச் இன்றைக்குத் தரை மட்டமாக ஆக்கப்பட்டிருக்கிறது. மகத்தான பெரிய கோயில் கட்டடம் அது. பிரிட்டிஷார் இன்று யாரோடு மிகுந்த அனுதாபத்தோடு இருக்கிறார்களோ, அந்தப் பாகிஸ்தானால் குண்டு போடப்பட்டு அது இன்று தரை மட்டமாக ஆக்கப்பட்டிருக்கிறது. அதைப் பார்ப்பதற்காகவே அன்றாடம் ஏராளமான மக்கள் வந்து கொண்டே இருக்கிறார்கள். உண்டி வைத்துப் பணம் சேகரித்து அந்தச் சர்ச்சை கட்ட முடியுமா என்று ஏங்கிக்கொண்டி-

3rd November 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

ருக்கிறார்கள். இந்த முறையில் பல நகரங்களில் பல இடங்கள் அவர்களால் அழிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் நம்முடைய சேனைகள் அவர்கள் அக்கிரமமாக உபயோகிக்கும் தளவாடங்களை அழிப்பதிலேயே கவனம் செலுத்தின. நம்முடைய சைனியங்கள் வீர தீரத்துடன், ஆற்றலுடன் பல சாகசச் செயல்களைச் செய்து பாக்கிஸ்தானைத் தோற்கடித்துக்கொண்டு வந்தார்கள். அந்த வரலாற்றையெல்லாம் கனம் அங்கத்தினர்கள் பத்திரிகைகளில் பார்த்திருப்பார்கள். அந்த வீரர்களைப் பற்றிப் பெருமைப் படுகிறேன்.

பண்டைக் கால இலக்கியங்களில் வீர வரலாற்றை நாம் படித்திருக்கிறோம். ஆனால் நாம் இன்று நம்முடைய வீரர்களின் வீரச் செயல்களைப் பார்க்கிறோம். நம்முடைய நாட்டுத் தொழிலாளர்கள் செய்த ஆகாய விமானங்கள், மற்றத் தளவாடங்களை வைத்துக் கொண்டு அமெரிக்காவில் செய்யப்பட்ட உயர்ந்த ஆகாய விமானங்களையும் விரட்டி அடித்திருக்கிறார்கள். அழித்திருக்கிறார்கள். அவர்களுடைய தளவாடங்களையெல்லாம் நாசப்படுத்தியிருக்கிறார்கள். அவர்களைப் படுதோல்வி அடையச் செய்திருக்கிறார்கள். இதைப் பற்றியெல்லாம் நாம் மிகவும் பெருமிதமடைகிறோம்.

முதல் சண்டை செப்டம்பரில் நடந்தது. அந்தச் சண்டையில் மகத்தான வெற்றி அடைந்தோம். பாகிஸ்தான் படுதோல்வி அடைந்தது. இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு 'லண்டன் டைம்ஸ்' என்ற லண்டன் பத்திரிகையில் ஒருவர் இதைப் பற்றி அவருடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறார். 'அப்போது இருந்த நிலையில் மேலும் ஒரு வாரத்திற்குக் கூட பாகிஸ்தானால் தாங்கி இருக்க முடியாது' என்று அந்த விமர்சகர் தெரிவித்திருக்கிறார். இங்கிலாந்தின் போக்கு நமக்குத் தெரியும்; லண்டன் பத்திரிகையின் போக்கும் நமக்குத் தெரியும். அவர்கள் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த நிலையிலே நம்முடைய வீரர்கள் செய்த சாதனைகளை நாம் பாராட்டுகிறோம்; பெருமிதம் அடைகிறோம். அந்தப் போரில் உயிர் துறந்த வீரர்களுக்கு நாம் அஞ்சலி செலுத்துகிறோம். அவர்களுடைய குடும்பங்களுக்கு வேண்டிய உதவியைச் செய்யத் தாராளமாக முன் வந்திருக்கிறோம். 'போர் புரியும் வீரர்களே! நீங்கள் சிறிதும் கவலைப்படாதீர்கள், உங்கள் குடும்பங்களை நாங்கள் கவனித்துக் கொள்ளுகிறோம்; உங்கள் குடும்பத்திற்கு வேண்டிய உதவிகளை நாங்கள் செய்கிறோம்' என்று மக்கள் முன் வந்திருக்கிறார்கள். எல்லா மாவட்டங்களிலிருந்தும் ஆசிரியர்களும், குறிப்பாகப் பெண்களும் வீரர்களுடைய குடும்பங்களின் வரலாற்றைத் தெரிந்து அவர்களுக்கு உதவி செய்து கொண்டு வருவதை நாம் காண்கிறோம். அந்த வீரர்களுடைய குழந்தைகள் நன்றாகப் படிக்க வேண்டுமென்பதற்கான அரிய பணிகளைச் செய்து வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மன்றத்தின் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. எம். பக்தவத்சலம்] [3rd November 1965

ஐக்கிய நாட்டு ஸ்தாபன செகரடரி-ஜெனரல் அவர்கள் இந்தச் சண்டையை நிறுத்த வேண்டுமென்று கூறினுர்கள். அது நல்ல எண்ணந்தான். இப்போது ஏற்பட்டிருப்பது 'ஸீஸ் ஃபையர்' தான். அதாவது சுடுவதை நிறுத்துவதுதான். முதலிலே சுடுவதை நிறுத்தி விட்டு அப்புறம் போர் நிறுத்தத்தைப் பற்றிப் பேசலாம் என்றுர்கள். செகரடரி-ஜெனரல் அவர்கள் முதலிலே பாகிஸ்தான் பிரதிநிதிகளைக் கண்டு பேசினுர்கள். அவர்கள் செகரடரி-ஜெனரல் அவர்களுடைய யோசனையை ஒப்புக் கொள்ளவில்லை. பிறகு செகரடரி-ஜெனரல் அவர்கள் நம்முடைய பிரதம மந்திரி அவர்களைக் கண்டு பேசினுர்கள். அப்போது நாம் வெற்றிக்கு மேல் வெற்றி அடைந்து கொண்டிருந்த நிலையிலும் நம்முடைய பிரதம மந்திரி அவர்கள் 'பாகிஸ்தான் ஏற்றுக் கொண்டால் நாங்களும் ஏற்றுக் கொள்கிறேம்' என்று கூறினுர்கள். அதற்கு மேல், ஐக்கிய நாட்டு ஸ்தாபனம் தீர்மானம் கொண்டு வந்தது. பாகிஸ்தான் அந்நியத் துறை அமைச்சர் பூட்டோ முதலிலே தீர்மானத்தை ஒப்புக்கொள்ளவில்லை என்றுலும், பாகிஸ்தானின் அப்போதிருந்த நிலைமை பூட்டோவுக்குத் தெரியுமாதலால் 'சரி நீங்கள் எல்லாம் சொல்கிறீர்கள், ஆகவே, நாங்கள் ஏற்றுக் கொள்கிறேம்' என்று கூறினுர்கள். 'சுடுவது நிறுத்தப்பட்டது' என்று உலகத்திற்குப் பிரகடனம் செய்யப்பட்டது. அதே மேடையில் பூட்டோ பேசியதைக் கனம் அங்கத்தினர்கள் நினைவில் வைத்திருப்பார்கள் என்று கருதுகிறேன். '. . . இருந்தாலும் எங்களுக்குக் காஷ்மீர் வேண்டும்' என்று பேசினுர். ஆனல் சுடுவது நிறுத்தப்பட்டதா என்றுல் இல்லை. 23-ம் தேதி காலை 3 மணிக்குச் சுடுவதை நிறுத்துவது என்று பிரகடனம் செய்யப்பட்டது. அதற்குக் கால் மணி முன்னதாக அமிர்தசரசிலே குண்டைப் போட்டார்கள். அவர்கள் இன்னும் சுடுவதை நிறுத்தியபாடில்லை. இதையொட்டித்தான் நம்முடைய பிரதம மந்திரி அவர்கள் 'போர் நீண்டகாலம் தொடர்ந்து நடைபெறலாம், மும்முரமாக மூண்டாலும் மூளலாம்' என்று எச்சரிக்கை விடுத்திருக்கிருர்கள்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் பெரிய வல்லரசுகள், பெரிய நாடுகள், சிறிய நாடுகள் எல்லாம் கொண்ட ஒரு ஸ்தாபனமாக அமைக்கப்பட்டிருக்கிறது. உலகத்திலே யாராவது போரைத் தொடுத்தால் அதைத் தவிர்க்கவும், அமைதியை நிலைநாட்டவுமான சீரிய நோக்கத்தோடு அமைக்கப்பட்ட ஸ்தாபனத்தின் இன்றைய போக்கை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்களுடைய போக்கு நமக்குப் புரியவில்லை. ஒரு பக்கத்தில் பார்த்தால் பல நாடுகள் அற்புதமான சாதனைகளைச் சாதிக்கிருர்கள். விஞ்ஞான அறிவின் உச்சியை எட்டிப் பிடிக்கிருர்கள். சந்திர மண்டலத்தை அடைய முயற்சிக்கிருர்கள்; ஆகாயத்தில் சஞ்சரிக்கிருர்கள். இத்தகைய உயர்ந்த அறிவைப் பெற்றிருக்கின்றவர்களுக்கு, இன்றைக்கு இந்தியாவில் நடைபெறுகிற போரில் எங்கே நீதி இருக்கிறது, எங்கே அநீதி இருக்கிறது, யார் போரைத் துவக்கியிருக்கிருர்கள், எப்படி இந்தப் போர் வந்தது என்பதை உணர்ந்து கொள்ள முடியவில்லையா அல்லது உணர்ந்து கொண்டும் உண்மையான நிலையை எடுத்துச் சொல்ல மனம் இல்லையா, துணிவு

3rd November 1965] *[திரு. எம். பக்தவத்சலம்]*

இல்லையா, தைரியம் இல்லையா என்பதைப் பற்றித்தான் நாம் சிந்திக்க வேண்டியிருக்கிறது. ஆனால் ஒன்று நமக்கு இன்றைக்கு நிச்சயமாகப் புலப்படுகிறது. ஐக்கிய நாட்டுச் சபையைச் சார்ந்த நாடுகள் செயலற்றவர்களாக இருக்கிறார்கள். அதிலும் செக்யூரிட்டி கவுன்சில் கூட்டத்தில் பாகிஸ்தானின் அந்நிய நாட்டு அமைச்சர் பூட்டோ பேசிய பேச்சிருக்கிறதே—நாம காண்கிறோம், நம்மைச் சார்ந்தவர்கள் உற்சாக மிகுதியால் கூட்டத்தில் பேசுவதுண்டு, வேண்டுமென்று பேசுவது அல்ல, உற்சாக மிகுதியால் பேசுவது, இவையெல்லாம் பூட்டோவின் பேச்சுக்கு இணையாகாது. 'என் முன்னோர்கள்' என்றால் எந்த முன்னோர்கள் என்று தெரியவில்லை. 'என் முன்னோர்கள் இந்த பாரத நாட்டில் நாகரிகத்தை அமைத்தார்கள்' என்று சொல்கிறார்கள். அவர்களின் நாகரிகம் நமக்குத் தெரிந்ததுதான். இவர்களது முன்னோர்கள் இங்கு படை எடுத்து வந்து எத்தகைய நாசங்கள் புரிந்திருக்கிறார்கள், எப்படி நாகரிகத்திற்கு நேர்மாறாக நடந்து கொண்டார்கள், கலை என்றால் எத்தகைய வெறுப்புக் கொண்டிருந்தார்கள் என்பது நமக்குத் தெரியும். ஹம்பி ரூயின்ஸை நான் பார்த்திருக்கிறேன். ஒரு அழகான உருவத்தின் மூக்கு உடைபட்டிருக்கிறது. 'பாகிஸ்தானின் முன்னோர்கள்' வந்து அதை உடைத்து விட்டார்கள். அவர்களுக்கு அழகைப் பார்க்கச் சகிக்காது. இப்படி எல்லாம் பேசுவது பெரிதல்ல. அதில் எனக்கு ஆச்சரியம் இல்லை. இதை நாம் கண்டிக்க வேண்டிய அவசியம் இல்லை. பாகிஸ்தானிடத்தில் அவ்வளவுதான் எதிர் பார்க்கலாம். ஆனால், இதைக் கேட்டுக் கொண்டிருந்தார்களே அதைப் பற்றித்தான் சிந்திக்க வேண்டும். ஒருவராவது எழுந்து ஆட்சேபம் சொல்லவில்லை. ஐக்கிய நாட்டுச் சபையில் இவ்வாறு தவறாகப் பேசுகிறாரே என்று சொல்ல ஆள் இல்லை. எல்லோரும் ஒரே நிலையில் இருக்கவேண்டும் என்று சொல்லவில்லை. இப்போது சிலர் மனம் மாறிக் கொண்டுதான் வருகிறது. இருந்தாலும் ஐக்கிய நாட்டுச் சபையின் ஒரு நிலையை நாம் சிறிது சிந்திக்க வேண்டுமென்றுதான் இதைக் கூறுகிறேன். அவரைக் கண்டித்துப் பேச அந்தச் சமயத்தில் யாரும் எழுந்திருக்கவில்லை. கேட்டுக் கொண்டு தான் இருந்தார்கள். பெரிய பெரிய வல்லரசுகள் எல்லாம் கேட்டுக் கொண்டுதான் இருந்தார்கள். இந்த நிலையில் நாம் சிந்திக்க வேண்டியதெல்லாம், நம் பிரதம மந்திரி அவர்கள் வற்புறுத்துவது போல் நம் பலத்தை நம்பி நாம் மேலும் ஈடுபடுவோம். வெற்றி அடைவதற்குப் பாடுபடுவோம், இந்த வெறியர்களைத் திருப்பி விரட்டுவதில் ஈடுபடுவோம். நிரந்தரமாக இந்த நாட்டைப் பாதுகாக்க ஈடுபடுவோம் என்ற உறுதியைத்தான் நாம் கொள்ள வேண்டியிருக்கிறது. 12.30 p.m.

இந்த மன்றத்தைப் பொறுத்தமட்டில், நாட்டிலே எத்தகைய ஒரு நிலையைக் காண்கிறோமோ, அத்தகைய நிலையைத்தான் காண்கிறோம். மக்களின் பிரதிநிதிகள் என்ற முறையில், நம் மன்றத்திற்கு ஏற்ற முறையில், நாட்டில் எந்த அற்புதமான நிலையைப் பார்க்கிறோமோ, அந்த நிலைதான் இந்த மன்றத்திலும் பிரதிபலிக்கிறது. இந்தச் சபையில் இருப்பது ஒரே சிந்தனை தான், ஒரே குரல்தான், ஒரே உறுதிதான், இந்த நிலையில் நான்

[திரு. எம். பக்தவத்சலம்] [3rd November 1965

மீண்டும் ஒன்று கூற விரும்புகிறேன். இன்று காலை ஒரு பத்திரிகை நிருபர் என்னிடம் பேசிக்கொண்டிருந்தார். 'இங்கு கூட வேறு குரல் ஒன்றிரண்டு ஆங்காங்கே காணப்படுகிறதே, குரல் கேட்கிறதே' என்று கேட்டார்கள். 'அது திருஷ்டி பரிகாரம்' என்று சொன்னேன். அதுமாத்திரம் அல்ல. இங்கிலாந்து நாடு நாட்டுப் பற்றுக்குப் பெயர் பெற்றது. ஜனநாயகத்தைச் சீரிய முறையில் நடத்தி வருவது இங்கிலாந்து தேசம். அது உலக மகா யுத்தத்தில் சிக்கிக் கொண்டிருந்தபோது கூட, இங்கிலாந்து நாட்டிலே கூட ஐந்தாம் படை இருந்தது. அந்த ஐந்தாம் படைக்காரர்கள் யார் என்று சாதாரணமாக ஊகிக்க முடியுமோ அவர்கள் அல்ல. ரொம்பத் திறமைவாய்ந்த போலீஸ்காரர்கள் அங்கு இருக்கிறார்கள். ஸ்காட்லண்ட் யார்ட் போலீஸ் பிரசித்தி வாய்ந்தது; மிலிட்டரி ரகசிய போலீஸும் இருக்கிறது. ஐந்தாம் படையினர் என்று அவர்கள் யாரை நினைத்திருப்பார்களோ, யாரை எதிர் பார்த்திருப்பார்களோ அவர்கள் அல்ல, அவர்கள் எல்லாம் எதிர் பாராத வகையில் மூலை முடுக்கில் ஐந்தாம் படை இருந்தது என்று இங்கிலாந்தில் கண்டவர்கள், கவனித்தவர்கள் சொல்லி நான் கேட்டிருக்கிறேன். ஆக, அப்படி வேறு வகையில் ஒரு குரல் கிளம்புகிறது என்பதை நாம் சிந்திக்க வேண்டும். அதைப்பற்றி நாம் கண்காணிப்பாக இருக்க வேண்டும், ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஆனால் அதைப் பற்றிக் கவலைப் படவேண்டியதில்லை. இது எங்கும் உள்ளதுதான், ஒன்றிரண்டு விதிவிலக்கு உண்டு என்றுதான் கூற விரும்புகிறேன். அப்படித்தான் காலையில் என்னிடம் வந்து என்னைக் கேட்ட பத்திரிகை நிருபருக்கு விடை அளித்தேன். இப்போது பாகிஸ்தானைப் பொறுத்த மட்டில் இந்தச் சண்டை காஷ்மீரை வைத்துத்தான் சண்டை. பாகிஸ்தான் காஷ்மீர் வேண்டுமென்று கேட்கிறார்கள். "காஷ்மீர் இந்தியாவோடு இணைக்கப்பட்டுவிட்டது, அதைப் பிரிக்க முடியாது, அந்தப் பிரச்னையே இல்லை, அதைப்பற்றிப் பேசத் தயாராயில்லை" என்று நம் பிரதம மந்திரி அவர்கள் திட்டவட்டமாக எடுத்துக் கூறி வருகிறார்கள். காஷ்மீரில் இவர்களுக்கு என்ன உரிமை? அங்கு பெரும்பாலும் முஸ்லிம்கள் இருக்கிறார்கள் என்பதுதான். இப்போது பாகிஸ்தானில் பத்து கோடி முஸ்லிம்கள் இருந்தால் இந்தியாவில் ஐந்து கோடிக்கு மேல் முஸ்லிம்கள் இருக்கிறார்கள். அப்படியானால் மற்ற நாடுகளில் முஸ்லிம்கள் இல்லையா? ஈஜிப்ட் போன்ற மற்றநாடுகள் என்னவாயிற்று? இவர்கள் சமய அடிப் படையில் ஒரு ராஜ்யத்தை அமைத்தார்கள். அது நல்லதல்ல. அது நல்லதல்ல என்று நம் தலைவர்கள் உணராமல் இல்லை. ஆனால் நாம் சுதந்திரம் அடைவதற்கு அது ஒரு முட்டுக் கட்டையாக இருந்த ஒரு காரணத்தினால்தான் கடைசியாக நம் தலைவர்கள் பாகிஸ்தான் பிரிவதற்கு ஒப்புக் கொண்டார்கள். இருந்தாலும் அவர்களிடத்தில் நல்லெண்ணம்தான். சமய அடிப்படையில் செய்வது நல்லதல்ல, இருந்தாலும் போகட்டும். 'வெள்ளைக் காரனே வெளியேறு' என்று நாம் சொன்னபோது அவர்களுக்கு வெளியேற மனம் இல்லை என்ற ஒரு நிலையில் இந்தப் பிரச்னையைப் பயன்படுத்திக் கொண்டு வந்தார்கள். அது சுதந்திரம் பெறுவதற்கு ஒரு முட்டுக்கட்டையாக இருந்தது. ஆகவே சரி,

3rd November 1965] *[திரு. எம். பக்தவத்சலம்]*

போகட்டும் என்று அதற்குக் கடைசியில் இணங்கினோம். முதலில் இணங்கவில்லை. முதலில் வித்திட்டவர்கள் வேறு. கடைசியில் நடந்ததை எடுத்து அவர்கள் சொல்கிறார்கள். இது எப்படி வந்தது? சண்டை எல்லாம் மூட்டி விடலாம். பிரச்னையைக் கிளப்பி விடலாம். குளறுபடி செய்து விடலாம். அதற்கு அப்புறம் அதைத் தீர்க்க வேண்டுமென்று தீர்த்தால் அதை நாங்கள் ஆதரித்தோம் என்று அர்த்தமா? நாட்டுப் பிரிவினை செய்வதால் பாதகம் ஏற்படும் என்பதை யாரும் ஒப்புக் கொள்ளாமல் இருக்க முடியாது. பின்னால்தான் ஒப்புக்கொண்டோம். சுதந்திரம் பெற வேண்டும். அதற்கு இது முட்டுக்கட்டையாக இருக்கிறதே என்று அதை ஒப்புக்கொண்டால் அதற்கு நாங்கள்தான் காரணம் என்று சொல்வது சரியான வாதம் அல்ல. எப்படி ஒப்புக்கொண்டோம்? அப்போது வெள்ளைக்காரன் நல்லெண்ணத்தோடு போகவில்லை என்பது இப்போது தெரிகிறது. போக வேண்டிய நிமித்தம் வந்து விட்டது, இனிமேல் இங்கு இருக்கமுடியாது என்று உணர்ந்துதான் போனான். சுதந்திரம் கிடைப்பதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால், அதாவது 1942-ல் காந்தி அடிகள் கூறினார்கள், "வெள்ளையனே வெளியேறு, வெளியே போ, இது உனக்கும் நல்லது நாட்டுக்கும் நல்லது" என்று. அந்த ஐந்து ஆண்டுகளில் என்ன உணர்ந்தான்? எங்களை எல்லாம் சிறைப்படுத்தினான். இருந்தும் வேறு வழியில்லை என்று உணர்ந்தான், நாட்டை விட்டு வெளியேறினான். அவன் நல்லெண்ணத்தோடு வெளியேறவில்லை. குடும்பங்களில் பாகப் பிரிவினை நடக்கும். இவர்களா பிரிந்து போனார்கள், இவர்களா பிரிந்து விட்டார்கள் என்று கூறும் விதத்தில் சிலர் இருப்பார்கள். சிலர் மேலும் மேலும் தொந்தரவு வரவேண்டும் என்று கருதி பாகப் பிரிவினையில் கெட்டுப் போவதைப் பார்த்துக் கொடுப்பார்கள். கடனை எல்லாம் தள்ளிவிடுவார்கள். அதேபோல் வெள்ளைக்காரன் நல்லெண்ணத்தோடு நடக்கவில்லை, மத்தியஸ்தமாகப் போகாமல் இருந்தான். அப்போது 562 சமஸ்தானங்கள் இருந்தன. யார் எங்கு வேண்டுமானாலும் சேரட்டும் என்று இருந்தார்கள். காஷ்மீர் பாகிஸ்தானோடு சேர வேண்டும் என்ற எண்ணம்தான் அவர்களுக்கு இருந்தது. தெரிந்துதான் சொல்கிறேன். அதற்கு மேல் விவரம் சொல்ல முடியாது. 'நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள்' என்று சொல்லிப்போய் விட்டான். ஆனால், நம் பேரதிருஷ்டம் சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்கள் முனைந்து பல சமஸ்தானங்களைக் கூட்டி இணைத்தார்கள். இவைகள் எப்படிப்பட்ட சமஸ்தானங்கள்? இந்த சமஸ்தானங்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்கு அடிமைப்பட்டுக் கிடந்த சமஸ்தானங்கள். சாதாரணமாக ஒரு-இரண்டு ஏக்கர் சொத்துள்ளவன் இறந்து விட்டால் அவன் வாரிசு அந்தச் சொத்தைப் பெற்றுக் கொள்வான். ஆனால், ஒரு மஹாராஜா இறந்துவிட்டால் அந்த உரிமை அவர்கள் வாரிசுக்கு இல்லை அப்போது. ஒரு மஹாராஜா இறந்து விட்டால் பிரிட்டிஷ் ஆட்சியின் சம்மதத்தின் பேரில்தான் அதற்கு வாரிசு வருவார்கள். அவர்கள் சொல்கிறபடி வருவதில்லை. சட்டப்படி வாரிசு வருவதில்லை. அந்நிலையில் இருந்தன சமஸ்தானங்கள். அந்த சமஸ்தானங்கள் அவர்கள் இஷ்டம் போல் செய்யட்டும்

[திரு. எம். பக்தவத்சலம்] [3rd November 1965

என்று சொல்லி வெள்ளைக்காரன் போய் விட்டான். பின்னர் பட்டேல் அவர்கள் முனைந்தார்கள். ஒரு சில ராஜ்யங்கள் பாகிஸ்தானேடு சேர்ந்தன. பெருவாரியான ராஜ்யங்கள் இந்தியாவோடு சேர்ந்தன. ராஜ்யங்கள் எல்லாம் எப்படிச் சேர்ந்தன? என்ன ஏற்பாடு? அந்த மன்னர்கள் ஒப்புக் கொள்ளவேண்டும், கையெழுத்துப் போட வேண்டும். அதே வகையில்தான் காஷ்மீரும் சேர்ந்தது. 'வேண்டுமானல் சேருங்கள்' என்றுதான் சொன்னூர்கள் நேரு அவர்கள். அவர்கள் நம்முடன் சேர்ந்தார்கள், அது போதாது என்றுல், காஷ்மீரில் மூன்று தடவை பொதுத் தேர்தல்கள் நடந்தன. அரசாங்கம் நடைபெறுகிறது. இந்திய அரசாங்கத்தை ஆதரிக்கும் வகையில்தான் மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பினுர்கள். இத்தனைக்கும் பிறகு பாகிஸ்தான் ஊடுருவல்காரர்களை அனுப்பி ஆகஸ்ட் 9-ம் தேதி கலகம் உண்டு பண்ணி, கலகக்கொடி நாட்டலாம் என்று அவர்கள் திட்டம் இட்டனர். அதிலும் படுதோல்வி அடைந்தனர். அப்போதும் காஷ்மீர மக்கள் இதை ஆதரிக்க வில்லை என்று எடுத்துக் காட்டிவிட்டார்கள். இப்போது காஷ்மீரில் வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்று புதிய சித்தாந்தத்தைக் கொண்டு வருகிருர்கள். இது என்ன சித்தாந்தம்? இந்த நாட்டிலே சிலர் சொல்கிருர்கள், காஷ்மீரில் வாக்கு எடுக்க வேண்டுமென்று. பாகிஸ்தானேடு சமாதானம் பண்ணிக் கொள்ள வேண்டுமென்றும். நம் பிரதம மந்திரி அவர்கள் சொல்கிருர்கள், 'நம் இந்திய அரசாங்கத்தின் கொள்கை உலகிற்கு நன்ருகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நாம் சமாதானத்தில் அக்கறை கொண்டவர்கள், போர் வெறி உள்ளவர்கள் அல்ல, சமாதானத்தைத்தான் நாடுகிறேம், ஆனல் சுயமரியாதையுடன் சமாதானம், இந்தியாவின் சுதந்திரத்திற்கும் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் குந்தகம் இல்லாத சமாதானத்தைத்தான் விரும்புகிறேம்' என்று. அதற்காக விட்டுக் கொடுக்கும் சமாதானம் அல்ல. அவர்கள் சொல்லுகின்ற கருத்தைப் பார்த்தால் பாகிஸ்தானேடு விட்டுக் கொடுத்து சமாதானம் செய்து கொள்ள வேண்டும் என்று தானே அர்த்தம்? இதை ஒரு பெரியவர் சொல்லுகிருர் என்பதற்காக நாம் ஒப்புக் கொள்ள முடியுமா? அவர்கள் எப்பேர்ப்பட்ட பெரியவராக இருந்தாலும் நமக்குக் கவலையில்லை. இவ்விதம் இவர்கள் சொல்லுவதை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. அரசியலைப் பொறுத்தவரையில் ஏராளமாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அகங்காரம் எனக்கிருந்தது. ஆனல் இப்படிச் சொல்வதை எதில் சேர்த்துக்கொள்வது என்பது எனக்குத் தெரியவில்லை. நான்கு பேர்கள் வருகிருர்கள், கேட்கிருர்கள், பெரியவரல்லவா சொல்லுகிருர். இதில் ஏதாவது உண்மையிராதா என்று கேட்கிருர்கள். அவர்கள் கட்சியிலுள்ளவர்கள் வருகிருர்கள், அவர்களும் சொல்லுகிருர்கள், நாங்கள் நாட்டுப் பாதுகாப்புக்கான தீர்மானம் போட்டிருக்கிறேம் என்று சொல்லுகிருர்கள். அப்படியானல் உங்கள் கட்சியிலுள்ள பெரியவர் இப்படிச் சொல்லுகிருரே என்று கேட்டால், எங்களுக்கு அந்த விதமாக அபிப்பிராயம் ஒன்றுமில்லை என்று சொல்லுகிருர்கள். அப்படியானல் நீங்கள் வாக்கெடுப்பை ஆதரிக்கவில்லை என்று ஒரு தீர்மானம் போட்டு

3rd November 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

விடுங்களேன், பெரியவராக இருந்து ஒரு கருத்தைச் சொன்னால் அது அவருடைய சொந்தக் கருத்தாக இருக்கட்டுமே என்று கேட்டால், அவர் பெரியவராயிற்றே, அவரை எப்படி விட்டுக்கொடுப்பது என்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட அரசியலை நான் எவ்வாறு புரிந்து கொள்வது என்பது தான் எனக்குத் தெரியவில்லை. கனம் அங்கத்தினர்கள் யாருக்காவது புரிந்தால் சொல்லட்டும். அவர் சொல்வதை எங்கள் கட்சி ஒத்துக்கொள்ளவில்லை என்கிறார்கள், நாட்டுப் பாதுகாப்பிற் கான தீர்மானம் போட்டிருக்கிறோம் என்கிறார்கள், அப்படி யென்றால், உங்கள் கட்சியிலுள்ள பெரியவர் சொல்லுகின்ற கருத்தை உங்கள் கட்சி ஒத்துக் கொள்ளவில்லை என்று ஒரு தீர்மானம் போடுங்களேன் என்று கேட்டால் அவரை மீறி எப்படித் தீர்மானம் போடுவது என்று சொல்கிறார்கள். இதை யெல்லாம் விட்டுவிட்டு, பாகிஸ்தானோடு சமாதானம் செய்து கொண்டு, அதிலும் விட்டுக்கொடுத்து சமாதானம் செய்துவிட்டு, சைனாவை எதிர்க்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இன்னும் சில தீவிர வாதிகள் இருக்கிறார்கள். அவர்கள் சொல்வது சைனாவோடு சமாதானம் செய்யலாமே என்பது. இவ்விதம் சொல்பவர்கள் சைனாவின் தோழர்கள். அவர்கள் கூடக் கேட்கிறார்கள், 'இன்னும் ஏன் எங்களைச் சிறையில் வைத்திருக்கிறீர்கள் ?' என்று அவர்களே பரோலில் வந்திருந்தபோது கேட்டார்கள். 'சைனா அக்கிரமமாக ஆக்கிரமிப்புச் செய்திருக்கிறது, அது மட்டுமல்ல, இந்தியாவோடு போரிட்டுக்கொண்டிருக்கிற பாகிஸ்தானோடு சேர்ந்து கொண்டிருக் கிறது, இந்த நிலைமையில் நீங்கள் சைனாவோடு சமாதானம் செய்துகொள்ள வேண்டும் என்று சொல்லுகிறீர்களே ? இந்த நிலையில் எப்படிச் சைனாவின் தோழர்களாக இருப்பவர்களை வெளி யில் விடுவது?' என்று கேட்டால், 'வெளியில் விட்டுப் பாருங்க ளேன்' என்று சொல்கிறார்கள். நாட்டின் நெருக்கடி காலத்தில், அதிலும் ஆபத்தான காலத்தில் இம்மாதிரிப்பட்ட நிலையை நாம் மிகவும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே பாகிஸ்தானோடு சமாதானம் செய்யவேண்டும், சைனாவோடு சமாதானம் செய்யவேண்டும் என்றெல்லாம் ஒரு சாரார் சொல்லி வருவதில் ஏதோ உண்மையிருக்குமோ என்று யாரும் கருத வேண்டிய தேவையில்லை. மக்கள் ஒருக்காலும் அதற்கு ஆதரவு கொடுக்கமாட்டார்கள். இதெல்லாம் நான் முன்பு சொன்னது போல் திருஷ்டி பரிகாரமாகத்தான் அமைந்திருக்கிறது.

இது போக, அரசியலில் வைதிகமும் இருக்கிறது. சமயத்தில் வைதீகம் இருப்பது போல் அரசியலிலும் வைதிகம் இருக்கிறது. 17-வது நூற்றாண்டுக் காலத்தில் இங்கிலாந்தில் சமயத்திலும் சரி, அரசியலிலும் சரி அதி தீவிர வைதீகம் (ப்யூரிட்டனிஸம்) இருந்தது. அப்போது 'ஸ்டாயிக்ஸ்' என்றிருந்தவர்களைப் பற்றி ஒரு சரித்திர ஆசிரியர் சொன்னார். 'They will be scared of a crab but will swallow a camel. நண்டைப் பார்த்தால் பயப்படுவார் கள். ஆனால் ஒட்டகையைக் கண்டால் விழுங்கி விடுவார்கள். இவர்கள் எல்லாம் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள், பெரிய வைதிகர்கள். இப்பேர்ப்பட்ட சிலர் சொல்வது 'உங்களுக்

[திரு. எம். பக்தவத்சலம்] [3rd November 1965

கெல்லாம் தெரியாது, நாங்கள் எல்லாவற்றிற்கும் மேற்பட்டவர்கள்' என்று சொல்வார்கள். அப்படியிருந்தால் சாதாரணமாக ஜனங்கள் சொல்லாததை இவர்கள் சொல்லவேண்டும். இவர்கள் சொல்வது என்ன? காஷ்மீர்ப் பிரச்னை இன்னும் தீரவில்லை. இந்தப் பிரச்னை தீர்ந்துவிட்டது என்று சொல்லிவிட முடியாது. இப்படி இவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் எப்பேர்ப்பட்ட வைதிகர்களாக இருந்தாலும் சரி, நமக்குக் கவலையில்லை. இதற்காக நான் வைதீகர்களைக் கண்டிக்கிறேன் என்று பொருள் அல்ல. இந்த நாட்டின் பாதுகாப்புக்கு விரோதமாக யார் ஈடுபட்டாலும் சரி, இந்த நாட்டுக்குத் துரோகம் செய்கின்ற முறையில் யார் ஈடுபட்டாலும் சரி, அவர்களை நாம் சகித்துக் கொண்டிருக்க முடியாது. இந்த நாட்டினுடைய பண்பாடு அது. பெற்ற தந்தை என்பதற்காகப் பிரகலாதன் தன் கொள்கையை நிலைநிறுத்துவதை விட்டுக் கொடுக்கவில்லை. இம்மாதிரிப்பட்ட நேரங்களில் நாம் மிகவும் கண்காணிப்பாக இருக்க வேண்டியிருக்கிறது. ஏதோ பெரியவர்கள் சொல்லுகிறார்களே என்று மக்கள் எந்த விதமான தாட்சண்யமும் கொள்ளக் கூடாது, அதற்கு எந்த விதமான இடமும் கொடுக்கக் கூடாது என்பதற்காகத்தான் இதையெல்லாம் நான் சொன்னேன். நாட்டில் எங்கு பார்த்தாலும் பாதுகாப்பு எண்ணம் வளர்ந்து கொண்டிருக்கிறது. இதைப் பார்த்துவிட்டு, 'அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிப்பது' போல் இவர்கள் பேசுவது இருக்கிறது என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது.

எங்கு பார்த்தாலும் மக்கள் ஒரே குரலோடு இருக்கிறார்கள். அங்கு ஒரு பக்கத்தில் நமது பெருமைக்குரிய வீரர்கள் போரிடுகிறார்கள். இன்னும் போராடுவதற்கு எத்தனையோ பேர்கள் தயாராக இருக்கிறார்கள். நாம் அவர்களுக்குப் பக்கபலமாக இருக்க வேண்டும். பக்கபலம் என்றால் போர்முனை மட்டும் நமக்கு சாதகமாக இருந்தால் போதாது. மகா பாரதக் கதையை நாம் பலர் கேட்டிருக்கிறோம். பதினெட்டு நாட்கள் சண்டை நடந்தது. பல நாடுகளிலிருந்தும் வண்டி வண்டியாகச் சாப்பாடு கொண்டு வந்து கொடுத்தார்கள் என்று நாம் கதை கேட்டிருக்கிறோம். ஆகவே, நமக்குப் போர்முனை மட்டும் போதாது. அதற்கெல்லாம் மேலாக நமக்கென்று ஒரு கடமை இருக்கிறது. அதைத்தான் நமது பிரதம மந்திரி அவர்கள் வற்புறுத்தி வருகிறார்கள். இதைத் தான் நமது தீர்மானத்திலும் குறிப்பிட்டிருக்கிறோம். எவ்வளவோ உறுதியோடு நின்று நம் வீரர்கள் போரிட்டு வருகிறார்கள். நாம் பெற்றிருக்கின்ற வளர்ச்சி, நாம் பெற்றிருக்கின்ற வசதி இவைகளை எல்லாம் எண்ணி, நம்மிடையே இருக்கின்ற கருத்து வேற்றுமைகளை எல்லாம் மறந்து நாட்டின் பாதுகாப்பு ஒன்றை மட்டும் நாம் நினைவில் கொண்டிருக்கிறோம். நாட்டின் பாதுகாப்பில் மக்கள் அனைவரும் ஆரவாரத்தோடு ஈடுபட்டிருக்கிறார்கள். பெண்மணிகள் மாணவிகள், மாணவர்கள், சிறு குழந்தைகள் இவர்கள் எல்லோரும் ஈடுபட்டிருக்கிறார்கள். நேற்று ஓர் ஊரில்—கோவை மாவட்டத்தில்—நான் சென்றிருந்த போது இரவு 8 மணிக்கு மேல் இருக்கும்,

3rd November 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

அந்த நேரத்தில் கூட, ஒரு சிறிய குழந்தை இரண்டு அரை ரூபாய் களை என்னிடம் தந்து இதை வைத்துக்கொள்ளுங்கள் என்று கொடுத்தது. அந்தக் குழந்தைக்குக்கூட அத்தனை ஆர்வம் இருக் கிறது. பாதுகாப்பு நிதிக்காகக் காணிக்கை செலுத்தியவர்களைப் பார்த்தால்—இதற்காக நான் பெரியவர்களைக் குறை சொல்ல வில்லை—ஆனல் ஏழை மக்கள், தொழிலாளர்கள், ஆசிரியர்கள், ஆசிரியைகள், மாணவர்கள், மாணவிகள், சர்க்கார் அலுவலகத்தில் பணிபுரிகின்றவர்கள், பிற ஸ்தாபனங்களில் பணிபுரிகிறவர்கள், கிராமங்களிலுள்ள விவசாயிகள் இவர்கள்தான் தயங்காமல் மிக உற்சாகத்தோடு தங்களால் இயன்றதைத் தருகிருர்கள். இதைக் கண்டு நாம் பெருமிதம் அடைகிருேம். தியாக உணர்ச்சி கொள்ளுகிருேம்.

மேலும், நாம் எவ்வாறு கவனம் செலுத்துவது என்பதில் ஈடு பட்டிருக்கிருேம். எந்த நாட்டினுடைய உதவியையும் நாம் எதிர் பார்க்கக் கூடாது என்ற நிலைமையில் இருக்கிருேம். மற்ற நாடு களைப் பொறுத்த வரையில், உணவுத் துறையிலும் சரி, தொழில் துறையிலும் சரி, விவசாயத் துறையிலும் சரி, போர்த் தளவாடங் கள் தருவதிலும் சரி, அவர்கள் தாங்களாகவே முன் வந்து உதவி அளித்தால் அளிக்கட்டும். ஆனல் நாம் அவர்களை எதிர்பார்த்துத் தான் இருக்க வேண்டும் என்ற நிலைமையைப் போக்க வேண்டியவர் களாக இருக்கிருேம். அந்த முறையில்தான் இன்றைய தினம் போர் நடக்கிறது. இன்று நடக்கிற போர் ஏகாதிபத்தியத்திற்கும், ஜனநாயகத்திற்கும் நடக்கின்ற போர். இது ஆசியக் கண்டத்திற்கு மட்டுமல்ல, உலகத்துக்கே நடக்கின்ற போர் என்றுதான் கொள்ள வேண்டும். என்னைச் சந்தித்த ஒரு நிருபர், "நம்முடைய கூட்டு சேராக் கொள்கையினல் தானே இந்த நிலைமை ஏற்பட்டது" என்று கேட்டார். நான், "கூட்டுச் சேராக் கொள்கையை வைத்துக் கொள்ளாமல் இருந்தால் இதற்கு முன்பாகவே உலக யுத்தம் ஏற்பட்டிருக்கும், இதுவரை உலக யுத்தம் வராமல் இருப்பதற்குக் காரணம் நம்முடைய ஒப்பற்ற தலைவர் நேருஜி அவர்களுடைய கூட்டுச் சேராக் கொள்கைதான். ஆகவே, கூட்டுச் சேராக் கொள்கையை வைத்துக் கொண்டிருந்ததினல் எந்த விதமான தவறும் ஏற்பட்டுவிடவில்லை. அந்தக் கொள்கை தவருன கொள்கை என்பதை நாங்கள் ஒப்புக்கொள்ள முடியாது, ஒப்புக்கொள்ளவும் மாட்டோம். இன்றைய தினம் அவர்களுடைய மனம் ஏதோ கெட்டுப்போயிருக்கிறது அவ்வளவுதான்" என்று விடையளித் தேன். இன்றைக்கு நமக்கு கோதுமை தரவில்லை என்ருல் அதற் காக நாம் கவலைப்படப்போவதில்லை. அவர்கள் சொல்வதற்கு இணங்கக்கூடிய நாடுகளுக்குத்தான் கொடுப்போம் என்ருல் கொடுக்கட்டும், வேறு நாடுகளுக்கு வேண்டுமென்ருல் விற்கட்டும். நாமும் நம்முடைய நாட்டில் விவசாய உற்பத்தியை அதிகரித்தே தீருவோம், மற்ற நாடுகளுக்கும் நம்முடைய நாட்டிலிருந்து உணவு கொடுக்கப் போகிருேம். இன்றைய தினம் உலகத்தில் பாதி நாடு களுக்கு மேல் அன்னிய நாட்டைத்தான் உணவுக்காக எதிர்பார்த்து இருக்கிருர்கள். நாமும் நிச்சயமாக உணவைப் பெருக்கப் போகி ருேம், சீக்கிரமாகவே மற்ற நாடுகளுக்கும் கொடுக்கப் போகிருேம்.

[திரு. எம். பக்தவத்சலம்] [3rd November 1965

அந்த லட்சியத்தோடு நாம் பாடுபட வேண்டியவர்களாக இருக்கிறோம். உணவு வேண்டும் என்பதற்காக நாம் பிறருக்கு அடங்கியவர்களாக ஒருக்காலும் இருக்க முடியாது. அவர்கள் வேண்டுமென்று கொடுத்தால் கொடுக்கட்டும், கொடுக்க மாட்டோம் என்றால் அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. அவர்கள் வேண்டுமென்றால், மிச்சமிருந்தால் கடலில் போட்டுக் கொள்ளட்டும். நாம் ஏதோ உணவுக்காகப் பிச்சை கேட்பது போல் கேட்போம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். செப்டம்பர் மாதத்திற்குப் பின்னால் நடந்த நிகழ்ச்சிகளைப் பார்த்த பின்னால் யாரும் இதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அகிம்சையைப்பற்றி தேசத் தந்தை காந்தியடிகள் என்ன சொன்னார்கள்? போர் புரியும் வீரர்களுக்கும், தியாக உணர்ச்சி உள்ளவர்களுக்கும் அகிம்சை உள்ளம் இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். செப்டம்பர் மாதத்தில் நடந்த சண்டையைப் பார்த்த பிறகு உலக நாடுகள் இந்தியாவைப்பற்றிக் கொஞ்சம் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். நாம் ஏன் அவர்களைக் 'கொடுங்கள்' என்று கேட்கவேண்டும்? சொந்த நலனுக்காகக் கொடுத்தால் கொடுக்கட்டும். ஆனால், சில நாடுகளுக்கு நம்மிடத்தில் நல்ல எண்ணம் இருக்கிறது. தொடர்ந்து சில நாடுகளுக்கு நல்ல எண்ணம் இல்லாமல் இல்லை. நாடுகளை ஒவ்வொன்றாக நான் இப்போது எடுத்துக் கூறப் போவதில்லை, எடுத்துக் கூறவும் விரும்பவில்லை. டில்லிக்குப் போயிருந்தபோது இருக்கின்ற நிலைமையை அறிந்த போது, பெரியவர்களோடு, பாதுகாப்பு அமைச்சரோடு, மற்றவர்களோடு பேசிக்கொண்டிருந்தபோது என்னுடைய எண்ணம் ஊர்ஜிதப்பட்டது. சில நாடுகள் நல்லெண்ணத்தோடு இருக்கிறார்கள்—அவர்களைப் பாராட்டுகிறோம். அவர்கள் நல்லெண்ணத்தோடு கொடுக்கும் உதவிகளை ஏற்றுக்கொள்வோம். நாம் பிறரை ஏன் எதிர்பார்க்க வேண்டும்? பிறரை எதிர்பார்ப்பதால் பலஹீனம்தான் ஏற்படும். பிறரை எதிர்பார்க்காமல் இருப்பதாலேயே வெற்றி அடைவோம் என்று நமக்கு அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. அதே வகையிலே மேலும் பாதுகாப்பைப் பலப்படுத்த, கூடிய வரையில் நம் பலத்தையே நாட வேண்டியிருக்கிறது. அதற்குத் தியாகம் வேண்டும். பாதுகாப்பையொட்டி சாதாரணமாகப் பல கோடி ரூபாய்கள் செலவு ஆகின்றது. ஒரு நாளுக்கு சில கோடி ரூபாய்கள் செலவு ஆகின்றது. இது அதிகம் என்று யாரும் கூற மாட்டார்கள். என்ன வேண்டுமானாலும் செலவு செய்து ஆகவேண்டும். முதலிடம் அதற்குத்தான். பாதுகாப்புத் தேவைகளுக்கு ஏற்ப ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்குவதில், டிஃபென்ஸ்-ஓரியெண்டெட் என்று சொல்லுகிறோம். அதில் விவசாயத்திற்கு முதல் இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. விவசாயத்தைப் பெருக்குவதில் பெரிதும் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. அகிலெல்லாம் எந்த வகையிலே நாம் மேலும் மக்களை விவசாயத்திலே ஊக்குவிப்பது, எப்படி நம் பலத்தையே நம்பி உற்பத்தியைப் பெருக்குவது என்பதில் கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். மற்றொன்று. உணவுப் பற்றாக்குறை என்றால் தமிழ் நாட்டில் பற்றாக்குறை என்று நான் சொல்ல மாட்டேன். மொத்தத்தில் நாட்டிலே கொஞ்சம் பற்றாக்குறை இருக்கிறது. அமெரிக்க

3rd November 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

கோதுமை வந்தால்தான் முடியுமா? அமெரிக்க அரிசிதான் வேண்டுமா? 1943-ம் ஆண்டில் பிரிட்டிஷார் ஆட்சிக் காலத்தில் கல்கத்தாவில் நடைபெற்றது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். போதிய உணவு கிடைக்காததாலும், வியாபாரிகள் உணவுப் பொருள்களைப் பதுக்கி விட்ட காரணத்தினுலும் லட்சக் கணக்கான மக்கள் மடிந்தார்கள். ஆனுல், இன்றைக்கு ஒருவர்கூட மடிய விட மாட்டோம், நிலைமையைச் சமாளித்து விடுவோம். நாம் எவ்வாறு இந்த நிலைமையைச் சமாளிப்பது, பிறரை எதிர்பாராமல் எப்படிச் சமாளிப்பது என்று பார்க்க வேண்டும். எப்படிச் சமாளிப்பது என்று பார்க்கும்போது, யுத்தம் ஒரு பக்கத்தில் இருக்கிறது; திட்டங்களை நாம் நிறைவேற்ற வேண்டும்; அதே சமயத்தில் அற்புத உற்சாகத்தோடு, தியாக உணர்ச்சியோடு வேண்டியதை அள்ளிக்கொடுக்கத் தயாராக இருக்கிற மக்களுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டும். அப்படிப் பார்க்கும்போது முதல் கவனம் பாதுகாப்பு. மத்திய அரசாங்கம் அதில் மிகவும் கவனம் செலுத்தி வருகிறது அதற்கு வேண்டிய பணம் ஒதுக்கி வருகிறது. நமக்கும் பாதுகாப்பை யொட்டிப் பணம் செலவு ஆகிறது. இன்றைக்குப் பிற்பகலில் குறிப்பிடுகிறேன், எந்தெந்த வகையில், எந்த அளவுக்கு, இருக்கும் நெருக்கடியைச் சமாளிக்க, வருவாயைப் பெருக்குவது என்று எல்லோரும் கலந்து கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது.

மற்றொன்று, மிகவும் வற்புறுத்தப்பட்டு வருவது, இந்த நிலையில் சிக்கனத்தைக் கையாளவேண்டும், ஆடம்பரத்தை விடவேண்டும் என்பது ஆகும். ஏன்? ஆடம்பரத்தை விட்டு விட்டார்கள்; விட வேண்டும் என்று கூறுவது தவறுதல் ஆகும். வீரர்கள் படுகிற பாட்டையும், வீரர்களுடைய குடும்பங்கள் எவ்வாறு சினத்தில் ஆழ்ந்திருக்கிறுர்கள் என்பதையும் காணும்போது எப்படி ஆடம்பரத்தில் மனம் போகும்? உட்கொள்ளுகிற பண்டங்கள், உபயோகிக்கும் பண்டங்கள் ஆகியவைகளின் அளவைக் குறைக்க வேண்டும். எவ்வளவு குறைத்துக் கொண்டாலும், அவ்வளவும் நாட்டின் பாதுகாப்புக்குப் பயன்படும் என்று நமது பிரதமர் குறிப்பிட்டிருக்கிறுர்கள். சமீபத்திலே நான் கண்டேன், மற்ற கனம் உறுப்பினர்களும் கண்டிருப்பார்கள். சமீபத்திலே வந்த தீபாவளியின் போது ஆண்டு தோறும் இருப்பது போல இல்லை. கையிலே காசு இல்லாமல் இல்லை; ஆனுல், வாங்க மனம் இல்லை. இந்த நிலையை மக்கள் கடைப்பிடிக்கிறுர்கள். நம் மனத்தின் உள்ளே அந்த உணர்ச்சி ஏற்படவேண்டும்; உள்ளத்திலே அது உருவாக வேண்டும், அதிலிருந்து உறுதி ஏற்படவேண்டும். அந்த வகையில் தான் நமது பாரதப் பிரதமர் அவர்கள், 'வாரத்தில் ஒரு வேளை உணவை விடுங்கள்' என்று சொன்னுர்கள். அது ஒன்றும் பிரமாதம் இல்லை. அவர்கள் விவரத்தைக் கூறுவதற்கு முன்பு நான் 'வாரத்தில் ஒரு நாள் உணவை விடுங்கள்' என்று சொல்லுவார் என்று எதிர்பார்த்தேன். ஏன், எத்தனையோ பேர்கள் ஏகாதசி போன்ற நாட்களில் ஒன்றுமே உட்கொள்ளாமல் விரதம் இருக்கவில்லையா? கிருஸ்தவர்களும் அந்த மாதிரி இருக்கிறுர்கள்; முகம்மதியர்கள் 40 நாட்கள் இருக்கிறுர்கள்,

ஏதோ கொஞ்சம் சாப்பிட்டு விட்டு. நமது பிரதமர் அவர்களுக்கு நம்மிடத்தில் கொஞ்சம் தாட்சணியம். நமக்குத் தொல்லை கொடுக்கக் கூடாது என்று, நமது பலவீனத்தை உணர்ந்து திங்கட்கிழமை மாலையிலே உணவு வேண்டாமென்று சொன்னார்கள். அது ஒன்றும் பிரமாதம் அல்ல, அதே மாதிரி நானும் கேட்டுக்கொண்டிருக்கிறேன். மன்ற உறுப்பினர்களும் இதிலே பரிபூர்ணமாக ஒத்துழைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். நேற்று முன் தினமே எல்லோரும் தொடங்கிவிட்டார்கள் என்று நினைக்கிறேன். ஹாஸ்டல்கள், ஹோட்டல்கள் எல்லாவற்றிலும் திங்கட்கிழமை மாலை உணவை திருத்திவிட வேண்டும். வீட்டிலும் சமைக்க வேண்டாம். குழந்தைகளுக்கும், வியாதியஸ்தர்களுக்கும் மட்டும் கொடுத்து விட்டால் போதும். இதெல்லாம் ஒரு ஜெஸ்சர்தான். 'திங்கட் கிழமை சாப்பிடுவதில்லை, ஆனால் மற்றதெல்லாம் செய்கிறேன்' என்று சொன்னால் அது சரியல்ல. வீரர்களுடைய குடும்பங்களுக்கு உதவி செய்வதற்காகக் கொடுக்கிறோம். நான் பஞ்சாப் முதல் அமைச்சரோடு பேசிக்கொண்டிருந்தேன். அவர்கள் கூறினார்கள், 'அமிர்தசரஸ் போன்ற பஞ்சாப் மாநிலத்திலுள்ள நகரங்களின் மீது வெறித்தனமான குண்டு வீச்சினால் பல பேர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள், அவர்களுக்கெல்லாம் உதவி தேவை' என்று சொன்னார்கள். உதவி அனுப்புகிறோம் என்று சொல்லியிருக்கிறேன். எல்லாவற்றையும் விட முக்கியமானது, இன்றைக்கு நான் கூற விரும்புவது, பாதுகாப்புக்குக் காணிக்கையாக மக்கள் அள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சௌகரியப்படுகிறவர்கள் அவ்வளவு கொடுக்கவில்லை, மற்றவர்கள் கொடுக்கிறார்கள். அவர் களும் பின் தங்க மாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். ஆனால் மனது அதிகமாக வருவது என்பதில், இல்லாதவர்களுக்குத்தான் மனது அதிகமாக வரும். அது எங்கும் உள்ளது. வறட்சி மிகுந்த இடத்தில்தான் உற்சாகத்தைக் காண்கிறோம்; தியாக உணர்ச்சி யைக் காண்கிறோம். சௌகரியப்படுகிறவர்கள் கூட கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் வேண்டிய அளவுக்கு இன்னும் மனம் வரவில்லை.

இன்னும் முக்கியமானது, நமது பிரதமர் அவர்கள் கடன் பத்திரம் வழங்கி கடன் உதவ வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். வட்டி கொடுக்கிறோம், கணக்குப்பற்றி கவலைப் படாதீர்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். முன்பெல்லாம் எங்கோ நடந்த யுத்தத் திற்கு நன்கொடை, கடன் எல்லாம் கொடுத்தோம். அதிகாரிகள் கேட்கிறார்கள் என்று கொடுத்தோம். இப்போது நாட்டைப் பாதுகாக்க நமது பிரதமர் கேட்டிருக்கிறார்கள். இதற்கு மக்கள் தயங்காமல் அளிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. அதை விட முக்கியமானது என்று வற்புறுத்துவது, பிரதமர் அவர்களிடம் நான் பேசிக் கொண்டிருந்தபோது அவர்களும் விரும்புவது, தங்கப் பத்திரத்தைப்பற்றித்தான். தங்கப் பத்திரம் வழங்கு கிறோம், தங்கம் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். இப்போது விவசாய உற்பத்தியைப் பெருக்க சில யந்திரங்களுக்கு அன்னிய நாட்டை எதிர்பார்க்கவேண்டியிருக்கிறது. நேற்று முன் தினம்

3rd November 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

மத்திய உணவு அமைச்சர் அவர்களோடு பேசிக்கொண்டிருந்தேன். விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு டீப் ட்யூப் வெல்ஸ் வேண்டுமென்று சொல்லுகிறோம். அதற்கான கருவிகளை அன்னிய நாட்டிலிருந்து வரவழைக்க வேண்டியிருக்கிறது. அதோடு நமக்கு யுத்த தளவாடங்கள் வேண்டியிருக்கின்றன. இன்னும் இரசாயன உரம் வேண்டும். இப்போது நமக்குக் கிடைக்கக் கூடிய உரம் போதாது, இன்னும் அதிகமாக வேண்டும். அதுவும் அன்னிய நாட்டிலிருந்து வரவேண்டியிருக்கிறது. இதற்கெல்லாம் அன்னிய செலாவணி தேவைப்படுகிறது. நமது ஆயுத தளவாடங்களைப் பெருக்கிக்கொள்ள, உணவு நெருக்கடியைச் சமாளிக்க பெருமளவிலே முக்கியமாக விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு, தொழில் வளர்ச்சியில் ஈடுபட்டு தொழில்களைப் பெருக்குவதற்கு, அதுவும் பாதுகாப்புக்குத் தேவையான தொழில்களைப் பெருக்குவதற்கு, எல்லாவற்றுக்கும் அன்னியச் செலாவணி தேவையாக இருக்கிறது. அதையொட்டித்தான் தங்கப் பத்திரம் வழங்கப்படுகிறது. 'நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்' என்று அன்றைக்கு பாரதியார் சொன்னார். 'தாரீர்' என்று இன்று சொல்லவில்லை; 'தாருங்கள், திருப்பிக் கொடுத்து விடுகிறோம்' என்றுதான் கேட்கிறார்கள். பொற்குவை தாருங்கள், 15 ஆண்டுகளில் திருப்பிக் கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். வட்டி கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். நகையாக இருந்தால் கூட, தங்கத்தைக் கொடுத்தால் அதே மாற்றுத் தங்கமாக—தங்கக் கட்டுப்பாடு இருக்கிறது என்று கவலைப்பட வேண்டியதில்லை— திருப்பிக் கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். மேலும், நான் இதை என் பொறுப்பில் சொல்லுகிறேன், தங்கத்தைக் கொடுக்கிறவர்களுக்கு—நான் பொறுப்பு—ஒரு தொல்லையும் வராது; இன்றைக்குக் கொடுக்கிறவர்களுக்கு ஒன்றும் வராது. பல பேர்கள் கேட்கிறார்கள். இன்றைக்கு நானாக ரிசர்வ் பாங்க் பிரதிநிதிகளைப் பார்த்துப் பேசப் போகிறேன். நகை கொடுத்தால் கூலி கொடுக்கிறார்கள்; வட்டி கொடுக்கிறார்கள்; 15 ஆண்டுகளில் திருப்பிக் கொடுக்கிறார்கள். இதைவிட பந்தோபஸ்து என்ன இருக்கிறது? எத்தனையோ பேர்கள் வைத்திருக்கிறார்கள். யாராவது நம் வீட்டிலேயிருந்து திருடிக் கொண்டு போகிறார்கள் என்றால் என்ன செய்வது? சாதாரணமாக சிறு துளி பெருவெள்ளம் என்று சொல்வது வழக்கம். அதிகம் தங்கம் இல்லை, எங்கே இருக்கிறது என்று கேட்கலாம். இருக்கிற தங்கத்தைக் கொடுப்போம். பெண்மணிகள் தான் முக்கியமாக இதில் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்காக பெண்மணிகள்தான் பொறுப்பு, நமக்கு இல்லை என்று இருந்து விடக்கூடாது. இரண்டு பேர்களும் ஒத்துழைத்தால்தான் நாம் நல்ல வகையிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும். அதிலும் கனம் உறுப்பினர்கள் இதிலே மிகுந்த அக்கறை செலுத்துவார்கள் என்று நம்புகிறேன். இதை வெற்றிகரமாக நடத்திக்கொடுக்கவேண்டும். நமக்குக் கிடைக்கக் கூடிய தங்கத்தை எல்லாம் நாம் தரவேண்டும். அதற்கு அங்கத்தினர்களுடைய பரிபூரணமான ஒத்துழைப்பை நான் கோருகிறேன். முக்கியமாக, பெண் உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்குத் தங்கம் எங்கே கிடைக்கும், எங்கே

1-00 p.m.

[திரு. எம். பக்தவத்சலம்] [3rd November 1965

வாங்குகிறது என்பது தெரியும். அவர்கள் குறுக்கே நிற்காமல் இருந்தால் சரி. ஆனால், அவர்களே முன்னணியில் வந்து கொடுக்கிறார்கள். நேற்று இந்த சட்டமன்ற உறுப்பினர் ஒருவர், ஒரு பெண்மணி, திருமதி பார்வதி அர்ஜுனன் அவர்கள் காசு மாலையை—அவர்களுடைய தாய் அளித்ததை, நீண்டகாலமாக அவர்கள் வைத்துக்கொண்டிருப்பதை—கொடுத்தார்கள். அந்தக் காசுமாலை ஏராளமான சாவரின் கொண்டது. அதை அளித்தார்கள். அப்படியே கொண்டு வந்து வைத்திருக்கிறேன். அதைக் கொடுப்பதற்காக ரிசர்வ் பாங்க் அதிகாரியைக் கூப்பிட்டிருக்கிறேன். அது ஒரு நல்ல எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது. இந்த மன்றத்தில் உள்ளவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமைந்திருக்கிறது. ஆகவே, எல்லோரும் தங்கத்தைத் தாராளமாக வழங்குவதற்கு முன்வரவேண்டும். பிற வகைகளில் நாம் முன்னணியில் நிற்பது போல், இந்த வகையிலும் நாம் முன்னணியில் நிற்கவேண்டும். தங்கம் அதிகம் இல்லை என்றாலும், இருப்பதை எல்லோரும் கொடுக்கலாம். சிறு துளி பெருவெள்ளம் என்பதுபோல, எல்லோரும் சிறிது சிறிது கொடுத்தால், அது பெருவெள்ளமாகிவிடும். இந்த வகையில் நாம் முன்னணியில் நிற்கிறோம் என்ற பெருமை நமக்கு ஏற்படுகிற அளவுக்கு கனம் அங்கத்தினர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பிரச்னையைப்பற்றி நாம் சிந்தனையைச் செலுத்தும் போது, அல்லது கவனம் செலுத்தும்போது, கூடிய வரையிலே சர்ச்சைக்கு இடம் கொடுக்கக் கூடாது, சர்ச்சைகளுக்கு இடம் கொடுக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். நமக்கு ஆத்திரம் கூட வருகிறது, ஏமாற்றம் கூட இருக்கிறது, சில நாடுகளின் போக்கைப்பற்றி. காமன்வெல்த்திலிருந்து நீங்கிவிட வேண்டும், அது தான் சரி, இது தான் சரி, இப்படிச் செய்ய வேண்டும், அப்படிச் செய்யவேண்டும் என்றெல்லாம் சர்ச்சை செய்யாமல், யுத்த நிலைமையில் இதையெல்லாம் மேலே இருக்கிறவர்களுக்கு விட்டுவிடவேண்டும். அதுதான் சிறந்தது. நல்ல எண்ணத்தோடு, நல்ல நோக்கத்தோடு சொல்லலாம். இருந்தாலும், இம்மாதிரிப் பிரச்னைகளில் கூடியவரைக்கும் விவாதம் செய்வது, சர்ச்சைக்கு இடம் கொடுப்பது நல்லது அல்ல என்று நான் சொல்லுவதை கனம் அங்கத்தினர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். நான் இம்மாதிரி சொல்லுவதைத் தவறாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

அதே மாதிரி, நெருக்கடி நிலைமை ஏற்பட்டபொழுது நான் கேட்டுக்கொண்டேன், கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும், வர்த்தகர்களையெல்லாம் ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். நெருக்கடி நிலை வந்தால் விலை ஏறும், அதை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு, விலை ஏற்றப்படும், அப்படி செய்யக் கூடாது என்று நான் அவர்களைக் கேட்டுக்கொண்டேன். அவர்களும் ஒத்துழைப்பதாகச் சொன்னார்கள். கூடியவரைக்கும் விலை ஏறவில்லை என்றே நான் கவனித்தவரையில் தெரியவருகிறது. அவர்கள் ஒரு கமிட்டி போட்டு, கண்காணிப்பவர்களையும் சேர்த்து

3rd November 1965] *[திரு. எம். பக்தவத்சலம்]*

ஒரு கமிட்டி போட்டு, அவ்வப்பொழுது நிலைமையைக் கவனித்து வருகிறார்கள். விலை ஏறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறோம். இதிலெல்லாம் அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது. சென்ற மகாயுத்தத்தின்போது நிலைமை எப்படி இருந்தது என்பது எனக்கு நன்றாக கவனத்தில் இருக்கிறது. மக்களுடைய மனோபாவம் எப்படி இருந்தது என்பது எனக்கு நினைவு இருக்கிறது. முதல் மகாயுத்தத்தைப்பற்றி எனக்கு அதிகம் தெரியாது. ஆனால், இரண்டாவது மகாயுத்தத்தின்போது இருந்த நிலைமை என்னவென்றால் 'நமக்கு என்ன கிடைக்கும், எப்படி சம்பாதிக்கலாம், எவ்வளவு சம்பாதிக்கலாம், இன்னொருவனுக்கு லட்சம் ரூபாய் கிடைத்துவிட்டதே, கோடி ரூபாய் கிடைத்து விட்டதே, எப்படி நாம் சம்பாதிப்பது' என்று யுத்த நிலைமையைத் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள். ஆனால், எல்லோருடைய மனமும் இப்பொழுது எவ்வாறு இருக்கிறது என்றால், நாம் என்ன கொடுப்போம், எவ்வளவு கொடுப்போம், மேலும் கொடுத்துக் கொண்டே இருப்போம், எல்லாவற்றையும் கொடுப்போம், உயிரையும் கொடுப்போம் என்ற அளவுக்கு இருக்கிறது. எத்தனையோ மாணவர்கள் அற்புதமான உற்சாகத்தோடு என்னிடம் வருகிறார்கள்; வந்து 'நாங்கள் உயிரைக் கொடுக்கிறோம், எங்களை அனுப்புங்கள்' என்று சொல்கிறார்கள். இரத்தத்தைக் கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். 'இரத்தம் உங்கள் உடலிலேயே இருக்கட்டும், எப்பொழுது வேண்டுமோ அப்பொழுது எடுத்துக்கொள்கிறோம்' என்று சொன்னேன். ஒரு கல்லூரி மாணவர்கள் என்னிடம் வந்தார்கள். 'நாங்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது வசூல் செய்த ரூ. 1,500 ஐ நாட்டின் பாதுகாப்பிற்காகக் கொடுக்கிறோம்' என்று சொன்னார்கள். அப்படி மாணவர்கள் நடந்துகொள்கிறார்கள். எல்லோருக்கும் 'நாம் என்ன கொடுப்பது, எதையெல்லாம் கொடுப்பது, இன்னும் எவ்வளவு கொடுப்போம்' என்றுதான் மனதில் தோன்றுகிறது. அது நமக்குப் பெருத்த நம்பிக்கை அளிக்கிறது. அதற்கேற்ற வகையில் நாம் எல்லோரும் நடந்து கொள்ள வேண்டும். இந்த மன்ற உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தை முழுமனதோடு ஆதரிப்பதோடுகூட, எந்த வகையில் மேலும் நாட்டைப் பாதுகாக்க மக்களுடைய உற்சாகத்தை உருவகப்படுத்தக்கூடுமோ அந்த வகையில், நாம் நிச்சயமாக பரிபூரணமாக வெற்றி அடையக்கூடிய வகையில், தங்களால் இயன்றதையெல்லாம் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இந்த நேரத்தில் நான் பேசியது அதிகமாயிருந்தாலும், பல விஷயங்களைக் கூறவேண்டியிருந்ததால் கூறினேன். அதையெல்லாம் பொறுமையோடு கேட்டுக்கொண்டிருந்த மன்ற உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இந்தத் தீர்மானத்தை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The resolution is now before the House for discussion.

SRI M. KALYANASUNDARAM rose.

MR. SPEAKER : I think the hon. Member can move only that part of his amendment relating to paragraph 5, as paragraph 4 will have to be disallowed.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தீர்மானத்தை ' அமெண்ட்மெண்ட் ' இல்லாமல் நிறைவேற்றுவது நல்லது. அந்த ' அமெண்ட்மெண்ட் ' ஒத்துக்கொள்ள முடியாத தாக இருக்கலாம், பிறகு ' அமெண்ட்மெண்ட் ' வேண்டும், வேண் டாம் என்றெல்லாம் சொல்லக் கூடிய நிலைமை ஏற்படாமல், கம்யூ னிஸ்டு கட்சித் தலைவர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் பெருந் தன்மையோடு இந்தத் திருத்தத்தையெல்லாம் கொண்டு வராமல், இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்தச் சந்தர்ப்பத்தில் மட்டுமல்ல, எப்பொழுதும் இந்தப் பாதுகாப்பு விஷயத்திலே என்ன கஷ்டம் ஏற்பட்டாலும், முதல் அமைச்சர் அவர்களுக்கோ அல்லது அரசாங்கத்திற்கோ சங்கடத்தை உண்டாக்க வேண்டும் என்பது என் நோக்கமல்ல. ஆனால், சொல்லவேண்டியதைச் சொல்லியாக வேண்டும். வோட்டு எடுத்து, சர்ச்சை உண்டாக்கவேண்டும் என்பது நோக்கமல்ல. சொல்லவேண்டியதைச் சொல்லியாக வேண்டும், இம்மாதிரி கருத்து உடையவர்கள் இந்த நாட்டில் நிச்சயம் இருக்கிறார்கள் என்பதை உலகத்திற்கு தெரியப்படுத்த வேண்டும். அதுதான் முக்கியம். என்னுடைய அபிப்பிராயம், திருத்தத்தைக் கொடுக்கவேண்டும். என்னுடைய அபிப்பிராயம் வேண்டும் என்பது அல்ல.

MR. SPEAKER : The hon. Member can read his amendment.

SRI M. KALYANASUNDARAM : Sir, I would not press it to a vote but I would like to move it.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, he can speak on that.

SRI M. KALYANASUNDARAM : The Chair can allow me to move it and I would not press it to a vote. (After a pause) I do not move my amendment, Sir.

* **திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர் களே, பாகிஸ்தான் படையெடுப்பு நியாயமற்றது, அக்கிரமமானது என்று கண்டிக்கிற முறையிலும், அந்தப் படையெடுப்பை முறியடிக் கின்ற வகையிலே இந்திய அரசு எடுக்கின்ற எல்லா முயற்சிகளுக் கும் முழு ஒத்துழைப்பையும், ஆதரவையும் இந்த மாநில அரசும், மாநில மக்களும் அளிப்பார்கள் என்கின்ற உறுதியை வழங்குகின்ற வகையிலும், இந்த முயற்சிகளுக்கு நாட்டு மக்கள் அளித்து வரு கின்ற ஆதரவுகளுக்காக அவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்ற

3rd November 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

வகையிலும், இந்தப் படையெடுப்பு முயற்சியைத் தடுத்து, இந்தியாவினுடைய மானத்தைக் காப்பாற்றவும், ஜனநாயகத்தைக் காப்பாற்றவும் போராடிய வீரர்களுடைய வீரத்தையும், தீரத்தையும் பாராட்டுகின்ற முறையிலும், இந்தப் படையெடுப்புப் போரில் எதிர் நடவடிக்கையில் ஈடுபட்டு, தங்களுடைய இன்னுயிர்களை நீத்தவர்களுக்கு வீரவணக்கத்தையும், வீர அஞ்சலியையும் செலுத்துகின்ற முறையிலும், இந்த நெருக்கடி நிலைமையில் நாம் ஆற்ற வேண்டிய கடமையை அறிந்து, உணர்ச்சியைப் பெருக்கிக் கொள்ள நம்மை நாமே உருவாக்கிக்கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையின் காரணமாகவும் கனம் முதல்மைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை முழு மனதோடு ஆதரிக்கின்ற முறையிலே சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.

கனம் முதல் அமைச்சர் அவர்கள் இந்தத் தீர்மானத்தினுடைய அடிப்படை நோக்கத்தையும், நாம் ஆற்றவேண்டிய கடமைகளையும் மிகத் தெளிவுபட எடுத்துக் கூறியிருக்கிறார்கள். பாகிஸ்தான் படையெடுப்பு ஏற்பட்டதற்குப் பிறகு இந்த மன்றம் இப்பொழுது தான் முதன்முதலாகக் கூடியிருக்கின்ற காரணத்தினால், இந்த மாநில மக்களுடைய பிரதிநிதித்துவம் பொருந்தியதாக அமைந்திருக்கின்ற இந்த மன்றத்தில் நம்முடைய கருத்துக்களை இந்திய அரசுக்கும், உலகத்திற்கும் அறிவிக்கின்ற வாய்ப்பு ஏற்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதொன்று. இதைப் புதியதாக விவாதித்து புதிய பல நடவடிக்கைகளை எடுக்கிற நிலைமையில் நாம் இல்லை என்றாலும், இந்தத் தீர்மானத்தை இங்கே கொண்டுவந்து விவாதிப்பதன் மூலம், இந்த மன்றத்தின் ஒருமித்த கருத்தை உலகு அறிய வகை செய்திருக்கிறோம். புதிய ஊக்கத்தையும் உணர்ச்சியையும் அளிப்பதற்கு இந்தத் தீர்மானம் பயன்படக்கூடிய ஒன்றாக அமைந்திருக்கிறது. இந்தத் தீர்மானம் எப்படிப்பட்ட சூழ்நிலையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதைக் கனம் முதல் அமைச்சர் அவர்கள் தெளிவாகத் தெரிவித்தார்கள். நாட்டில் இருக்கிற அத்தனை பேர்களும் இதை மிக நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். பாகிஸ்தான் படையெடுப்பு எவ்வளவு நியாயமற்ற ஒன்று என்பதையும் அதற்கான காரண, காரிய விளக்கங்களையும் இந்த நாட்டு மக்கள் அத்தனை பேர்களும் அறிந்து, தங்கள் தங்களுடைய கடமைகளை உணர்ந்து, தங்களுடைய பணிகளை ஆற்றவேண்டிய முறையில் ஆற்றிவருகிறார்கள். அந்த முறையில் அத்தனை பேர்களுக்கும் நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

படையெடுப்பைப் பொறுத்து நாம் ஆற்றவேண்டிய கடமைகளை நன்றாக உணர்ந்திருக்கிறோம். பாகிஸ்தான் படையெடுப்பு நியாயமற்றது, உண்மையற்றது, நேர்மையற்றது, நீதியற்றது என்பதை நல்லறிவு படைத்தவர்கள் ஒத்துக்கொள்வார்கள்.

"வினைவலியுந் தன்வலியும் மாற்றான் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல்"

என்று வள்ளுவப் பெருந்தகையார் மிக அழகாக எடுத்துக்

கூறியிருக்கிறார்கள். இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரையில் வினை வலிமை நம் பக்கம் மிக வலிவுடையதாக இருக்கிறது. வீரத் தோடும், தீரத்தோடும் போராடுகிற தன்வலியைப் பெற்றிருக்கிறது இந்தியா என்பதை அண்மையில் நடைபெற்ற போர் உலகுக்கு மிக நல்ல முறையில் எடுத்துக்காட்டியிருக்கிறது. மாற்றான் வலிமை நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வருவதையும், நமக்குத் துணையாக அமைகின்ற வலிமைகள் பெருகிக்கொண்டு வருவதையும் காண்கிறோம். ஜனநாயகத்தைக் கட்டிக்காப்பாற்றுகிற மிகப் பெரிய நாடு இந்தியா என்பதை எல்லோரும் உணர்ந்திருக்கிறார் கள். உலகத்தில் இரண்டாவதாக அதிகமான மக்கள் தொகையை இந்தியாதான் பெற்றிருக்கிறது. 66 கோடி மக்கள் தொகை கொண்ட சீனாவுக்கு அடுத்தபடியாக, 47 கோடி மக்களைக் கொண்ட நாடு இந்தியாவாகும். பாராளுமன்ற ஜனநாயகத்தை மேற்கொண்டு நடத்துகிற மிகப் பெரிய நாடாக இந்தியா அமைந் திருக்கிறது. இந்த ஜனநாயகம் விழுமானால் உலகத்தில் இதை விடக் குறைவான மக்கள்தொகை கொண்ட எந்த ஒரு நாட்டி னுடைய ஜனநாயகமும் நிலைத்திருக்க வழியில்லை என்பதை அத்தனை பேர்களும் உணர்வதற்குந் தலைப்பட்டிருக்கிறார்கள். நாற்பத்தேழு கோடி மக்கள் கட்டிக் காப்பாற்றும் ஜனநாயகத் திற்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது; நெருக்கடி நிலை ஏற்பட்டி ருக்கிறது இன்று பாகிஸ்தான் படையெடுப்பினாலும், அடக்கி சீனப் படையெடுப்பினாலும் ஏற்பட்டிருக்கிற நிலைமை ஜனநாயகத் திற்கும், சர்வாதிகாரத்திற்கும் இடையிலே ஏற்பட்டிருக்கிற ஒரு மோதல் என்பதையும், சர்வாதிகாரம் வலுக்கிறதா அல்லது ஜனநாயகம் வலுக்கிறதா என்பதையும் உலக நாடுகள் அத்தனையும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கின்றன. ஜனநாயகத்தில் நம்பிக்கை உடையவர்கள், இந்தியாவில் ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதன் மூலம், உலக ஜனநாயகத்தைக் காப்பாற்ற வழி கோலியவர்கள் ஆவார்கள் என்கின்ற கருத்துக்கள் பரிமாறப்படும் தன்மையை நாம் பார்க்கிறோம். இந்தியாவின் ஜனநாயகத்தைக் காப்பாற்றியே தீரவேண்டும், மண்ணைக் காப்பாற்றும் பிரச்சினை மட்டுமல்ல இது, இந்தியாவின் மானத்தைக் காப்பாற்றும் பிரச்னை மட்டுமல்ல இது, அகில உலகத்திலுமுள்ள ஜனநாயகத்தைக் காப்பாற்றும், நீடிக்கச் செய்யவேண்டிய பிரச்னையும் இந்தப் போர் முயற்சியில் அடங்கியிருக்கிறது.

இந்தியா ஜனநாயகத்தைக் காப்பாற்றுகின்ற நாடு என்கிற காரணத்தினாலே, இங்கே பல அரசியல் கட்சிகள் தங்கள் தங்கள் போட்டி உணர்வு அடிப்படையில், கட்சி வலிவைப் பெருக்கும் நிலையில், ஆட்சி அமைக்கின்ற தன்மையில் பணியாற்றி வருகின்றன. இது ஜனநாயக அடிப்படையில் ஏற்பட்டிருக்கிறது. கட்சி என்ன என்பதையும், நாம் உணர்ந்திருக்கிறோம்; அரசு என்ன என்பதையும் நாம் உணர்ந்திருக்கிறோம்; நாடு என்ன என் பதையும் நாம் உணர்ந்திருக்கிறோம்; கட்சிக்கும், அரசுக்கும், நாட்டுக்கும் இருக்கிற தொடர்புகளை நாம் நன்றாக உணர்ந்திருக் கிறோம். இந்திய மக்களிடையே அப்படிப்பட்ட உணர்வு இருக் காது என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் சீனாவும்,

3rd November 1965] *[திரு. இரா. நெடுஞ்செழியன்]*

பாகிஸ்தானும் படையெடுப்பை மேற்கொண்டிருக்கின்றன என்பதை நாம் நன்றாக அறிகிறோம். ஜனநாயகம் எங்கு மிகச் சிறப்பாக நடக்கிறதோ, அங்கே கட்சிகள் அவசியம் காணப்படும். ஆளும் கட்சி, எதிர்க்கட்சி இரண்டும் ஜனநாயகம் சிறப்பாகவும், செம்மையாகவும், நல்ல முறையில் நடக்கவும் தேவைப்படுகின்றன. குற்றங்குறைகள் இல்லாமல் தடுக்க எதிர்க்கட்சிகள் தேவைப்படுகின்றன. அரசியல் கட்சிகளுக்குள்ளாக பல வேறுபாடுகள் ஏற்படக்கூடும்; ஜனநாயக நாட்டில் இருந்து தீர்வது. பல கட்சிகள் தோன்றக்கூடும். ஒரு கட்சி வலுப்பெறக்கூடும், இன்னொரு கட்சி அழியக்கூடும். ஒன்று வாழவும், ஒன்று விழவும். கூடும். ஒன்று இன்று தோன்றக்கூடும். சில நாட்களில் அழியக்கூடும், அல்லது பல ஆண்டுகள் வளரக்கூடும். வளர்ந்து வாழ்ந்து கட்சிகள் வாழக் கூடும், அல்லது விழக்கூடும். ஆளும் கட்சி எதிர்க்கட்சியாகக் கூடும்; எதிர்க்கட்சி ஆளும் கட்சியாகக் கூடும். ஆகவே, கட்சிகள் மக்களுடைய கருத்துக்கள் அடிப்படையில் அமைகின்ற காரணத்தினால், ஆட்சி ஜனநாயக ஆட்சியாக அமைகிறது. எனவே, கட்சிகளிடையில் போட்டி, பொறாமை, மாச்சரியங்கள் ஏற்படும், ஒரு கட்சி மற்றொரு கட்சியைத் தாக்கும், ஆளும்கட்சி எதிர்க்கட்சியை வீழ்ச்சியடையச் செய்வது எப்படி என்றும், எதிர்க்கட்சி ஆளும் கட்சியை வீழ்ச்சியடையச் செய்வது எப்படி என்றும் போட்டியிட்டுக் கொண்டிருக்கும்; தங்கள் தங்கள் வலுவைப் பெருக்கிக் கொள்ள போட்டியிருப்பதுதான் ஜனநாயக நாடாகும். ஒவ்வொரு கட்சியும் தன் தன் உரிமைகளை நிலை நாட்ட, தங்கள் தங்கள் உணர்வுகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துப் போட்டி இடுவது ஜனநாயகத்தில் தான். அரசியல் கட்சிகள் நிலையில்லாதவை. ஆனால் அரசு கொஞ்சம் நிலைத்தது. ஆனாலும், அரசு அத்தனை பேருக்கும் உரிமையுடைய ஒன்றாக இருக்கும் தன்மையைப் பெற்றிருக்கிறது. கொஞ்சம் நீடித்த தன்மையைப் பெற்றிருக்கிறது. கொஞ்சம் நீடித்த தன்மை அரசுக்கு அமைந்திருக்கிறது. பல்வேறு காலங்களில் பல அரசுகள் ஏற்படுகின்றன; ஏற்பட்டிருக்கின்றன சோழ அரசு, சேர அரசு, பாண்டிய அரசு, மொகலாய அரசு, பல்லவ அரசு, சாளுக்கிய அரசு, போர்த்துகீசிய அரசு, பிரஞ்சு அரசு, டச்சு அரசு, இன்னும் ஆங்கில அரசு என்று பல்வேறு அரசுகள் இருந்தன. இன்றைக்கு மக்கள் அரசு ஏற்பட்டிருக்கிறது. அரசு காலத்திற்குக் காலம் மாறுபடக்கூடியது என்றாலும், அத்தனை பேருக்கும் பொதுவானது. அதைவிட, நிலையான ஒன்று நாடு; அனைவருக்கும் பொதுவானது, உரிமை உடையது; நிலைத்தது. பல்லாயிரம், ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முன்னால், இந்த மண் நம் முன்னோர் அத்தனை பேருக்கும் சொந்தமாக இருந்தது; இன்றைக்கு நமக்குச் சொந்தமாக இருக்கிறது. நாளைக்குப் பின்னால் வருகிற மக்களுக்கும் தலைமுறைக்கும் இந்த நாடு என்றென்றும் சொந்தமாக இருக்கும். இப்பொழுது வந்திருக்கிற ஆபத்து, தனிப்பட்ட ஆளுக்கோ, கட்சிக்கோ அல்ல. இந்த நாட்டுக்கு, ஜனநாயகத்துக்கு வந்திருக்கிற ஆபத்து, நாட்டின் மானத்திற்கு வந்திருக்கிற ஆபத்து என்கிற காரணத்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [3rd November 1965

திலே, எந்தக் கருத்து வேறுபாடுகள், மாச்சரியங்கள், உணர்வுகள் இருந்தாலும், 47 கோடி மக்களும் மற்றைய பிரச்சினைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, மாச்சரியங்களை, போராட்டங்களை, பிளவுகளை மறந்துவிட்டு நாட்டைக் காப்பாற்றும் ஒரே முயற்சியில் கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

'சுவரை வைத்துக்கொண்டு தான் சித்திரம் எழுத வேண்டும்' என்பது பழமொழி. ஜனநாயக நாட்டிலே உள்ள அமைப்பும் அப்படித்தான். ஒரு ஜனநாயகச் சுவர் இருந்தால்தான் அரசியல் கட்சிகள் தங்கள் தங்கள் கட்சிகளின் ஓவியத்தை அந்த ஜனநாயகச் சுவரில் வரைந்து காட்டலாம். அந்த அடிப்படையில் போட்டியிட முடியும். தாங்கள் எண்ணுகிற ஓவியத்தைப் போட்டி அடிப்படையில் மக்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் தீட்டி வாதாட முடியும். ஜனநாயகச் சுவரின் அடிப்படையில்தான் ஆளும் கட்சியும் எதிர்க் கட்சிகளும், சித்திரம் வரைந்து காட்டுகின்றன. மக்களை போட்டியின் அடிப்படையில் அணுகுகின்றன. ஜனநாயக அடிப்படையில் மக்களை தங்கள் கட்சிக்கு ஈர்க்க முயலுகின்றன. அந்த ஜனநாயகச் சுவருக்கே ஆபத்து ஏற்பட்டால், சித்திரத்தைப் பற்றி எண்ணவோ, அதை வரையவேண்டும் என்கிற எண்ணம் தோன்றவோ முடியாது. இன்றைக்கு ஜனநாயகச் சுவருக்கு ஆபத்து வந்திருக்கிறது. அந்தச் சுவரைக் காப்பாற்ற வேண்டிய நிலைக்கு வந்து நிற்கிறோம். கையில் வைத்துக்கொண்டிருக்கும் வண்ணச் சட்டிகளை மறந்து, தூரிகைகளை மறந்து, சித்திரத்தையும் மறந்துவிட்டு, சுவரைக் காப்பாற்றும் உணர்வோடு, நாம் அனைவரும் அந்த முயற்சியில் ஈடுபடவேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த உணர்வு இந்தியாவில், அரசியல் கட்சிகளிடையே இல்லை, கட்சி மாச்சரியங்கள் தம் படையெடுப்பிற்குப் பயன்படும் என்று சிறைவோ, பாகிஸ்தானோ எண்ணியிருந்தால், இந்தப் போர் அது தவறு என்பதை அந்த நாடுகளுக்கு உணர்த்திவிட்டது எனலாம். அந்த எண்ணத்திற்கு ஒரு சிறிதும் இடம் இல்லை என்பதை எல்லா அரசியல் கட்சிகளும் உணர்த்திவிட்டன. அத்தனை அரசியல் கட்சிகளும் தங்கள் தங்கள் வாதப் பிரதிவாதங்களையும், கருத்து வேறுபாடுகளையும் கைவிட்டு விட்டு, ஆபத்து வந்திருக்கிற நேரத்திலே, அந்த ஆபத்தை நீக்கி, நாட்டை அந்த ஆபத்திலிருந்து மீட்க வேண்டும் என்கிற முயற்சியில், ஒற்றுமை உணர்வின் அடிப்படையில் பணிகளை ஆற்றிவரும் தன்மையைப் பார்க்கிறோம். அந்த உணர்வை எடுத்துக் காட்ட இந்தத் தீர்மானம் பயன்படும். இது நமது உணர்வை அகில உலகிற்கும் அறிவிக்கக்கூடிய ஒன்றாக அமைந்திருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். இப்பொழுது வந்திருக்கின்ற ஆபத்து, இந்திய துணைகண்டத்திற்கும் இந்தியாவின் ஜனநாயகத்திற்கும் வந்திருக்கிற ஆபத்தாகும். எனவே, அந்த ஆபத்திலிருந்து இந்தியாவை மீட்கின்ற எல்லா முயற்சிகளிலும் முழுமூச்சோடு ஈடுபட்டு நம்முடைய ஆதரவை நல்க வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். இதிலே நியாயம் எவ்வளவு, உண்மை எவ்வளவு அமைந்திருக்கிறது என்பதைக் கனம் முதல் அமைச்சர் அவர்கள் தங்களுடைய முன்னுரையில் தெளிவுபட எடுத்துக்

3rd November 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

கூறினார்கள். இந்த நாடு விடுதலை பெற்ற நேரத்தில், அந்தந்த சுதேச சமஸ்தானங்கள், தங்கள் தங்கள் விருப்பப்படி நடந்து கொள்ளலாம் என்ற தனியான உரிமையை வழங்கிவிட்டு வெள்ளையர்கள் சென்ற நேரத்தில், கனம் முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துத் தெரிவித்ததைப் போல, எல்லா சுதேச அரசுகளும் தங்களுடைய அரசர்களின் விருப்பப்படி இந்தியா வோடு இணைந்தன. இந்த அடிப்படையில்தான் ஐதராபாத்தும், திருவாங்கூர்-கொச்சியும், வேறு பல சமஸ்தானங்களும் இந்தியா வோடு இணைந்திருக்கின்றன. சில சமஸ்தானங்கள் பாகிஸ் தானோடு இணைந்தன. காஷ்மீரைப் பொறுத்தவரையில் அது முடிவு கட்டுவதற்கு முன்னால், 1947-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23-ம் தேதி அதைப் படையெடுத்து, அந்தப் பகுதியை ஆக்கிரமித்துக் கொள்வதன் மூலம் பாகிஸ்தானத்தின் பகுதியாக ஆக்கிக் கொள்ள பாகிஸ்தான் முயன்றது. 1947-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23-ம் நாள் காஷ்மீரைத் தனதாக ஆக்கிக் கொள்ள பாகிஸ்தான் படையெடுத்தது என்பதிலேயே, அந்தப் பகுதி பாகிஸ்தானைச் சேர்ந்த பகுதி அல்ல என்பது புலனாகிறது. படையெடுக்க வேண்டும், பிடிக்க வேண்டும், அதைத் தனக்குரியதாக ஆக்க வேண்டும் என்ற முயற்சி ஒன்றே காஷ்மீர் பாகிஸ்தானைச் சேர்ந்ததல்ல என்கிற ஒரு தன்மையை மிகத் தெளிவுபட எடுத்துக் காட்டும் ஒன்றாக இருக்கிறது. பாகிஸ் தானைச் சேர்ந்த பகுதியாக காஷ்மீர் இருக்குமானால், அதன்மீது படையெடுக்க வேண்டிய முயற்சியோ அல்லது அதற்கான ஆயத் தம் செய்து, அதைச் சேர்க்க வேண்டிய அவசியமோ ஏற்பட்டிருக் காது. தனக்குரிய ஒன்று அல்ல, படையெடுப்பதன் மூலமாகத் தான் சேர்க்க முடியும் என்ற நிலை பிறந்ததற்குப் பிறகு பாகிஸ் தான் படையெடுத்திருக்கிறது என்ற ஒரு கருத்திலேயே, நியாயம் பாகிஸ்தான் பக்கம் இல்லை என்பதை அறிகிறோம். 1947 அக்டோபர் 23-ம் தேதி பாகிஸ்தான் படையெடுத்தது என்றாலும், மற்றைய சுதேச சமஸ்தானங்கள் என்ன முடிவைச் செய்தனவோ அந்த முடிவை 26-ம் தேதி காஷ்மீரும் செய்தது. இந்தியாவோடு இருப்பதா, பாகிஸ்தானோடு இருப்பதா என்று முடிவு எடுக்கும் கட்டத்தில் அக்டோபர் 23-ம் தேதி பாகிஸ்தான் படையெடுத்தது, 26-ம் தேதி காஷ்மீர் இந்தியாவோடு இணைந்திருப்பது என்ற முடிவிற்கு வந்தது. இந்தியாவோடு இணையும் அத்தகைய முயற்சி நடை பெற்றது என்றால் மற்ற சுதேச சமஸ்தானங்கள் இந்தியா வோடு இணைந்ததில் எவ்வளவு நியாயமும், உண்மையும், நீடித்த நிலைமையும் இருக்கிறதோ அவ்வளவு உண்மையும், நியாயமும் நீடித்த நிலைமையும் 1947-ம் ஆண்டு அக்டோபர் 26-ம் தேதியிலேயே காஷ்மீர் இந்தியாவோடு சேர்ந்ததிலிருந்து அமைந்து விட்டது. அந்தக் கருத்தின் அடிப்படையில்தான் பாகிஸ்தான் படை யெடுப்பை எதிர்த்து இந்தியா போர் புரிய வேண்டி யிருக்கிறது.

வினை வலியும் நியாயமும் நம் பக்கம் இருக்கின்றன. இவ்வளவு நியாயங்களை எடுத்துச் சொல்லியும் அகில உலக அரங்கிலே எதிர் பார்க்கப்பட்ட ஆதரவு வரவில்லை. இந்த நியாயத்திற்கான காரண காரிய விளக்கங்களைப் பாராளுமன்றத்தின் மூலமாகவும், சட்ட

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [3rd November 1965

மன்றங்களின் மூலமாகவும், அமைச்சர்கள் வாயிலாகவும், தூதுவர்கள் வாயிலாகவும், ஏடுகள் வாயிலாகவும் எடுத்துச் சொல்லியும் கூட, சில நாடுகள் உணர முடியாமல் இருக்கின்றனவே என்று கூட ஆயாசப்படுகிறோம். அதற்கான காரணங்களைத் தெளிவுபட உணர்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறது ஐக்கிய நாடுகள் அவை. அகில உலக அமைதியைக் காப்பதற்காகவும், பல்வேறு கொள்கை அடிப்படையில் அமைந்திருக்கிற அரசுகள் தங்கள் விருப்பப்படி இயங்கிச் செல்லவும், ஒரு நாடு மற்றொரு நாட்டின்மீது படையெடுத்து உரிமையை அபகரிக்காமல் காப்பாற்றவும், அதே நிலையில் அமைதியை நிலைநாட்டவும், அந்தந்த நாடுகள் தங்கள் தங்களுடைய உரிமையின் அடிப்படையில், வளத்தையும் வாய்ப்பையும் வசதியையும் பயன்படுத்திக் கொண்டு வளரவும், அதற்காகத் தூண்டுதல் இடவும், பிற்போக்காக இருக்கும் நாடுகளுக்கு உதவி செய்யவும், வலிவுபெற்ற நாடு வலிவற்ற நாட்டுக்கு உதவி செய்யவும், ஒத்துழைப்பு அளிக்கவும் உதவும் வகையில் ஐக்கிய நாட்டு அவை உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்த அவையின் நோக்கத்திலும் குறிக்கோளிலும், அது தொடர்ந்து இயங்க வேண்டிய அவசியத்திலும் யாருக்கும் கருத்து மாறுபாடு இருக்க வழி இல்லை. அந்தக் கருத்தின் அடிப்படையில் தான் அத்தனை பேரும் எடுத்துச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். ஆனால் ஐக்கிய நாடுகள் அவையிலே இடம் பெற்றிருக்கிற பல நாடுகள், இந்தியாவின் பக்கம் நியாயம் இருந்தும் கூட, பிரச்சினையை அணுகுகிறபோது இந்தியாவின் பக்கம் இல்லை. ஐக்கிய நாட்டு அவைக்குச் சென்று நிலைமைகளை அறிந்து வந்திருக்கும் கனம் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அண்மையில் ஒரு கூட்டத்தில் எடுத்துச் சொல்லியது போல், அங்கிருக்கும் நிலைமைகளை ஆராயும்போது ஐக்கிய நாடுகள் அவை, இருக்கும் பிரச்சினையை ஆராய்ந்து, நிலைமையை ஆராய்ந்து, நீதி வழங்குவதற்காக அமைந்திருக்கிற, நீதி மன்றம் போல அமைந்திருக்கும் அவை அல்ல. பல்வேறு குழுக்களாக அமைந்திருந்து, தங்கள் தங்கள் குழுக்களினுடைய கொள்கைகளை நிலைநாட்டும் அமைப்பாக அமைந்திருக்கிறதே தவிர, சுப்ரீம் கோர்ட் போல, நீதி ஸ்தலம் போல, அகில உலகத்தில் காணப்படும் குற்றங்குறைகளை விசாரித்து, நீதி அளித்து, நீதியின் பக்கம் தங்களுடைய ஆதரவைக் கொண்டுவந்து நிலைநிறுத்தும் அளவிற்கு அது இயங்கவில்லை. எனவே, அதனிடமிருந்து நியாயம் கிடைக்கும், நீதி கிடைக்கும், எல்லாப் பிரச்னைகளையும் விவாதித்து நீதியின் பக்கம்தான் அது நிற்கும் என்று எண்ணுவது நம்முடைய தவறே தவிர, குழுக்கள் அதனதன் இயக்கப்படிதான் இயங்குகின்றன. பல நாடுகள் சூடிஃப்டோ, ஸெண்டோ, நேட்டோ ஆகிய அந்தந்த அமைப்புக்குள் தங்களைச் சிக்க வைத்திருக்கும் காரணத்தினால், அந்த அமைப்புக்களை இயக்குகிறவர்கள் எப்படி எப்படி இயக்குகின்றார்களோ அதற்குத் தகுந்தபடிதான் அந்த நாடுகள் இயங்க வேண்டியிருக்கின்றனவே தவிர, இந்தியாவின் பக்கம் நியாயமா, பாகிஸ்தான் பக்கம் நியாயமா, எந்த நியாயத்தின் பக்கம் நாம்

3rd November 1965] *[திரு. இரா. நெடுஞ்செழியன்]*

நிற்பது என்று முடிவு எடுக்கின்ற சுதந்திரத் தன்மையில் இல்லை. அவைகள் தாம் சிக்கிக் கொண்ட வலையிலேயே இருந்துகொண்டு, இயக்குகிறவர்கள் எந்த முடிவு எடுக்கிறார்களோ அந்த முடிவை யொட்டி இந்தப் பிரச்சினையிலும் கருத்துத் தெரிவிக்கின்றன. அவர்கள் அத்தனை பேரும் இந்தியாவின் பக்கத்திலே தங்கள் கருத்துக்களைச் செலுத்தாத காரணத்தினாலே, அகில உலகத்திலே இருக்கும் பல நாடுகள் நம் பக்கம் இல்லையே என்று நாம் எண்ண வேண்டிய அவசியம் இல்லை; எதிர்பார்க்கவேண்டிய அவசியமும் இல்லை. உண்மை இருக்கிறது. உண்மையை உணரும் நிலைமை வரும். உண்மை நமக்குப் பக்கபலமாக இருக்கும் என்பது உறுதி.

இங்கே பல்வேறு அரசியல் கட்சிகள் இருந்து கொண்டிருக்கின்றன. போர் ஆரம்பிப்பதற்கு ஒரு திங்களுக்கு முன்னால்தான் பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சிகள் அத்தனையும் சேர்ந்து, 'இந்தியத் தலைமையமைச்சர் திரு. லால்பகதூர் சாஸ்திரி அவர்களுடைய தலைமையில் இயங்குகிற இந்த அரசின் மீது நம்பிக்கை இல்லை' என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்து காரசாரமாக விவாதிக்கும் நிலைமை இருந்தது. ஆகவே, மாற்றுங் கட்சிகளுக்கு நம்பிக்கை இல்லாத நிலைமையிலிருக்கும் அரசின் மீது, ஆளுகின்ற ஆட்சியின் மீது படையெடுத்தால் பல்வேறு அரசியல் கட்சிகளின் எதிர்ப்புகளைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று பாகிஸ்தானும் சீனாவும் எண்ணியிருந்தால் அந்த எண்ணத்திற்கு இடம் இல்லை என்பதை நாடு உணர்த்தி விட்டது. ஆகவே, கட்சிகளுக்குள்ளே ஏற்படும் மாச்சரியங்கள் வேறு, நாட்டுக்கு வந்திருக்கும் ஆபத்து வேறு என்ற பெரும் உண்மை அடிப்படைத் தன்மையை உணர்ந்த அத்தனை கட்சிகளும் முழு ஒத்துழைப்பு தரும் தன்மை வந்திருப்பது போலவே, தமிழக மாநிலத்திலுள்ள அவ்வளவு அரசியல் கட்சிகளிலுமுள்ள அத்தனை பேரும் ஒன்றாக இணைந்து நின்று செயலாற்றி வந்திருக்கிற தன்மையை நாம் பார்க்கிறோம். அதை மேலும் மேலும் வலுப்படுத்தவும், அந்தத் தன்மையை மேலும் கட்டிக் காத்து வளர்க்கும் முயற்சியிலும் நாம் ஈடுபடவேண்டியவர்களாக இருக்கிறோம். எனவே, நியாயம் நம் பக்கம் இருக்கிறது. மேலும் தன் வலியைப் பெற வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்தியாவின் அடிப்படைக் கொள்கையே, அமைதியைக் கடைப் பிடிப்பது தான். கருத்து வேறுபாடு உடைய நாடுகளும் கூட ஒன்றாக இயங்க முடியும். கருத்து வேறுபாடு, விவாதங்கள் மூலமாகவும், கருத்தரங்குகள் மூலமாகவும், பேச்சு வார்த்தைகள் மூலமாகவும் தீர்க்கப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது. கருத்துக்களின் முன் துப்பாக்கி முனையை நீட்டி, துப்பாக்கி முனையில் பலாத்காரத்தின் முன்னால், கருத்துக்களை மாற்றுவதற்கான முயற்சிக்கு இடம் அளிக்கக் கூடாது. கருத்து வேறுபாடு வழியிலே இயங்குகிற நாடுகள் கூடி வாழ முடியும் (கோ-எக்ஸிஸ்டன்ஸ்). ஆகவே, தங்கள் தங்கள் கருத்துக்களை, தங்கள் தங்கள் விருப்பத்தின் அடிப்படையில் மாற்றிக்கொள்ள அவரவர்களுக்கு உரிமை இருக்க வேண்டும். எனவே, உலக அமைதியை நிலை

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [3rd November 1965

நாட்ட வேண்டும், ஒரு நாடு தன்னுடைய வசதியையும், பிற நாட்டிலிருந்து வருகிற உதவிகளையும் அழிவுச் சக்திகளுக்குப் பயன்படுத்தாமல் ஆக்கப் பணிகளில் ஈடுபடுத்த வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் இந்தியா இயங்க வேண்டும் என்று இதற்கு முன்னால் இந்தத் தேசத்தின் முதல் அமைச்சராக இருந்த பண்டித நேரு அவர்கள் எண்ணியது மட்டுமல்ல, அந்தக் கருத்து அடிக்கடி வலியுறுத்தப்பட்டும் வந்திருக்கிறது. ஆளும் கட்சிக்கும் எதிர்க் கட்சிகளுக்கும் இதிலே கருத்து வேறுபாடு இல்லாத வகையில், அவ்வளவு கட்சிகளும் இந்தக் கருத்துக்களின் அடிப்படையை வற்புறுத்தி வந்திருக்கின்றன. படை வலிவு குறைவாக இருக்கிற காரணத்தால், பிற நாடுகளிலிருந்து பலம் பெற்று அந்த வலிவை வைத்துக்கொண்டு இந்தியாவை வென்று விடலாம் என்று பாகிஸ்தான் எண்ணிற்று. அமெரிக்கா தந்த போர்க் கருவிகளைப் பயன் படுத்திக்கொண்டு போரில் வென்று விடலாம் என்ற எண்ணம் ஈடேற முடியாததாகிவிட்டது. அந்த எண்ணத்தை முறியடிக்கும் வகையில் இந்திய வீரர்கள் தங்களுடைய தீரத்தையும், வீரத்தையும் நிலைநாட்டியிருக்கிறார்கள் என்பது நமக்கு மிக்க மகிழ்ச்சி அளிக்கக்கூடிய ஒன்றாகும். அந்த வீரப் படையினருக்குப் பாராட்டுதல் அளிப்பதன் மூலமாகவும், அவர்களை ஊக்குவிக்கவும், உணர்வு கொள்ளச் செய்யவுமான முயற்சியிலே நாம் ஈடுபடுவதும் மிக்க மகிழ்ச்சிக்குரிய ஒரு செயலாகும்.

படைவலிவில் தன்னிறைவு பெற வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். நாம் நம்முடைய வலிவைப் பெருக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த வலிவைப் பெருக்கித் தீர வேண்டிய கட்டத்திற்கு வந்திருக்கிறோம். 1962-ல் ஏற்பட்ட சீனப் படையெடுப்பின் விளைவாகவும் இப்பொழுது ஏற்பட்டிருக்கிற பாகிஸ்தான் படையெடுப்பின் விளைவாகவும் நாம் அறிந்து கொண்டிருக்கிற ஒரு பாடம், படையெடுப்பைப் பொறுத்தவரையில், 'அகில உலகத்தில் அமைதியை நிலைநாட்டி, நாம் யாரிடமும் போருக்குச் செல்லவில்லை, நம் மீது யாரும் படையெடுக்க மாட்டார்கள், ஆகையால் நாம் அமைதியை உலகத்தில் நிலைநாட்டுகிறோம், பிற நாடுகள் மீது ஆக்கிரமிப்பு செய்யாதிருக்கும்போது மற்றவர்கள் நம் மீது அக்கிரமமாக ஆக்கிரமிப்பு செய்ய மாட்டார்கள்' என்று இனி இருந்துவிடுவதற்கில்லை. இந்த நாட்டின் வலிவு எந்த அளவிற்கு பெருக்கி வைக்கப்பட வேண்டுமோ அந்த அளவிற்குப் பெருக்கி வைக்கப்பட வேண்டும். 'இந்த நாட்டை அவ்வளவு எளிதாக அபகரிக்க முடியாது, இந்த நாட்டின் மீது ஆக்கிரமிக்க முடியாது, இந்தியாவின் மீது படையெடுக்க முடியாது, எத்தகைய படையெடுப்பு எந்தப் பகுதியிலிருந்து வந்தாலும் கூட, அதைச் சமாளிக்கத் தக்க அளவு இந்தியப் படை வலிவு பெற்றிருக்கிறது' என்று பிற நாடுகள் எண்ணும் நிலை
1–30 p.m. உருவாக வேண்டும். இந்த அளவுக்கு மக்கள் ஊக்கத்தையும், ஆக்கத்தையும் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்ற

3rd November 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

நிலைமையை ஏற்படுத்துவதன் மூலமாக தொடர்ந்து இந்தியாவின் சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் நாம் காப்பாற்ற முடியும். தொடர்ந்து இந்த லட்சியத்துடனேயே நாம் நம் வலிமையைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். இந்த நாட்டில் ஒரு அங்குல மண்ணைக் கூட எளிதில் கவர முடியாது, அபகரிக்க முடியாது என்ற எண்ணம் நம் பகை நாடுகளுக்கு ஏற்படும் வகையில் நம் படை பலத்தை நாம் பெருக்கிக் கொள்ள வேண்டும். அடித்தால் திருப்பி அடிக்கப்படுவோமே தவிர ஒரு அங்குல மண்ணைக் கூடப் பிடிக்க முடியாது என்ற எண்ணம் எல்லையில் இருப்பவர்களுக்கு ஏற்பட வேண்டும். நப்பாசை கொண்டிருப்பவர்களுக்கு அச்சம் ஏற்படுகிற வகையில் மத்திய அரசினரும் சரி, மாநில அரசினரும் சரி, ஒருங்கிணைந்த முயற்சியாகப் படைப் பலத்தைப் பெருக்கியாக வேண்டும்.

அதுமட்டும் அல்ல. என்றைக்காவது ஒரு நாள் இந்த நாட்டில் உள்ளவர்கள் அத்தனைபேரும் படைப் பயிற்சி பெற்றவர்களாக இருக்கக் கூடிய வகையில் இன்று முதலே கல்லூரியில் படிக்கிறவர்கள் அத்தனைப் பேர்களுக்கும் ஓய்வு நேரத்தில் போர் பயிற்சியும் நாம் அளிக்கத் திட்டமிட வேண்டும். வேறு சில நாடுகளில் உள்ளது போல பட்டம் பெறுவதற்கு முன் ஓராண்டு, ஈராண்டு கட்டாய இராணுவ சேவை செய்தாக வேண்டும் என்ற அளவில்—இன்று முதலே உயர்நிலைப் பள்ளி, கல்லூரி நிலையில் படைக்கலப் பயிற்சி அளிக்கும் திட்டத்தை மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் பாட திட்டத்தோடு வகுக்க வகை செய்தல் வேண்டும். அப்போதுதான் சில பல ஆண்டுகளிலாவது நாட்டில் உள்ளவர்கள் அத்தனை பேர்களும் சண்டையிட வல்லவர்களாக, உணர்ச்சியும், ஊக்கமும், அறிவும் ஆற்றலும் கொண்டவர்களாக ஆக முடியும். தன்னிறைவு கொண்டவர்களாக நாம் ஆக முடியும்.

நாட்டிற்கு வந்த பேராபத்தை வீரத்துடன் எதிர்த்து நின்று போராடிய நமது ஜவான்களைப் பற்றி முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நாட்டைக் காக்கும் வீரப்போரிலே தன்னுயிர் நீத்த தியாகிகளுக்கு நாம் நம்முடைய வீர வணக்கத்தை—அஞ்சலியைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். பகைவர்களை முறியடித்த நமது தீரம் மிக்க போர் வீரர்களுக்கு நம்முடைய பாராட்டுதலைத் தருவதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் அளிப்பதற்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்து, இந்த நெருக்கடியான நேரத்தில் எந்த நாட்டோடு நட்புரிமை வைத்துக் கொள்வது, எந்த நாட்டோடு நட்புரிமையை நீக்கிக் கொள்வது என்பது பற்றி எல்லாம் பல்வேறு தரப்பினரின் கருத்துக்களைத் திரட்டி அதன்பேரில் இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்வது என்பது இயலாத காரியம். கொள்கை அடிப்படையில் நட்புரிமை கொண்டாடலாம். கொள்கை வேறுபாட்டால் வெட்டிக்கொள்ளலாம். மற்ற நாடுகள் எல்லாம்

இந்த அடிப்படையில்தான் இயங்குகின்றன. பொது மக்கள் அத்தனை பேர்களுக்கும் மற்ற நாடுகள் நம்மைப் பொறுத்த வரையில் எவ்வாறு செயல்பட்டு வருகின்றன என்கிற முழு விவரம் தெரிந்து கொள்ள முழு வாய்ப்பில்லை. பத்திரிகைகளைக் கொண்டு எந்த முடிவுக்கும் வர இயலாது. ஆகவே எந்த நாட்டுடன் நட்புறவு கொள்வது இந்தியாவுக்கு நல்லது, எவற்றோடு நட்புறவை வெட்டிக்கொள்ள வேண்டும் என்பதைப்பற்றி இந்திய அரசாங்கத்தினர்தான் சமயத்திற்கு ஏற்றபடி முடிவு செய்தாக வேண்டும். இந்தக் கொள்கையில் நம்முடைய அரசாங்கம் நடந்து கொள்கிற தன்மையைப் பொறுத்துத்தான் நம் எதிர் காலம் சீரும் சிறப்புமாக அமைய முடியும்.

நம்முடைய பாதுகாப்புத் தேவைகளைச் சமாளிக்க நிதி திரட்டும் தன்மையைப் பற்றி முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதுபற்றி அரசினர் எடுக்கின்ற எல்லா முயற்சிகளுக்கும் மக்களின் ஆதரவு பூரணமாக இருக்கும்.

MR. SPEAKER : I would like to know whether the hon. Leader of the Opposition is concluding his speech now or whether he would like to continue his speech in the afternoon.

SRI V. R. NEDUNCHEZHIAN : I would like to continue my speech in the afternoon, Sir.

MR. SPEAKER : All right. The House will now rise for
1–37 p.m. lunch and meet again at 3-00 p.m.

The House then rose for lunch.

(After Lunch—3-00 p.m.)

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, பாதுகாப்பு முயற்சிகளைப் பொறுத்து, நாம் ஆற்றவேண்டிய பணிகளைக் குறித்து, கனம் முதலமைச்சர் அவர்கள் காலையிலே தம்முடைய முன்னுரையிலே தெரிவித்தார்கள். நாட்டிலுள்ள அத்தனைபேரும் சேர்ந்து நாட்டுப் பணிகளிலே ஈடுபடுகின்ற பொழுது, ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பொறுப்புகளைச் செவ்வனே ஆற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். புறநானூற்றுப் பாடலிலே,

" ஈன்றுபுறந் தருதல் என்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறு வாளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

என்று ஒவ்வொருவரும் ஆற்றவேண்டிய கடமைகளைத் தெளிவாக எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். பெற்றெடுத்துத் தருதல் தன்னுடைய கடமை என்றும், பெற்றெடுத்த பிள்ளைக்கு அறிவு புகட்டி, கல்வியூட்டி அவனைச் சான்றோனாக்குவது தந்தையி

3rd November 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

னுடைய கடமையென்றும், போர் செய்வதற்கு வேண்டிய கலங்களை வடித்தெடுத்துக் கொடுத்தல் கொல்லனுடைய கடமையென்றும், தகுதி பார்த்து அவனைப் பணியிலமர்த்துதல் அரசனுடைய கடமையென்றும், வேல்தாங்கி போர் செய்து, அப்போரில் வெற்றியை நிலைநாட்டுவது வீரனைச் சார்ந்த கடமையாகும் என்று தெளிவாகக் கூறியிருக்கிறார்கள்.

அதைப்போன்று, நாட்டிலே மாணவர்கள் ஆற்ற வேண்டிய கடமைகள், சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆற்ற வேண்டிய கடமைகள், கட்சிகள் ஆற்ற வேண்டிய கடமைகள், இன்னும் விவசாயிகள், வியாபாரிகள், தொழிலதிபர்கள், மற்றவர்கள் ஆற்ற வேண்டிய கடமைகள் எல்லாவற்றைப் பற்றியும் நாம் உணர வேண்டும்.

கட்சிகளைப் பொறுத்தவரையில், எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் தங்களுடைய கட்சி மாச்சரியங்களை மறந்து, பாதுகாப்பு முயற்சிகளிலே பணியாற்றவேண்டியவர்களாக இருக்கின்றோம். இந்த நெருக்கடி நேரத்திலே மற்றைய கட்சிகளைக் காட்டிலும் ஆளும் கட்சிக்குத்தான் பொறுப்பு அதிகம் உண்டு என்பதை வலியுறுத்தவேண்டிய அவசியமில்லை. மற்றைய கட்சிகளையும் அரவணைத்துச் செல்கின்ற பொறுப்பு மிக முக்கியமாக ஆளும் கட்சிக்குத்தான் இருக்கிறது. மற்றைய கட்சிகளும் தங்களுடைய கட்சி மாச்சரியங்களை மறந்து, தங்களுடைய கொள்கைகளையும் தாங்கள் வலியுறுத்த வேண்டிய கருத்துக்களையும் எடுத்துரைப்பதற்குப் பதிலாக, தற்பொழுது ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடியான நேரத்திலே பாதுகாப்பு முயற்சிக்காகத் தங்களுடைய முழு ஒத்துழைப்பையும் நல்க வேண்டியவைகளாக இருக்கின்றன. ஆளும் கட்சியும் மேலிருந்து இறங்கிவந்து மற்றையக் கட்சிகள் தருகின்ற அத்தகைய ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறது. இந்த வகையிலே சட்ட மன்ற உறுப்பினர் அனைவரும் ஈடுபடுவதற்கு அரசினர் முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும். பாதுகாப்புக் குழுக்கள் எல்லா மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. எல்லா சட்ட மன்ற உறுப்பினர்களும் அந்தக் குழுக்களிலே இடம் பெறவில்லை என்று தெரிகின்றது. எனவே, எல்லா சட்ட மன்ற உறுப்பினர்களும், அவர்கள் பொது மக்களோடு நெருங்கிப் பழகுகின்ற காரணத்தால், அந்தக் குழுக்களிலே இடம் பெறுவதற்கான வாய்ப்பை அளிக்கவேண்டும். சட்ட மன்ற உறுப்பினர்கள் பொது வாழ்வில் ஈடுபட்டு இருக்கின்றனர். அவர்கள் பொதுமக்களோடு நெருங்கிப் பழகுகின்ற வாய்ப்பு இருப்பதால் அவர்களைப் பாதுகாப்புக் குழுக்களில் இடம்பெறச் செய்தல் வேண்டும். இதைத் தவிர, பல்வேறு துறைகளிலும் ஆற்றல் படைத்தவர்கள், அறிவு படைத்தவர்கள், நெருக்கடி நேரத்தில் போதுமான அளவு உதவி செய்யக்கூடிய வாய்ப்பு, வசதி படைத்தவர்கள் எல்லோரும் இந்தக் குழுக்களில் இடம்பெறுதல் வேண்டும்.

பாதுகாப்பு நிதி திரட்டுகின்ற முயற்சியிலே, சென்ற போர்க் காலங்களில் அதிகாரிகளே பெரும்பாலும் ஈடுபட்டார்கள். பாதுகாப்பு நிதி திரட்டுகின்ற பணியிலே, அதிகாரிகள் தங்களிடமுள்ள

அதிகாரத்தினைப் பயன்படுத்தி வியாபாரிகளிடத்திலும், இன்னும் மற்றவர்களிடத்திலும் நிதி திரட்டுகின்ற காரணத்தால், இயற்கையாகவே ஒருவிதமான மனக் கசப்பு அவர்களிடம் ஏற்பட்டுவிடுகிறது. இதன் காரணத்தால் மனமுவந்து கொடுக்கின்றவர்கள் கூட, பாதுகாப்பு நிதியை ஆர்வத்தோடு கொடுக்க முடியாமல், அச்சுறுத்தலுக்குப் பயந்து, அதிகாரிகளின் ஆணைக்குப் பயந்து கசப்புணர்ச்சியுடன் கொடுக்கவேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டு விடுகிறது. ஆகவே, பாதுகாப்பு நிதி திரட்டுகின்ற பணிகளிலே, அதிகாரிகள் ஈடுபட்டாலும்கூட, சட்ட மன்ற உறுப்பினர்கள், பொதுத் துறையிலே ஈடுபட்டிருக்கின்றவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஒன்றிப்பு மன்றத் தலைவர்கள் இவர்கள் எல்லோரையும் பயன்படுத்திக்கொண்டு பொது மக்கள் ஆர்வத்தோடு நிதி கொடுக்கின்ற வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு செய்தால் தான் பாதுகாப்பு நிதி திரட்டுகின்ற பணி செம்மையாக நடைபெறும்.

சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும், தனிப் பாதுகாப்புக் குழு இல்லையென்று கருதுகிறேன். சென்னை மாவட்டத்தின் பணிகளைக் கவனித்து அவற்றைச் செம்மையாக நிறைவேற்றுவதற்காகவும், சிறு சேமிப்பு போன்ற பல்வேறு திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்றுவதற்காகவும், மற்ற மாவட்டங்களிலே பாதுகாப்புக் குழுக்கள் அமைத்திருப்பதைப்போல் சென்னையிலும் அமைக்கவேண்டும். அந்தக் குழுவிலே சட்ட மன்ற உறுப்பினர்கள், மற்றும் மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் போன்றவர்கள் இடம் பெறுவதற்கான வாய்ப்பினைத் தரவேண்டும்.

சென்னை மாநிலத்தைப் பொறுத்தவரையிலும், அதிகமான அளவில் காய்கறிகள் பயிர் செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபடுதல் வேண்டும். பலர் காய்கறிகள் பயிரிடுவதற்கான இட வசதி, பெற்றிருந்தாலும், பயிர்செய்யவேண்டும் என்ற எண்ணம் அவர்களிடம் இருந்தாலும், அவர்கள் செய்யும் முயற்சிகள் ஈடேறுவதற்கான வாய்ப்புகள் இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக ஹோம் கார்ட்ஸ்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அவர்கள் பொது மக்களிடம் அணுகி, காய்கறிகள் என்ன என்ன பயிர் செய்ய வேண்டும், எப்படிப் பயிர் செய்ய வேண்டும், என்று எடுத்துக்கூறி அவர்கள் அதிகமான அளவில் காய்கறிகளைப் பயிர் செய்வதற்கான வாய்ப்புக்களையும், வசதிகளையும் ஏற்படுத்தித் தந்தால்தான் இந்தத் திட்டத்தினுடைய உண்மையான நோக்கம் ஈடேறும்.

ஆடம்பர விழாக்களை நடத்தாமல், விழாக்களை ஆடம்பரமாக நடத்தவேண்டுமென்ற முயற்சியில் கவனம் செலுத்தாமல், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கவேண்டும். இதிலே அத்தனை கட்சிகளும் நல்ல முறையில் பணிபுரிந்துகொண்டு வருகின்றன. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையிலும், தேசியப் பாதுகாப்பு முயற்சிகளில் முழு ஒத்துழைப்பினைத் தந்துகொண்டு வருகிறது. இனியும் அது தன்னுடைய முழு ஒத்துழைப்பினைப் பாதுகாப்பு முயற்சிகளுக்குத் தந்துகொண்டே இருக்கும் என்பதையும்

3rd November 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

நான் வலியுறுத்தித் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். போர் ஏற்பட்ட நெருக்கடி காலத்தில், திராவிட முன்னேற்ற கழகத்தினுடைய பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்த நாள் விழாவை ஆடம்பரமாகக் கொண்டாடவேண்டுமென்ற முறையிலே அதற்கான முயற்சியிலே ஈடுபட்டிருந்தும் அத்தகைய முயற்சிகளை—நெருக்கடி நேரத்தை முன்னிட்டு—கைவிட்டுவிட்டு, பாதுகாப்பு முயற்சிகளுக்கான பணிகளிலே ஈடுபட்டிருக்கின்றோம்; பாதுகாப்பு நிதி திரட்டுவதிலும் முழு ஒத்துழைப்பையும் தந்து கொண்டு இருக்கின்றோம். அதைத் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகம் தரும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை 4,000 அளவுக்கு அகப் படையினரின் எண்ணிக்கையைப் பெருக்க வேண்டுமென்று அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. அகப்படையினரின் எண்ணிக் கையைப் பெருக்கியே தீர வேண்டும். உணவுக் கார்டுகள் வழங்கு வதிலும், இருட்டடிப்புக் காலங்களிலும் அகப்படையினர் செம் மையாகப் பணியாற்றி வந்தனர். உணவுப் பொருள்களைப் பொறுத்து தன்னிறைவு பெறும் கொள்கைக்கு ஆக்கமும் ஊக்க மும் தரவேண்டியது அவசியமாகும். தொழில் முயற்சியிலே தொழிலைப் பெருக்க அந்நியச் செலாவணியைச் செலவழிப்பது பலன் தரத்தக்கது. ஒரு லட்சம் ரூபாய் கொடுத்து ஒரு மெஷினை வாங்கினால் அதன் மூலம் பத்து லட்சம் ரூபாய் வருமானம் பெறக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆனால் உணவுப் பொருள்களை இறக் குமதி செய்ய அந்நியச் செலாவணியைப் பயன்படுத்தினால் எந்த உருவான பலனையும் தராது அது செலவழிந்து விடுகிறது. ஆகவே, தொழிற் துறையிலே ஐந்து லட்சம் ரூபாயைச் செல்வு செய்தால் அதன் மூலம் ஒரு கோடி ரூபாய் வருமானத்தை நாம் எதிர்பார்க்க முடியும்.

"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு"

என்றார் வள்ளுவர். பிற நாட்டை நாடாத அளவுக்குத் தன்னு டைய நாட்டின் வளத்தைப் பெருக்கி வைத்திருக்கின்ற நாடுதான் நாடு என்று சொல்லத்தக்கது என்ற இலக்கணத்தை வகுத்துச் சென்றார் வள்ளுவர். இப்போது நாம் அதன் உண்மையையும் தன்மையையும் மிக நன்றாக உணருகிறோம். பொதுமக்கள் எல் லோரும் சேர்ந்து ஊக்கமும் ஆக்கமும் தரவேண்டுமென்பதற்கான பணிகள் மாவட்டந்தோறும் வளருதல் வேண்டும். அதற்கான எல்லா முயற்சிகளையும் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். அரசியல் கட்சிகள் எல்லாம் தங்களுடைய முழு ஒத்துழைப்பும் தருகின்ற நிலையிலே திராவிட முன்னேற்றக் கழகமும் தன்னுடைய முழு ஒத்துழைப்பையும் ஆதரவையும் தரும் என்று இந்தத் தீர்மானத்தை வழிமொழியும் வகையில் எடுத்துக் கூற விரும்பு கிறேன். போர் முயற்சி இந்த நாட்டினுடைய ஜனநாயகத்தைக் காப்பாற்றவும், இந்த நாட்டினுடைய மண்ணைக் காப்பாற்றவும், நாட்டினுடைய பெருமையையும் புகழையும் காப்பாற்றவும்

மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்று. எந்த நாட்டுக்கும் இந்த நாட்டை அடகு வைத்துக் காப்பாற்றக் கூடிய நிலைக்கு இந்தியா போகாது என்ற இந்திய அரசு எடுத்திருக்கும் முடிவு முழு மனத்தோடு ஆதரிக்கப்பட வேண்டிய ஒன்று. இரண்டாவது உலகப் போர்க்காலத்தில் 'ரீச் ஸ்டாக்கில்' இருந்து ஹிட்லர் பேசியபோது, அவனுடைய வலிவு குன்றி மற்ற நாடுகள் வெல்லும் என்ற நிலையில் 'சமாதானத்துக்குத் தயார்' என்று தெரிவித்தபோது, சர்ச்சில் அவர்கள் தன்னுடைய அந்நிய நாட்டுச் செயலாளர் மூலமாகப் பதில் உரைத்தார் :

"We shall not stop fighting until freedom is secured"

என்று. அந்நிய நாட்டுச் செயலாளர் வாயிலாக சர்ச்சில் அந்தக் கருத்தைத் தெரிவித்தார். இந்த நாட்டின் மானத்தைக் காப்பாற்றும் அளவுக்கு இந்திய அரசு எடுக்கும் முயற்சிகளை வரவேற்று அந்த நோக்கத்தை நிறைவேற்றுகிற முறையில் இந்த அரசு எடுக்கும் எல்லா முயற்சிகளுக்கும் ஆதரவைத் தருவோம் என்று கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, சர்க்கார் அதிகாரிகளைக் கொண்டு பாது காப்பு நிதிக்குப் பணம் வசூல் செய்வது பணம் கொடுக்கிறவர்களைத் தொந்தரவு செய்வதாகும் என்று சொன்னார்கள். அத்தகைய நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லை. எல்லா மாவட்ட கலெக்டர்களிடமும் நான் அதைப் பற்றித் தெரிவித்திருக்கிறேன். அவர்களாகக் கொடுத்தால் அதை வசூல் செய்து தவறுதல் ஏற்படாமல் கவனித்துக் கொள்கிறார்கள். கொடுக்கிறவர்கள் எங்கும் கொடுக்கலாம். பல மாவட்டங்களிலே பஞ்சாயத்து யூனியன்கள் முன் வந்து அளிக்கிறார்கள். தங்களுடைய அதிகாரத்தைப் பிரயோகித்து பணம் வசூல் செய்ய வேண்டுமென்ற நிமித்தம் அரசாங்க அதிகாரிகளுக்கு இல்லையென்று கூற விரும்புகிறேன்.

* **திரு. சா. கணேசன் : கனம் சபாநாயகர் அவர்களே,** இன்றைய தினம் நமது முதலமைச்சர் அவர்களாலே சபையின் முன்னே கொண்டு வரப்பெற்றிருக்கின்ற இந்தத் தீர்மானத்தை முழு மனத்தோடு ஆதரித்துப் பேச முன் வருகிறேன். அறிவுள்ள, ஆண்மையுள்ள மக்கள் நிரம்பிய ஒரு நாடு இந்திய நாடு. நம்முடைய மரபு 'உயிரிலும் பெரிது மானம்' என்று நம்பி வருகிற ஒரு ஊற்றம். இந்த நிலையிலே நம்முடைய மானத்திற்கே ஒரு சவால் விடுவது போல், நம்முடைய வீரத்திற்கே ஒரு சவால் விடுவது போல், நம்முடைய சுதந்திரத்திற்கே ஒரு சவால் விடுவது போல், வேற்று நாட்டினர் இந்த மண்ணை ஆக்கிரமிக்கத் தொடங்கினார்கள். இது பல ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்று நாம் கொஞ்சம் உள்ள ஆறுதலோடு, மனத் திருப்தியோடு நிற்கிறோம். 1962-ஆம் ஆண்டிலே நாம் கொஞ்சம் தலை குனிய வேண்டிய நிலையிலே இருந்தோம்—சீனனை உடனடியாக விரட்டியடிக்க முடியாத நிலையினாலே. காரண காரியங்களுக்குள்ளே நான் நுழைய விரும்பவில்லை. ஆண்டவன் அருளினாலும், வீரர்களின் திராணியினாலும், சர்க்காரின் உறுதிப்பாட்டாலும், பின்னே வந்த பக்கிப் படையை இந்த

3rd November 1965] *[திரு. சா. கணேசன்]*

தேச வீரர்கள் ஓட ஓடத் துரத்தியடித்த பெருமை இந்தியாவின் புகழை உலகெங்கும் நிலைநாட்டி விட்டது என்று சொல்லவேண்டும். அந்த ஒரு மனத் திருப்தியிலேதான் நாம் இன்று இங்கே நிற்கிறோம். அந்த நிலையிலே வந்த தீர்மானத்தை மனப்பூர்வமாக ஆதரிப்பதோடு மட்டும் அமையாமல், ஏதோ பகைவனை விரட்டி அடித்து விட்டோம் என்ற இறுமாப்பிலே நாம் அமைந்து அல்லது தணிந்து கட்டுப்பட்டு விடக் கூடிய நிலையில் நிலைமை இல்லை. இது பண்டைக்காலம் மாதிரியான போரோ அல்லது நவீன காலப் போர் மாதிரிகூட இல்லாமல் ஏதோ நினைத்தபோது நினைத்ததைச் செய்யக் கூடிய ஒரு இழி நிலையிலே, திருட்டு நெறியிலே சென்று கொண்டிருக்கக் கூடிய ஒன்று. இன்று முடியுமா அல்லது நாளை முடியுமா என்று கணக்கிட முடியாத நிலைமையிலே, நீண்ட காலப் போராகத்தான் இருக்குமென்று கனம் பிரதம மந்திரியவர்கள் கூறியது முற்றிலும் சரியான கணிப்பு என்பதை நாம் உணர வேண்டும். அதுமட்டுமல்ல, இந்த நிலையிலே இந்த ஆக்கிரமிப்பு என்ற பெயரிலே நடைபெறுகிற சலசலப்புகள் அல்லது போராட்டங்கள் அல்லது போர்—இவற்றிலே நாம் முழு கவனமும் செலுத்தி நமது முழு ஆற்றலையும் அதற்கென்றே அர்ப்பணிக்கவேண்டிய நிலையில் நம் நாடு இருக்கிறது. ஆகவே, இப்போது நமக்குள்ளே பலவிதமான வேறுபாடுகள் இருக்கலாம்; கொள்கை அல்லது நம்பிக்கைகளிலே முரண்பாடுகள் இருக்கலாம். ஆனால் இவை மாறுபாடாகப் பரிணமிக்காத நிலையிலே, முழு ஒற்றுமையோடு 40 கோடி மக்கள் ஒரு எண்ணத்தோடு நிற்கக் கூடிய நிலையிலே, 80 கோடி கைகள் இணைந்து போர் புரியக் கூடிய நிலையிலே, இன்று நாம் இருக்கிறோம். அந்த மகிழ்ச்சியிலே, அந்தத் திராணியிலே நாம் வாழ்கிறோம்; அப்படி வாழவும் வேண்டும்.

ஆகவே, பிற துறைகளுக்கெல்லாம் இப்போது நான் போக விரும்பவில்லை. முன்னமேயே பேசியவர்களுக்கு, மற்றவர்கள் பேசியதற்கு சமாதானமோ அல்லது விளக்கங்களோ, அல்லது மறுப்போ கூறப் போவது இல்லை. இந்தப் போரிலே நாம் மிகப் பெரும் அளவில் ஆறுதல் அடைவதற்குரியது, இந்த சகாப்தத்திலே இந்திய நாட்டிலே உள்ள போர் வீரர்கள் ஊக்கமுடையவர்களாக, நல்ல உணர்வு உடையவர்களாக உடல் வலு உடையவர்களாக மட்டுமின்றி, மதியூகமும், நல்லறிவும் நிரம்பியவர்களாக இருக்கிறார்கள் என்பதே! இன்று உலக ராணுவ மேதைகள் இதை நன்கு புரிந்து கொண்டு விட்டார்கள். புரிந்து கொண்டு விட்டது மட்டுமல்ல; பிறருக்கு விளக்கவும் துணிந்து விட்டார்கள். இதை நாம் மனதில் கொள்ளவேண்டும். இந்நிலையில் கூட அக்கியான் லீக், லிக் ஆஃப் நேஷன்ஸ், இப்போது யுனைட்டட் நேஷனஸ் என்றெல்லாம் வளர்ந்திருக்கிற சர்வதேச அரங்கு இருக்கிறதே, முதல் அமைச்சர் அவர்கள் அதைப் பற்றியெல்லாம் கூறினார்கள். அது ஒரு நீதி மன்றமாக அமையாது ஏதோ குழுக்கள் நடத்துகிற பட்டி மன்றங்கள் போல் அமைந்திருக்கிறது. இல்லாவிட்டால் முதல் அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் ஜனாப் புட்டோ மனிதனால் உச்சரிக்கத் தகாத, மனிதத் தனம் உடையவர்கள் உச்சரிக்கத் தகாத சொற்களை உச்சரிக்கவும் இவ்வளவு பெரிய நாடுகளின்

[திரு. சா. கணேசன்] [3rd November 1965

பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டிருக்கும் நிலையும் இருக்கிறதே அது உலகிற்கே ஒரு பெரிய அவமானம். இதை நாம் ஒவ்வொரு இடத்திலும் சுட்டிக்காட்டி அதைக் கண்டிக்க நாம் கடமை பட்டிருக்கிறோம். அதேபோல்தான் அவர்களில் சர்வாதிக்கம் பெற்று அமைச்சர் பெருமானாக வீற்றிருக்கிறார் ஊ தாண்ட், அவர்களுடைய உண்மைக்கு மாறான நிலைமையை பிறழ வைக்கிற சொற்களையும், ஸ்டேட்மென்டுகளையும் நாம் உணர்ந்து விட்டோம். அவர்கள் போக்கு ஒரு தலைச் சார்புடையதாக இருக்கிறது என்பதையும் நாம் வலியுறுத்திக் கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறோம் என்பதையும் நான் சொல்லிக் கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். அன்றே நாம் சீனனை துரத்தி அடித்திருப்போமானால் இந்த நிலைகள் எல்லாம் நமக்கு வந்திருக்க மாட்டாது. நிச்சயமாக பாகிஸ்தான் நம் மீது படை எடுக்க நெஞ்சினால் கூட துணிந்திருக்க மாட்டாது. இப்போது நாம் அவர்களை அடித்த அடி இருக்கிறதே அவர்களது பிரம்மாண்டமான கருவிகளை நொறுக்கிய நொறுக்கு இருக்கிறதே இதைப் பார்த்த பிறகுதான் இன்று உலகம் இந்தியர்கள் காந்தி அடிகள் சொன்னபடி வெறும் அஹிம்சை, அஹிம்சை என்று சொல்லிக் கொண்டிருக்கிற கோழைகள் அல்ல, சந்தர்ப்பம் வருமானால் காந்தி அடிகள் சொன்னதுபோல் கோழைமையை விட பலாத்காரம் பல மடங்கு உயர்ந்தது என்பதை உணர்ந்திருக்கிறார்கள் என்பதை தெளிந்து கொண்டு விட்டது. "Violence is better than cowardice" என்று காந்தி அடிகள் கூறுவார்கள். அவர்களுடைய அதே வார்த்தைகள் இவை. போர் நிலைக்கு வரும்போது செம்மையான நிலையில் நின்று, உறுதியான நிலையில் நின்று, பிரமாதமான வழியில் பாடம் கற்பித்தார்கள் இந்தியர்கள் என்று இன்று உலகம் ஒப்புக் கொண்டிருக்கிறது, இதை அன்றே ஒப்புக் கொண்டிருக்கும். இவை போன கதைகள். இனி இப்போதிருக்கிற நிலையில் இங்கிருக்கிற நாம் நம்முடைய மொழியை நினைத்து, நம்முடைய ஜாதியை நினைத்து, அல்லது நம் மதம், நம்பிக்கை, குலம் என்ற நினைவுகளை எல்லாம் அகற்றி விட்டு, நம் வேறுபாடுகளை எல்லாம் மூட்டை கட்டி ஒதுக்கி வைத்து விட்டு நாம் அனைவரும் இந்தியர்கள் என்ற ஒரே ஒருமைப்பாடான உணர்ச்சியோடு எவன் எதிர்த்தாலும் சரி, அவன் சீனனாயிருந்தாலும் சரி, பக்கி ஈனனாக இருந்தாலும் சரி, எவன் எதிர்த்தாலும் அவனை புறமுதுகிட்டு ஓட்டுவது நம் தலையாய கடமை என்று எண்ணித் துணிய, துணிந்து செயல்பட நாம் முனைய வேண்டும். இலக்கியங்களைப் பற்றியெல்லாம் பேசினார்கள், புறநானூறு பற்றியெல்லாம் பேசினார்கள். சோழன் நலங்கிள்ளி கூறுகிறான்,

"மெல்ல வந்தென் னல்லடி பொருந்தி
ஈயென இரக்குவ ராயிற் சீருடை
முரசுகெழு தாயத் தரசோ தஞ்சம்
இன்னுயி ராயினுங் கொடுக்குவெ விந்நிலத்
தாற்ற லுடையோ ராற்றல் போற்றாதென்
உள்ள மெள்ளிய மடவோன் றெள்ளிதிற்
றுஞ்சுபுலி யிடறிய சிதடன் போல

3rd November 1965] *[திரு. சா. கணேசன்]*

உய்ந்தனன் பெயர்தலோ வரிதே மைந்துடைக்
கழைதின் யானைக் காலகப் பட்ட
வன்றிணி நீண்முளை போலச் சென்றவண்
வருந்தப் போரேஎ ருயிற் பொருந்திய
திதி னெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தன் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைகவென் றூரே.".

என்று. பெண்பாற் புலவரான, பொன் முடியார் கூறுகிறார்,

" ஈன்றுபுறந் தருத லென்றலைக் கடனே
சான்றோ ருக்குதல் தந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறு வாளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே".

இவற்றையெல்லாம் எடுத்துப் பார்த்தால் ஏராளமான உணர்ச்சி ஊட்டத் தக்க கவிதைகள் நமக்கு உண்டு. அவற்றை எல்லாம் நம் ஆட்சி ஆங்காங்கு பிரபலப்படுத்தி முன்னைத் தமிழன், முன்னை இந்தியன் என்ன உணர்ச்சியோடு பாடுபட்டார்கள் என்பதை எடுத்து உணர்த்த வேண்டும்.

" கெடுக சிந்தை ; கடிது இவள் துணிவே ;
மூதில் மகளிராதல் தகுமே ;
மேல்நாள் உற்ற செருவிற் இவள் தன்னை,
யானை எறிந்து, களத்து ஒழிந்தனனே ;
நெருநல் உற்ற செருவிற்கு இவள் கொழுநன்
பெரு நிரை விலங்கி, ஆண்டுப் பட்டனனே ;
இன்றும், செருப் பறை கேட்டு, விருப்புற்று மயங்கி
வேல் கைக் கொடுத்து, வெளிது விரித்து உடீஇ,
பாறு மயிர்க் குடுமி எண்ணெய் நீவி,
ஒரு மகன் அல்லது இல்லோள்,
'செருமுகம் நோக்கிச் செல்க' என விடுமே"

என்கிறான் புறநானூற்றுப் புலவன்.

இவைகளைப்பற்றி யெல்லாம் நாம் உணர்த்தவேண்டும். இன்றைய நிலையில் இந்த மாதிரிச் செய்திகளை எல்லாம் பரப்ப வேண்டும். இதை நாம் செய்ய வேண்டும். அதே போல்தான் இந்தச் சந்தர்ப்பத்தில் நம்முடைய கட்சி இது என்ற மனோபாவமோ, தேர்தல் வந்து விட்டது அதற்கு என்ன வழி, எதை அதற்குச் சாதாமாக பயன் படுத்திக் கொள்ளலாம் என்ற உணர்வோ இவற்றை எல்லாம் அறவே ஒழித்து விட்டு தேசம் ஒன்றைக் காப்பது தான் நம் கடமை என்ற நிலையில் நாம் பாடுபட வேண்டும். அந்த உணர்ச்சி நமக்கு இருக்க வேண்டும். என்னைப் பொறுத்த வரையில் எடுத்துக் கொள்ளுங்கள், நான் ஆளும் கட்சிக்கு எதிர்க்கட்சிக் காரன். காங்கிரஸை எப்படித் தோற்கடிப்பது என்பதில் இன்று நான் என் சிந்தனையை செலுத்தப் படாது. பகைவனை எப்படி விரட்டி அடிப்பது, எப்படிப் பகைவனைத் தோற்கடிப்பது என்ற முறையில்தான் என் சிந்தையும், செயலும் தொழிற்பட வேண்டும்.

[திரு. சா. கணேசன்] [3rd November 1965

அதேபோல்தான் ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சிகளாக இருந்தாலும் சரி அவை எல்லாம் தேர்தலையோ மற்றவை பற்றியோ கணமும் சிந்தியாமல் நம் தேசத்தின் சுதந்திரத்தை, நம் தேசத்தின் மானத்தைக் காப்பது நம் கடமை என்று உணர்ந்து இவற்றைக் காக்க நாம் முழுக்க முழுக்க நம்மை இதில் ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும். போரிலே ஒருவன் பணி புரிகிறுன் என்றுல் ஊரிலே நூறுபேர்கள் பணி புரிய வேண்டும். ஒரு சிப்பாய் தளராமல் இருக்க எல்லா வகையிலும்--வெறும் படைக்கலன்கள் மட்டுமல்ல, தளவாடங்கள் மட்டுமல்ல—உணவு உள்பட எல்லாவற்றையும் உண்டாக்க போர்க்களத்தில் ஒருவர் ஈடுபடுகிற போது ஊர்க் களத்தில் நூறுபேர்கள் பணி புரிய வேண்டும். அப்போதுதான் படையினருக்கு எல்லாம் செம்மையாகச் சென்று கொண்டிருக்கும். அப்போதுதான் அவர்களுக்கு வேண்டிய உணவு, உடை, போன்றவை தடங்கல் இன்றி போய்க் கொண்டிருக்கும். இந்த நிலையில் இந்த தேசத்தில் உள்ள நாம் நம் தேவைகளை எவ்வளவிற்குச் சுருக்கிக் கொள்ள முடியுமோ—கருமித்தனம் என்று சொல்கிற அளவிற்கு—அவ்வளவுக்குச் சிக்கனத்தை நாம் கடைப்பிடிக்க வேண்டும். அப்படிச் சிக்கனத்தைக் கடைப் பிடிப்பதன் மூலம் எஞ்சுகிற பண்டங்கள் எல்லாவற்றையும் போருக்கு என்று, போர் வீரர்களுக்கு என்று நாம் ஒதுக்கி வைக்க முன்வர வேண்டும். இந்த மாதிரியான உணர்வு நமக்கு ஏற்படுகிறபோது தான் உண்மையிலேயே போரிலே நிலையான வெற்றியை நாம் பெற முடியும், என்பதை துளியும் மறந்து விடப்படாது. முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அரிசியோ, கோதுமையோ அமெரிக்காவில் இருந்து வருகிறது வருகிறது என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. வரட்டும், வராமலே இருக்கட்டும். நாம் அதை எதிர்பாராமல் நமது தேவையை நாமே நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் நமக்கு வரவேண்டும். எவனையும் எதற்கும் எதிர்பாராமல் என்னைக் காக்க என்னால் முடியும் என்ற தன்னம்பிக்கையை ஆண்டவன் மீதுள்ள நம்பிக்கையோடு இணைத்து செயல்படும்போது நம் எண்ணம் சித்தி பெறும். அந்நிலை நமக்கு வரவேண்டும். இந்நிலையில் தான்யங்களின் உற்பத்தியைப் பெருக்க நாம் வழி செய்யவேண்டும். விவசாயத்துறையில் இருக்கிறவர்களுக்கு முழுக்க முழுக்க ஊக்கம் கொடுக்க முயல வேண்டும். ஆட்சி அதற்கு வேண்டிய வாய்ப்புக்களை எல்லாம் கொடுக்க வேண்டும். எங்கும் தான்யங்களை அவர்கள் உற்பத்தி செய்யலாம் என்று பகிரங்கமாகப் பிரகடனம் செய்யவேண்டும் இது புறம் போக்கு நிலமா, அந்த நிலமா இந்த நிலமா என்றெல்லாம் பேசக் கூடாது. எல்லா நிலத்திலும் யார் வேண்டுமானாலும் உணவு தான்ய உற்பத்தி செய்யலாம் என்று உத்தரவு இட வேண்டும். உழவு செய்யக் கூடிய நிலங்கள் காடுகள் என்ற பேரால் சில இடங்களில் வேலியிட்டுத் தடுக்கப்பட்டு இருப்பதைப் பார்க்கிறோம். அங்கெல்லாம் உணவு தான்யங்களை உற்பத்தி செய்யுங்கள் என்று விவசாயிகளுக்கு உற்சாகம் அளிக்க வேண்டும். விவசாயிகளுக்கு நில வரியைக் கணிசமான அளவிற்குக் குறைத்து விட்டு பேருக்கு மட்டும் வரி விதித்து முடிந்த வரையில் நீங்கள் உற்பத்தி செய்யுங்

3rd November 1965] [திரு. சா. கணேசன்]

கள் என்று சொன்னால் அவர்கள் உற்சாகத்தோடு விவசாயத்தில் ஈடுபட்டு ஏராளமான தான்யங்களை உற்பத்தி செய்து நம் தேவை போக பிற நாடுகளுக்கும் வாரி வழங்கும் அளவிற்கு தான்யம் இங்கு பெருகும். இவற்றையெல்லாம் நாம் மறந்து விடக் கூடாது. இதே சந்தர்ப்பத்தில் பெரியாறுத் திட்டத்தின் மூல மாக சிவகங்கை, உசிலம்பட்டி போன்ற இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வேலைகளை எல்லாம் தொடர்ந்து மேற் கொள்ளவேண்டும். இதற்கான வழிவகைளை உடனடியாக மேற் கொள்ளவேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். நாம் ஒவ்வொருவரும் மக்களுடைய பரிபூரணமான பிரதிநிதிகள். நாம் மக்களிடத்தில் சென்று, வதந்திகளைக் கேட்பது கூடாது, அதை நம்புவது கூடாது, அதைப் பேசுவது கூடாது, பரப்புவது கூடாது, இவை அவ்வளவும், பாகிஸ்தான் படையெடுப்பு எப்படி துரோகம் என்று சொல்லுகிறோமோ அவ்வளவு துரோகம் என் பதை உணர்த்த வேண்டிய கடமை நமக்கு உண்டு. இதைப் பற்றி தினமும், தெய்வ நம்பிக்கை உள்ளவர்கள், "இந்தியா பரி பூரணமாக வெற்றி பெறவேண்டும்; இதன் மூலமாக உலகத்தில் அமைதி நிலவச் செய்ய ஆண்டவனே அருள் செய்க!" என்று பிரார்த்தனை செய்யவேண்டும். தெய்வ நம்பிக்கையில்லாதவர்கள் "இந்தியா வெற்றி பெறவேண்டும், இந்தியா வெற்றி பெறவேண் டும்" என்று சிந்தனை செய்யவேண்டும். இப்படிப்பட்ட நெறியில் அனைவரும் ஈடுபடவேண்டும். நம்மால் முடிந்த வரை எல்லாவற் றையும் உடல், பணம், பண்டம் அனைத்தையும் போரில் ஈடுபட் டிருக்கிறவர்களுக்கு வாரி வழங்கவேண்டும். இதற்காக நம்மை நாம் தயார் செய்து கொள்ளவேண்டும். இன்னும் சொல்லப்போ னால், வேறு மாநிலங்களை விட தமிழ்நாடு போன்ற தென் மாநிலங் கள் அதிகமாகச் செய்யவேண்டிய கடமையிருக்கிறது. வடக்கே யிருக்கிறவர்கள் அபாய எல்லைக்குள்ளேயே அகப்பட்டுக் கொண்டு விழித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆண்டவன் அருளாலே தென் இலங்கை கட்சி மாறிற்று. இதன் காரணமாக தென்னாட்டுக்கு ஆபத்து என்கின்ற நிலைமை இல்லாமல் மாறிவிட் டது. இல்லையென்றால் இங்கும் ஒரு போர்க்களம் தோன்றியிருக்க லாம். இப்போதுள்ள நிலையில் ஆபத்துக்கு வெகு தூரத்தில் இருக் கிற நாம் ஆபத்தில் இருக்கிறவர்களுக்கு உதவி செய்யவேண்டிய கடமையுடையவர்களாக இருக்கிறோம். முக்கியமாகப் போர்க் களத்திற்குத் தேவையான பொருட்களை உபயோகிப்பதில்லை என்று நாம் ஒவ்வொருவரும் முடிவு செய்து கொள்ளவேண்டும். அதாவது உருளைக் கிழங்கு, கருவாடு போன்றவற்றை நாம் உபயோகிக்காமல் இருக்கலாம். (குறுக்கீடு) அதற்கடுத்த படியாக கள்ளமார்க்கட், பதுக்கல் இவைகளைப்பற்றி இங்கு பேசப்பட்டது. இப்போது நடைபெறுகின்ற யுத்தம் முன்னால் நடைபெற்ற யுத்தம் போன்றது அல்ல என்பதை வியாபாரிகள் மனதில் உணரவைக்க வேண்டும். இந்த யுத்தம் நம்மை வாழ்விப்பதற்கு நடைபெறுகிற யுத்தம். அடுத்த வீடு எரிகிற போது வேண்டுமென்றால், காமிராவை வைத்துக்கொண்டு போட்டோ எடுக்கலாம். ஆனால் நம்முடைய வீடே எரிந்து கொண்டிருக்கின்ற நேரத்தில் காமிராவைத் தேட

3-:0 p.m.

[திரு. சா. கணேசன்] [3rd November 1965

முடியாது, தண்ணீர் தொட்டியைத்தான் தேட வேண்டும். தப்பு செய்கின்ற வியாபாரிகளுக்குக் கடுமையான தண்டனை கொடுக்க வேண்டும். தவருன முறையில் அரிசியைக் கடத்துகிற லாரி ஏதாவது பிடிபட்டால் வெறும் ஆயிரம் ரூபாய் மட்டும் ஃபைன் போதாது. பிடித்த இடத்திலேயே லாரி பறிமுதல் செய்யப்பட வேண்டும். குறைந்தது 25,000 ரூபாயாவது ஃபைன் போட வேண்டும். இப்போதுள்ள நிலையில் 50 லாரிகள் போனல் ஐந்து லாரிகள்தான் பிடிபடுகின்றன. இதையும் அரசாங்கம் மனத்தில் கொள்ளவேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் என் சொந்த சம்பந்தமாக நான் சொல்ல விரும்புவது, இந்தப் போரில் என்னல் முடிந்த அளவுக்குக் கைங்கரியம் செய்வேன். எவற்றையெல்லாம் இழக்க முடியுமோ அவற்றையெல்லாம் இழப்பேன் என்கின்ற முடிவை ஏற்கனவே நான் ஏற்றுக்கொண்டுவிட்டேன். குறிப்பாக இந்த ஆண்டில், ஆண்டுதோறும் நடத்தப்பட்டுவரும் கம்பன் திருநாள் படாடோபமில்லாத வகையில், சமாதியில் மட்டும் சிறிய அளவில் நடைபெறும். இதன் மூலமாக கிட்டத்தட்ட 1,500 ரூபாய் வரை மிச்சம் வரும் என்று நம்புகிறேன். இதை யுத்த நிதிக்குக் கொடுக்க முடிவு செய்துவிட்டேன். இவை தவிர போர் மேலும் பலமானல் என்னல் இயன்றமட்டும் அனைத்தையும் வழங்குவேன் என்பதையும், கனம் சபாநாயகர் அவர்களே, தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொண்டு அமைகின்றேன். ஜெய் ஹிந்த்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் பிரேரேபித்துள்ள தீர்மானத்தை நான் முழு மனதுடன் ஆதரிக்கின்றேன். நான் சில திருத்தங்களைக் கொடுக்க வேண்டும் என்று முயற்சித்தது என்னிடம் மாறுப்பட்ட கருத்து இருக்கிறது என்ற காரணத்திற்காக அல்ல. ஆனல் என்னிடமுள்ள திருத்தங்களை எல்லாம் முதலமைச்சர் ஒப்புக்கொள்ள முடியாத நிலையில்—அதாவது அதிகாரப் பொறுப்பில் இருக்கின்ற காரணத்தால்—முழுவதையும் ஒப்புக்கொள்ளாமல் இருக்கலாம். அந்தக் கருத்துக்களை எல்லாம் எடுத்துக் கூறுவதற்காகத்தான் நான் திருத்தங்களாகக் கொடுக்க விரும்பினேன். இருப்பினும் தீர்மானம் சம்பந்தப்பட்டவரையில் எனக்கும், என் கட்சிக்கும் இதில் பூரணமான உடன்பாடு உண்டு. இந்த நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்பதில், அதில் ஈடுபடுவதில் எங்களுடைய கட்சி ஊழியர்கள் முன்னிலையில் நிற்பார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதில் அரசியல் காரணங்களோ அல்லது கட்சிக்கண்ணோட்டங்களோ குறுக்கே வரவிடமாட்டோம் என்பதையும் எடுத்துக்கூற விரும்புகிறேன். இவ்வளவு முக்கியமான ஒரு நிகழ்ச்சியில் உண்மையான பகைவன் யார், நண்பன் யார் என்பதை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். இதைப்பற்றி பிரதம மந்திரியோ மற்றவர்களோ கருத்துக்கள் சொல்வது பெரிய ராஜ தந்திரமாக இருக்கலாம். ஆனல், நாம் இதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். பாகிஸ்தான் இந்தியா மீது இத்தகைய பகைமை உணர்ச்சி கொள்ளக் காரணம் என்ன? இரண்டு நாடுகளும் ஒன்ருக

இருந்தோம். ஒரே சமயத்தில்தான் பிரிந்தோம். நம்மைவிட அவர்கள் வளர்ச்சி அடைந்தவர்கள் அல்ல. முஸ்லீம் நாடு என்ற ஆசையின்பேரில் அங்கு போய் இங்கே திரும்பி வந்தவர்கள் பலரை எனக்குத் தெரியும். ஆரம்ப காலத்தில் எவ்வளவோ மோசமாக இருந்தது. இப்படிப்பட்ட பாகிஸ்தானுக்கு எப்படி இவ்வளவு துணிச்சல் ஏற்பட்டது? காஷ்மீர் மட்டும் பிரச்னையாகயிருந்தது, அவர்களுக்கு இருந்த மண் ஆசை மட்டும் காரணம் என்று சொல்லி விட முடியாது. பதினெட்டு வருடங்களாக இதே நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. நான் ஏதோ என்னுடைய அரசியல் கருத்துக்காக சொல்லுகிறேன் என்று நினைக்கவேண்டியதில்லை. ஆகஸ்ட் 15-ம் தேதி சுதந்திரம் பெற்றோம். 17-ம் தேதியிலிருந்து ஊடுருவல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகஸ்ட் 31-ம் தேதி பெரிய கலகம் ஏற்பட்டது. ஆயுதம் தாங்கிய மலைஜாதியினர் கலகம் செய்தனர் என்று சொல்லப்பட்டது. காஷ்மீரில் முஸ்லீம்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். அப்படியிருக்கும் போது இந்தக் கலகக்காரர்களுக்கு உடை கொடுத்து உதவியது யார்? ஆயுதங்கள் கொடுத்து உதவியது யார்? இந்த சம்பவங்களை எல்லாம் பார்க்கிறபோது, சுதந்திரத்தைத் தந்துவிட்டுப் போனதோடு மட்டுமில்லாமல், இரண்டு பேரும் சண்டை போட்டுக் கொள்ளட்டும் என்று விதை விதைத்துவிட்டுப் போனது பிரிட்டிஷ்காரர்கள்தான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. நாட்டைப் பிரிப்பதற்கு என்ன காரணம் ஏற்பட்டது? அதற்கான சூழ்நிலை என்ன ஏற்பட்டது என்பதையும் நாம் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். இடைக்காலத்தில் ஆட்சியை ஏற்றுக்கொள்ள நேர்ந்த போது முஸ்லீம் லீக் தலைவர்களும் காங்கிரஸ் தலைவர்களும் சேர்ந்துதான் ஆட்சியை நடத்தினார்கள். இவ்விதம் இருந்தவர்களைப் பிரிப்பதற்குக் காரணமாய் இருந்தது பிரிட்டிஷ் அரசாங்கம், அதாவது, அன்றையதினம் பிரிட்டிஷ் ராஜதந்திரியாக இருந்த இந்தியாவின் நண்பன் என்று சொல்லிக்கொள்ளும் மௌண்ட்பேட்டன்தான். இவர் வெகு தந்திரமாகப் பிரித்து, இரண்டு பக்கத்திலும் ராணுவத்தை ஒன்றோடொன்று மோதவிடும்படி விட்டுப்போய்விட்டார். அப்படிப்பட்டவர் இன்றைக்கும் இந்தியாவின் நண்பர் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நண்பர்களில் பலவிதம் உண்டு, அதில் ஒருவித நண்பராக இருக்கலாம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: பலவகை நண்பர்கள் இருக்கலாம். ஆனால் நாம் புரிந்துகொள்ள வேண்டும் அல்லவா யார் உண்மையான நண்பர்கள் என்று? முதல் அமைச்சர் அவர்கள் பேசும் போது குத்தலாகப் பேசுவது, நான் அடுத்தபடியாக சோவியத் யூனியன் தான் உண்மையான நண்பர்கள் என்று சொல்லுவேன் என்று எதிர்பார்த்துத்தான். அப்படியானால் பூட்டோ திட்டிய போது சும்மாதானே உட்கார்ந்திருந்தார்கள் என்று . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் பேசியபோது, சில நாடுகள், முக்கியமாக ஒரு நாடு தொடர்ந்து உதவி அளித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னேன். இருக்கிற நிலைமையை எடுத்து விளக்குவதில் நான் ஒன்றும் அச்சப்படவில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அதேமாதிரித்தான் மவுண்ட் பேட்டன் காஷ்மீர் அரசன் தயங்கிக்கொண்டிருந்தபோது எழுதுகிறார் கடிதம். 'பாகிஸ்தானுடன் வேண்டுமானால் இணைந்து கொள்ளலாம், அதற்கு இந்திய அரசாங்கம் குறுக்கே நிற்காது' என்று எழுதுகிறார். 'இந்திய அரசாங்கம் ஈஸ்ஈக்வல்டு மவுண்ட் பேட்டன்'. பல ஆதாரங்களைச் சொல்லிக் கொண்டிருக்கலாம். பிரிட்டிஷ் அரசாங்கம் நம்மைப் பிரித்து வைத்து விட்டு, இரண்டு நாடுகளும் மோதிக்கொண்டு இருக்கவேண்டும் என்று அன்றி லிருந்து இன்று வரையில் சூழ்ச்சி செய்து கொண்டிருக்கிறது. வேறு எந்தவித அபிப்பிராய வித்தியாசமும் இருப்பதாக நாம் நினைத்து ஏமாந்து விடக்கூடாது. உண்மையான பகைவன் யார் என்பதிலே தெளிவு வேண்டும். உண்மையான நண்பர் யார் என்றும் தெளிவாகியிருக்கவேண்டும். அரசியல் கருத்துக்காக வேண்டி யார் நண்பன் என்று கூற வேண்டுமென்று சொல்ல வில்லை. சோவியத் யூனியன் கொடுத்துள்ள உதவி பற்றி கனம் முதல் அமைச்சர் அவர்கள் 'ஒரு நாடு உதவி அளிக்கிறது' என்று கூறினார்கள். அவர்கள் உதவி செய்யக் காரணம் இருக்கிறது. அமெரிக்கா விரும்பினாலும் உதவி செய்ய முடியாது. இது தான் இரண்டுக்கும் உள்ள வேற்றுமை. சோவியத் யூனியன் தாராள மாக உதவி அளிக்கிறது என்றால் அவர்கள் சித்தாந்தப்படி, சமாதானம் வேண்டும், யுத்தம் கூடாது, ஆசியாவில் மிகப் பெரிய நாடாக உள்ள இந்தியா சுதந்திரமாக இருக்கவேண்டும், அமெரிக்கா, பிரிட்டன் ஆகியவைகளுடன் இணைந்துபோகக்கூடாது என்ற அக்கறை இருக்கிறது. ஆகவே உதவி அளிக்கிறது. சீன அரசியலில் உள்ள தலைவர்களுக்கு மூன்றாவது உலக யுத்தம் வரும், யுத்தத்தின் மூலம் சோஷலிஸம் வந்து விடும் என்ற எண்ணம் இருந்துகொண்டிருக்கிறது. ஏகாதிபத்திய நாடுகளோடு இந்தியா போன்ற நாடுகள் இணைந்து விடக் கூடாது என்ற அக்கறை சோவியத் யூனியனுக்கு இருக்கிறது. அதனால்தான் பாகிஸ்தானுக்குக்குக்கூட ஒரு உருக்கு ஆலை அமைத்துக்கொடுக்க முன் வந்திருக்கிறது. பொருளாதார ரீதியில் ஆப்பிரிக்க ஆசிய நாடுகள் பின் தங்கியிருக்கின்றன. அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று செய்யச் செய்ய ஏகாதிபத்தியவாதிகளின் அஸ்திவாரம் தகர்ந்துபோகும். பொருளாதாரப் பிடிப்பு இருந் தால்தான் ஏகாதிபத்திய வாதிகளால் ஆள முடியும். அதனுடைய வேரைக் கத்திரிக்கவேண்டுமென்று தான் உதவி செய்கிறார்கள். நமக்கும் அது நல்லதாக இருந்தால் பயன்படுத்திக்கொள்ளலாம். உள்நாட்டில் எப்படி இருக்கவேண்டும் என்பதை நாம் பார்த்துக் கொள்ளலாம். அதைப் பற்றி அமெரிக்கா சொல்ல வேண்டிய தில்லை, பிரிட்டன் சொல்லவேண்டியதில்லை, சீனா சொல்ல வேண்டிய தில்லை, ரஷ்யா சொல்ல வேண்டியதில்லை. அதுதான் என் கட்சியினுடைய கொள்கை. அதனால்தான் பாகிஸ்தான் படை

3rd November 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

யெடுப்புக்கு உண்மையான காரணமான ஏகாதிபத்தியத்தின் சதி எங்கு இருக்கிறது என்று பார்த்து நம் நாட்டைப் பாதுகாக்க வேண்டும். பாகிஸ்தான் முறியடிக்கப்படவேண்டும் என்பது மட்டுமல்லாமல், பின் பலமாக இருக்கக்கூடிய அனைவரையும் முறியடிக்கவேண்டும் என்ற உறுதி இருக்கவேண்டும் என்பது என் அபிப்பிராயம் என்று கூறிக்கொள்ளுகிறேன். ஆகையால் தான் நான் கொடுத்த திருத்தத்தில் ஒன்று இந்தியா பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் ஏன் இருக்கவேண்டும் என்று யோசனை செய்ய வேண்டும் என்பது. காமன்வெல்த்தில் இருப்பதால் பிரிட்டன், பாகிஸ்தானுடன் போய் உட்காரவேண்டும். அப்படி இருப்பதால் என்ன நன்மை ஏற்படப் போகிறது ? ஆரம்ப காலத்தில் அரசியல் அவசியம் இருந்திருக்கலாம். இப்போது தேவையில்லை. சொந்த பலத்தைப் பெருக்கிக் கொள்ளவேண்டும், துணிவு இருக்க வேண்டும், விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதிலே இருவித அபிப்பிராயம் இருக்க முடியாது. எந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தாலும் என் கட்சியும், என் கட்சியோடு இணைந்த ஸ்தாபனங்களும் ஒத்துழைப்புக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். உற்பத்தியைப் பெருக்கவேண்டும் ; தொழில் அமைதி வேண்டும் ; அப்போது தான் பாதுகாப்பைப் பலப்படுத்த முடியும். நடக்கக்கூடிய நிகழ்ச்சி களிலிருந்து சிக்கிரத்தில் இந்தச் சிக்கல் தீர்ந்து விடும் என்று சொல்ல முடியாது. அதற்கான அறிகுறிகள் இல்லை. தொடர்ந்து இருக்கும். பதினெட்டு ஆண்டுகளாக இருக்கிறது, இனி எவ்வாறு இருக்கும் என்று சொல்ல முடியாது. கனம் முதல் அமைச்சர் அவர்கள் என்ன நினைத்தாலும் சரி, அமெரிக்காவுக்கும் பிரிட்ட னுக்கும் இந்த டென்ஷன் இப்படியே இருக்கவேண்டும், ஆசியரும் ஆசியரும் சண்டை போட்டுக்கொண்டிருக்க வேண்டும், அப்போது தான் அவர்களுடைய அரசியலுக்கு வசதியாக இருக்கும். அந்த விவரங்களுக்குப் போக எனக்கு நேரம் இல்லை. இல்லையென்றால் ஆதாரங்களோடு என்னால் எடுத்துக் கூற முடியும். தொடர்ந்து நடக்கும் இந்த மனப்பான்மை இருக்கிற வரையில், இந்தியா போன்ற சோஷலிஸ நாடுகள் ஓரளவுக்கு பக்கத்து நாடுகளோடு உடன்பாடு இல்லாமல் இருக்கவேண்டும், எப்போதும் பகைமையோடு இருக்கவேண்டும் என்று சுதந்திரத் திற்கு எதிரான போராட்டமே தவிர, காஷ்மீரில் சில தளத்திற்கு அல்லது மண்ணுக்கு அல்ல. நாம் சுதந்திரமாக வாழ்ந்து முன்னேறு வதைத் தடுப்பதற்காக ஏற்பட்டது இந்த யுத்தம். காஷ்மீர் பற்றி தனி பிரச்சனையாகப் பார்க்கக்கூடாது. நாம் விட்டுக் கொடுத்தா லும், ப்ளெபிஸைட். எடுத்தாலும், சமாதானம் ஏற்படுமா? ஏற்படும் என்று யாராவது உத்திரவாதம் அளிக்க முடியுமா ? கடந்த 18 வரு ஷத்திய நிகழ்ச்சி என்ன ? கன்ஸிலியேட்டரி மனப்பான்மை வேண்டும், இந்தியாவுக்கு சமரச மனப்பான்மை தேவை என்றால், இது வரையில் இந்தியா சமரச மனப்பான்மையைத் தானே பின் பற்றியது ? நிர்ப்பந்தம் காரணமாகவோ, எந்தக் காரணமாகவோ சமரச மனப்பான்மையைத்தானே பின்பற்றியது ? இல்லை யென்றால் ஆஸாத் 'காஷ்மீர். பாகிஸ்தான் ஆதிக்கத்தில்

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [3rd November 1965

எப்படி இருக்க முடியும்? இந்தியா, பாகிஸ்தானை அழிக்கவேண்டுமென்று யுத்தத்திற்குப் போகவில்லை. பாகிஸ்தானை இணைத்துக் கொள்ளவேண்டுமென்று போகவில்லை. நம் அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. யாருக்குச் சொல்லவேண்டும்? பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எடுத்துச் சொல்ல வேண்டும், அமெரிக்கர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். செல்வாக்கை அங்கே உபயோகப்படுத்தவேண்டும். காஷ்மீரில் தலையிடாதீர்கள், இந்தியாவின் உள் விவகாரத்தில் தலையிடாதீர்கள் என்று அவர்களிடத்திலே சொல்லவேண்டும். இன்னும் கன்சிலியேட்டரி மனப்பான்மை வேண்டும் என்று சொன்னால், இதைத்தான் பூட்டோ அங்கே எடுத்துச் சொல்லுவார். 'இந்தியாவிலேயே ஒரு பெரிய மனிதர் கன்சிலியேட்டரியாகப் போக வேண்டுமென்று சொல்லுகிறார்' என்று அவர்களுக்கு ஆதாரவைத் தேடிக்கொடுக்க வேண்டாமென்று, எவ்வளவு பெரிய மனிதராக இருந்தாலும் எடுத்துக் கூற விரும்புகிறேன். இது அல்ல சமாதானம். நாம் என்ன தவறு செய்து விட்டோம்? அவைகளை ஆதாரங்களோடு கூறினாலும் அர்த்தம் உண்டு. நாம் செய்வது தர்ம யுத்தம் அல்ல என்று ஆதாரங்களோடு எடுத்துச் சொல்ல வேண்டும். இந்தியா விட்டுக் கொடுத்திருக்கிறது என்று தெரிந்தும், சமாசத்திற்குத் தயாராக இருக்கிறது என்று தெரிந்தும், பாகிஸ்தானுடன் கன்ஸிலியேட்டரியாகப் போகவேண்டும் என்று சொல்வது சரியா? 800 ஆண்டுகள் பாகிஸ்தான் இந்தியாவை ஆண்டு வந்ததாம், 200 ஆண்டுகள் பிரிட்டிஷார் ஆண்டு வந்தார்களாம், இந்த ரீதியில் பிதற்றுகிறவர்களோடு சமரசம் இருக்க முடியுமா என்று கேட்க விரும்புகிறேன். பாகிஸ்தான் அதிபர்கள், அமைச்சர் என்று சொல்லுகிறவர்களுக்கு ராஜரீகம் தெரியாது, நாகரீகம் தெரியாது—காட்டுமிராண்டித்தனம் என்ற வார்த்தையை நான் உபயோகப்படுத்த விரும்பவில்லை—அப்படிப்பட்டவர்களோடு கன்ஸிலியேட்டரி மனப்பான்மை எப்படி கொள்ள முடியும்? காஷ்மீரைப் பாகிஸ்தான் எடுத்துக்கொள்ளட்டும் என்று சொல்லுவதா? அல்லது அயூப் டில்லியில் வந்து உட்காரவேண்டும் என்று சொல்லுவதா? அது கன்சிலியேஷன் அல்ல, சமாதானம் அல்ல, சமரசமும் அல்ல. பாகிஸ்தான் மூலமாக அமெரிக்கா, பிரிட்டிஷ் ராஜ தந்திரத்தை கையாண்டு கொண்டிருக்கிறது என்பதைக் கண்டிப்பாக உணரவேண்டும். ப்ளெபிஸைட் எப்படி வந்தது? ஈஸ்ட் பெங்கால் பாகிஸ்தானுடன் சேர ப்ளெபிஸைட் இருந்ததா? பஞ்சாப் முஸ்லீமுக்கும், சிந்து முஸ்லீமுக்கும், வட மேற்கு எல்லை மாகாண முஸ்லீமுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? எப்படி பாகிஸ்தான் அமைந்தது? எப்படிக் கொடுத்தார்கள்? யாரைக் கேட்டுக் கொடுத்தார்கள்? காஷ்மீரில் மட்டும் ப்ளெபிஸைட் ஏன் வேண்டும்? சொன்னவர்களே இப்போது சொல்ல அஞ்சுகிறார்கள். இந்தியா தனிநாடு போலவும், காஷ்மீர் தனிநாடு போலவும், காஷ்மீர் மக்கள் கருத்தை ஆலோசிக்க வேண்டுமாம். திருவாங்கூர் போல காஷ்மீரும் நம்முடைய நாட்டின் ஒரு பகுதி. பதினெட்டு ஆண்டுகளாக நம் பகுதியாக இருக்கிறது. இந்தப் பிரச்னையைக் கிளப்புவது ஏகாதிபத்திய பிரசாரத்திற்கு உதவியாக இருக்குமே தவிர, நாட்டைப்

3rd November 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

பாதுகாக்கும் பெருந்தன்மை இதில் இல்லை. அடிமைப் புத்தி தான் இருக்கிறது, இதற்கு பெருந்தன்மை என்று பட்டம் சூட்ட வேண்டியதில்லை என்பது எனது அபிப்பிராயம்.

அடுத்தபடியாக, நம்முடைய சொந்த பலத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு, நம்முடைய காலிலேயே நாம் நிற்கவேண்டும் என்பதற்கு நாம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதுபற்றி சில யோசனைகள் கூற விரும்புகிறேன். விவசாய உற்பத்தியை பெருக்கியாகவேண்டும். பி.எல். 480 உதவியை நம்பிக் கொண்டு இருக்கவேண்டாம். அதைப்பற்றி கனம் முதல் அமைச்சர் அவர்கள் சற்று வேகமாக பேசியது குறித்து நான் பாராட்டுகிறேன். நம்முடைய நாடு விவசாய நாடு. எளிய வாழ்க்கையை நடத்துகிறவர்கள், களியை சாப்பிட்டுக்கொண்டு வாயில் புகையிலையை அடக்கிக்கொண்டு அல்லும் பகலும் உழைக்க கூடிய விவசாயிகள் உள்ள நாடு நமது நாடு. இந்த நாடு உணவு தானியத்திற்கு பிற நாடுகளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற அவசியம் இருக்கக் கூடாது. அப்படி எதிர்பார்க்காத அளவுக்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். அதற்கு என்ன முட்டுக் கட்டை இருந்தாலும், அதை முதலில் தகர்த்தெரியவேண்டும். விவசாய உற்பத்தியைப் பெருக்குவதில் நாம் மிகவும் கவனம் செலுத்தவேண்டும்.

அடுத்தபடியாக, சிக்கனம். திங்கள் கிழமையில் இரவு உணவை விட்டுவிடவேண்டும் என்று கூறினார்கள். எனக்கு ஆட்சேபணை இல்லை. அதை நான் ஆதரிக்க தயாராக இருக்கிறேன். நானும் அதைக் கடைப்பிடிப்பதற்கு தயாராக இருக்கிறேன், ஆனால், அதனால் பிரச்னை தீர்ந்துவிடும் என்பதல்ல. அப்படி மிச்சப் படுத்திய உணவை உணவு இல்லாதவர்களுக்குக் கொடுத்துவிட லாம், அதனால் உணவுப் பற்றாக்குறையைச் சரிக்கட்டி விடலாம், என்ற நம்பிக்கை இல்லை. ஆனால், அப்படிச் செய்வது அமெரிக்கா போன்ற மற்ற நாடுகளுக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும். உலகத்திற்கு எடுத்துக்காட்டாக இருக்கும். அமெரிக்கா போன்ற நாடுகள் உணவைக் காட்டி அரசியல் பேரம் செய்வதற்கு இடம் அளிக்காது. இந்தியாவிலிருக்கும். 46 கோடி மக்களும் நாட்டின் பாதுகாப்பிற்காக உண்ணா விரதம் இருந்து ஒற்றுமையாக இருக்கிறார்கள், ஒத்துழைக் கிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக இருக்கும், மக்களுடைய ஒற்றுமை உணர்ச்சியையும், தியாக புத்தியையும், உறுதியையும் எடுத்துக்காட்டுவதாக அமையலாம்.

இந்த நாட்டிலுள்ள கள்ள மார்கெட்டுக்காரர்கள் பேரிலும், பதுக்கல் செய்பவர்கள் பேரிலும், கொள்ளைலாபம் அடிப்பவர்கள் பேரிலும் கனம் முதல் அமைச்சர் அவர்களும், அரசாங்கமும் தங்களுடைய முழு அதிகாரத்தையும் பயன்படுத்தவேண்டும். 'டிஃபன்ஸ் ஆஃப் இந்தியா ரூல்ஸை' இதற்கு பயன்படுத்த வேண்டும். அவர்களை சபிக்கக்கூடிய வகையிலே நாட்டு மக்களு டைய மனப்பான்மையை தயார் செய்ய வேண்டும். கள்ளமார்

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [3rd November 1965

கெட்காரர்களைக் கண்டிக்கும் வகையில் ஒரு வேலை உணவைக் கைவிடவேண்டும் என்ற நோக்கம் வரவேற்கத்தக்கது. அதனால் மட்டும் இந்தப் பிரச்னை தீர்ந்துவிடும் என்று கூறமுடியாது.

இன்னும் பல கஷ்டங்கள், தொழிலாளிகள் பிரச்னைகள், முதலாளிகள் பிரச்னைகள், சிக்கல்கள் இருக்கின்றன. சமீபத்தில் இயற்கையும் நமக்கு பிரதிகூலமாக இருக்கிறது. தமிழ்நாடு சம்பந்தப்பட்டவரையில் மேட்டூர் அணையில் தண்ணீர் குறைவு; மற்ற அணைகளிலும் தண்ணீர் குறைவாக இருக்கிறது. மின்சார உற்பத்தி அதனால் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதனால் மின்சாரத்தை கட்டுப்பாடு செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. என்ன நெருக்கடி வந்தாலும், நாம் மனது தளராமல் சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கையை மக்களிடையே உண்டாக்கவேண்டும். பொதுமக்களும் அதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டும். முதலாளிகள் என்ன செய்கிறார்கள்? முதலாளிகள் பலருக்கு யுத்த முயற்சிக்கு ஆதரவு கொடுப்பதில் அக்கறை இல்லை. 1962-ல் அக்கறை இருந்தமாதிரி நடித்தார்கள். கம்யூனிஸ்டு இயக்கத்தை எதிர்த்தால், முதலாளித்துவத்தைக் காப்பாற்றிவிடலாம், சீனா தோற்றுவிட்டால். முதலாளித்துவத்தை காப்பாற்றிவிடலாம் என்று அந்த நேரத்தில் மனப்பால் குடித்தார்கள். முதலாளிகள் ரகசியமாக பிரசாரம் செய்கிறார்கள். யுத்த நிதிக்கு தீர்மானம் போட்டுக் கொடுத்தால் போதாது, தொழிலாளிகள் கையெழுத்து வாங்கிக்கொடுத்தால் தான் வசூல் பண்ண முடியும் என்று சொல்லுகிறார்கள். 'லாகூரில் இந்தியாவின் ஆர்மி இருக்கிறது, என்ன பாதுகாப்பு?' என்று சொல்லி தப்புப் பிரசாரம் செய்கிறார்கள் சில முதலாளிகள். முதலாளிகளுக்கு ஒரு பீதி ஏற்பட்டிருக்கிறது. இந்த யுத்தத்தின் காரணமாக அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளுக்கும், இந்திய நாட்டு மக்களுக்கும் இடையே இருக்கக்கூடிய ஒற்றுமை குறைந்து, விரோதம் வளர்ந்து கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல. சோவியத் யூனியன் நட்பு வளர்ந்துகொண்டிருக்கிறது. இதனால் நம்முடைய நாட்டு முதலாளிகளுக்கு பயம் ஏற்பட்டிருக்கிறது. நாட்டைப்பற்றி அவர்களுக்குக் கவலையில்லை. நாடு என்ன ஆனாலும் அவர்களுக்குக் கவலையில்லை. அப்படித்தான் அவர்கள் மறைமுகமாக பிரசாரம் செய்கிறார்கள். மறைமுகமாக நெருக்கடியை உண்டாக்குகிறார்கள். மறைமுகமாக எப்படி கதவடைப்பு செய்யலாம் என்ற முயற்சி செய்கிறார்கள். வெள்ளையர் முதலாளிகள் பகிரங்கமாகக்கூட தொழிலாளிகளிடையே குழப்பத்தை உண்டாக்குகிறார்கள், தப்புப் பிரசாரம் செய்கிறார்கள். அவர்களைப்பற்றிய விவரங்கள் கூட பல தொழிற்சங்கத் தலைவர்கள் முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்திருக்கலாம். அவர்கள் மீதெல்லாம் 'டிஃபென்ஸ் ஆஃப் இந்தியா ரூல்ஸின்' கீழ் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். அதில் ஒன்றும் தவறு இல்லை. தயவு செய்து அந்த அதிகாரத்தை அவர்கள் மீது உபயோகப்படுத்துங்கள், அது நல்லது என்று நாட்டு மக்கள் பாராட்டுவார்கள்.

3rd November 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

மண்ணெண்ணெய் விநியோகத்தில் பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது, கிராமந்திரங்களில். ஏதோ நகரங்களில் வேண்டுமானால் கொஞ்சம் சமாளிக்கிறார்கள். கிராமப்புறங்களில் ஒரு பாட்டில் மண்ணெண்ணெய் ரூ. 1·25 ஆக இருக்கிறது. 'ரூ. 15 கொடுத்து ஒரு டின் வாங்கி நாங்கள் பாட்டில் ரூ. 1·25-க்கு விற்காமல் எப்படி விற்பது ?' என்று கேட்கிறார்கள். கிராம மக்களுக்கு, விவசாய மக்களுக்கு பாதுகாப்பு அளித்தால்தான், அவர்களிடமிருந்து நம் நாட்டினுடைய பாதுகாப்பிற்கு உதவி கேட்க முடியும். பாகிஸ்தானுக்கு இந்தியாவை காட்டிக் கொடுப்பவர்களைவிட இப்படி அதிக விலைக்கு விற்கும் இவர்கள் துரோகிகள். பர்மாஷெல், கால்டக்ஸ், எஸ்ஸோ இவர்கள் சப்ளை பாயிண்டிலிருந்து மண்ணெண்ணெய் எப்படிப் போகிறது ? அதிகாரிகள் இதைக் கண்டுபிடிக்க வேண்டும். 'டிஃபன்ஸ் ஆப் இந்தியா ரூல்லை' இதற்கு உபயோகப்படுத்த வேண்டும். அந்த டெப்போவையெல்லாம் பிடுங்கிவிடுங்கள். இந்தியன் ஆயில் கம்பெனிக்கு 3, 4 டாங்கர்ஸ் வந்திருக்கின்றன. அதுவும் சோவியத் யூனியன் கொடுத்து உதவியது என்று நான் சொன்னால் சங்கடப்படக் கூடாது. இந்தியன் ஆயில் கம்பெனியார் சரியாக விநியோகம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தியன் ஆயில் கம்பெனி அதிகாரிகள் அரசாங்கத்திற்கு அப்பாற்பட்டவர்கள் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். பர்மாஷெல், கால்டாக்ஸ், எஸ்ஸோ இவர்கள் மீதெல்லாம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். மண்ணெண்ணெய் நெருக்கடி, பெட்ரோல் நெருக்கடி, டீஸல் எண்ணெய் நெருக்கடி என்று நெருக்கடி மேல் நெருக்கடியாக ஏற்படுத்தி நாட்டின் அமைதியைக் குலைக்க இந்த முதலாளிகள், அன்னியக் கம்பெனி முதலாளிகள் வகை செய்கிறார்கள். இதைக் கண்டிக்கவேண்டும். அவர்கள் மீது 'டிஃபன்ஸ் ஆப் இந்தியா ரூல்ஸின்' கீழ் ஆக்ஷன் எடுக்கவேண்டும். மண்ணெண்ணெய் விநியோகத்தை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று நான் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு நம்முடைய யுத்த முயற்சியைத் திரட்டுவதிலும், நிதி வசதியைத் திரட்டுவதிலும், மக்களுடைய ஒத்துழைப்பைப் பெறுவதிலும், எல்லாக் கட்சியினருடைய ஒத்துழைப்பையும் பெற வேண்டும். அதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும். கட்சி பாகுபாடு செய்யக்கூடிய எண்ணம் ஏற்படக்கூடாது. ஒத்துழைக்காத கட்சியைப் பற்றி கவலையில்லை. ஒத்துழைக்கக்கூடிய கட்சிகளெல்லாம் சேர்ந்து மக்களுடைய ஒத்துழைப்பைத் திரட்டுவதற்கு வழிவகைகள் செய்யவேண்டும். மக்கள் என்று சொல்லுகிறபோழுது, 60, 70 வயதுவந்தவர்களை, ஜரிகை தலைப்பாகைதான் மிச்சமாக இருப்பவர்களைக் கூப்பிட்டு வைத்து பாதுகாப்பு கமிட்டி அமைத்தால் பயன் இல்லை. நாட்டு மக்களிடையே செல்வாக்கு உடையவர்கள், நிலத்தில் உழைக்கின்ற மக்கள், தொழிற்சாலைகளில் வேலை செய்யக்கூடிய மக்கள், செல்வாக்கு இருக்கக்கூடிய மக்கள், சொன்ன வார்த்தைகளை மக்கள் கேட்கக்கூடிய அப்பேர்ப்பட்டவர்கள் மூலம் மக்கள் ஆதரவை திரட்டவேண்டும்.

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [3rd November 1965

கிராம மக்களுடைய ஆதரவைத் திரட்டவேண்டும். மக்களுடைய ஆதரவைத் திரட்டக் கூடியவர்களுடைய ஒத்துழைப்பைப் பெற்று, கட்சி பாகுபாடு இல்லாமல், வேறு பாகுபாடு இல்லாமல், நாம் எல்லோரும் சேர்ந்து ஒன்றாக இருக்கிறோம், 46 கோடி மக்களும் ஒன்றாக இருக்கிறோம், யார் வந்தாலும் நம்முடைய நாட்டைப் பாதுகாக்க முடியும், நாம் முன்னே போவோமே தவிர, ஒரு இஞ்சு கூட பின்னே போகமாட்டோம் என்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும். முழுமனத்தோடு இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன் என்று தெரிவித்துக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. க. ர. நல்லசிவம் : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். நம்முடைய நாட்டுப்பகுதி பாகிஸ்தான் கையிலே 400 சதுர மைல் இருக்கும் வரையிலே, சீனாவின் கையில் 12,000 சதுர மைல் இருக்கும் வரையில், இந்த நாட்டில் அமைதியாக இருக்க முடியாது. அந்தப் பகுதிகள் நம் கைக்கு திரும்பி வந்தால்தான், நாட்டில் சமாதானம் நிலவ முடியும். அதுவரையிலே யுத்த உணர்ச்சி மழுங்குகின்ற நிலை இருக்கவே கூடாது. நம்மிடையே யுத்த உணர்ச்சி, யுத்த உணர்வு நம்முடைய பகுதிகள் மீட்கப் படுகின்ற வகையில் இருந்தே தீரவேண்டும். அதற்கான அடிப் படையில் நாம் காரியங்களைச் செய்து செயலாற்ற வேண்டும். பொதுவாக இந்த தேசத்திலே துணிவு, திறன், தியாகபுத்தி இவை நம் இராணுவத்திற்கு இருக்கிறது என்பது நிரூபித்துக்காட்டப்
4-00 p.m. பட்டிருக்கிறது. உலகத்திலேயே சிறந்த இராணுவம் என்பதை தங்களுடைய வீர தீரச் சாகஸச் செயல்களால் நம் ராணுவம் செய்து காட்டியிருக்கிறது. நம்மிடம் உள்ள சாதனங்கள் பழமை யானதாக இருக்கலாம். புதிய ஆயுதங்களை வைத்திருந்த பாகிஸ் தானோடு சண்டையிட்டு அவர்கள் தயங்கும் வகையில் தங்கள் ஆற்றலைக் காட்டிய வீரர்களுக்கு அவர்களுடைய வீரத்திற்கும், தீரத்திற்கும் தலைவணங்கத்தான் வேண்டும். அவர்களுக்கு பொதுமக்கள் ஆதரவு பூரணமாக உண்டு என்பதைக் காட்ட வேண்டும். அதை காட்டும் வகையில்தான் பொதுமக்கள் பணமாகவும், பண்டமாகவும், பொருள்களாகவும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்திலே சர்க்காருடைய கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டுவர விரும்புகிறேன். நகரப்புறங்களிலே மக்கள் உற்சாகம் காட்டுகிறார்கள். ஆனால், கிராமப்புறங்களிலே அவ்வளவு உற்சாகம் காட்டுவதாகச் சொல்ல முடியாது. யுத்தம் என்கிற செய்தி அவர்களுக்குத் தெரியும் என்றாலும், அது நமக்காக, நம்முடைய நிலத்திற்காக செய் யப்படுகின்ற யுத்தம் ; நம்முடைய மக்கள் சாகுபடி செய்கின்ற நிலத்தின் பகுதி பஞ்சாபில், ராஜஸ்தானத்தில் இருக்கிறது என்பது அவர்களுக்கு அவ்வளவாகத் தெரியாது என்றுதான் நான் நம்புகிறேன். அதுவும் நம்முடைய நாடு, அதுவும் நம்முடைய நிலம் என்கிற உணர்வை கிராம மக்களிடம் உண்டுபண்ண

வேண்டும். நம்முடைய நாட்டு மக்களின் சுபாவம், ஒரு அங்குல நிலத்திற்காக ஒரு குடும்பத்தையும் விட்டு, நிச்சயமாகச் சண்டை செய்வதென்பது. பணம் மட்டும் வசூல் செய்தால் போதாது. இப்பொழுது இருக்கும் போக்கு, பணம் கொடுத்தால் போதும் என்று போய்க்கொண்டிருக்கிறது. பொதுவாக இந்த தேசத்தைப் பொறுத்தவரையில், உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்கிறோம். அதற்குப் பல முயற்சிகளைச் செய்கிறார்கள் சர்க்காரிலே. அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பது பெரிய காரியம் இல்லை. இந்தத் தமிழக சட்ட மன்றத்திலே இருக்கும் 206 உறுப்பினர்களில், கிட்டத்தட்ட 150 பேர்களாவது விவசாயப் பகுதியிலிருந்து வருகிறவர்கள் என்று நம்புகிறேன். அவர்களுக்கு நான் ஒன்றும் புத்தி சொல்லுகிறதாக யாரும் நினைக்கக் கூடாது. என் கருத்துக்குப் பட்டதைச் சொல்லுகிறேன். நாமெல்லாம் ஜனங்களிடம் போய், புது முறையான யுக்திகளை, வசதிகளைப் பற்றி பிரசாரம் செய்ய முயற்சி எடுத்துக்கொண்டால், இந்த ராச்சியத்தைப் பொறுத்த வரையில் உற்பத்தியைப் பெருக்கமுடியும். இரண்டு மடங்காகச் செய்யாவிட்டாலும், குறைந்தது ஒன்றேகால் பங்காகவாவது செய்ய முடியும் என்று நான் நம்புகிறேன். ஆகவே, நெல், கம்பு, சோளம் முதலிய தானியங்களை அதிகமாக உற்பத்தி செய்ய எடுத்துக்கொள்ள வேண்டிய யுக்திகளை மக்களிடம் பரப்ப நாம் எல்லோரும் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். என்னைப் பொறுத்த வரையில், அந்த வகையில்தான் நான் ஈடுபாடு வைத்துக்கொண்டிருக்கிறேன். இன்றைக்கு இந்திய சர்க்காரும், மாநில சர்க்காரும், விவசாயப் பெருக்கத்திற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுகிறார்கள். நம் மக்கள் புதுப் புது முறைகளைச் சாதாரணமாக ஏற்றுக் கொள்வதில்லை. இன்றைக்கு நிலச் சீர்திருத்தத்தை எடுத்துக்கொண்டால், கட்டாயப்படுத்துவதற்குப் பதிலாக, நிலச்சுவான்தார்களைக் கேட்டுக்கொள்ளலாம். 100 ஏக்கரை வைத்து ஒரேயடியாகச் சாகுபடி செய்வதற்குப் பதிலாக, அதைப் பிரித்து 10 ஏக்கர், 20 ஏக்கர் என்று விவசாயிகளிடம் குத்தகைக்கும், வாரத்திற்கும் விடுங்கள் என்று சொன்னால், காரியத்தைச் சுலபமாகச் சாதித்துக்கொள்ளலாம். இன்றைக்கு விவசாயிகளுக்கு சர்க்கார் கடன்கள் கொடுக்கிறார்கள், புதிய, புதிய விதைகளைக் கொடுக்கிறார்கள்.. சர்க்கார் சமீபத்திலே ஒரு புதிய விதையைக் கொண்டு வந்தார்கள். "ஜப்பானிகா இண்டிகா" என்கிற ஒரு விதையைக் கொண்டு வந்தார்கள். என் பகுதியில் அந்த விதையைப் போட்டு 30, 35 மூட்டைவரை கண்டுமுதல் செய்திருக்கிறார்கள். புதிய முறைகளைக் கையாண்டு 40, 50 மூட்டைகள் கூட கண்டுமுதல் செய்திருக்கிறார்கள்.

இன்றைக்குப் பல அணைக்கட்டுகள் தண்ணீர் இல்லாமல் இருக்கின்றன. அதே நேரத்திலே, ஒரு கிணற்றில் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் சாகுபடி செய்கிறார்கள் என்றால், அதிலே வேளாண்மையை அதிகப்படுத்தினால் நலமாக இருக்கும். அப்படித்தான் நான் என்னைப் பொறுத்த வரையில் செய்து வருகிறேன். ஆகவே, தயவு செய்து சட்ட மன்ற உறுப்பினர்கள் விவசாயிகளுடன் தொடர்பு

[திரு. க. ர. நல்லசிவம்] [3rd November 1965

உள்ளவர்கள், செயல் பட்டால் யுத்த முயற்சிக்கு விசேஷப் பணி செய்தவர்கள் ஆக இருப்போம். இன்றைக்கு நாட்டில் 100-க்கு 90 பேர்கள் விவசாயிகளாக இருப்பதால், அவர்களை உற்பத்தித் துறையில் அதிகமாக ஈடுபடுத்த முயற்சிகள் எடுக்கவேண்டும்.

இரண்டாவதாக, கிராமப்புறங்களில் ராணுவ உணர்ச்சியை அதிகப்படுத்த வேண்டும். மாணவர்கள், வாலிபர்கள் இவர்களிடையே ராணுவ உணர்ச்சியைப் பெருக்க வேண்டும். சீனாவை எடுத்துக் கொண்டால், அவர்களுக்கு மற்றவர்களை விரட்டுகிற பலம் வரக்காரணம் என்ன? அது எப்படி வந்தது? சிவில் தரப்பில் 3, 4 கோடி மக்களுக்கு ராணுவப் பயிற்சி கொடுத்திருக்கிறார்கள். ராணுவத் துறைக்குப் பயன்படுத்தும் அளவுக்கு, பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவேதான் அவர்கள் உலகத்தையே விரட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைக் கண்டு அஞ்ச வேண்டியிருக்கிறது. ஆனால், நம் தேசத்தைப் பொறுத்தவரையில், சீனாவைப்போலவே, நாமும் மக்கள் பலம் உடையவர்கள். நம் மக்களில் 46 கோடியில், ஒரு 5 கோடிப் பேருக்காவது ராணுவப் பயிற்சி கொடுத்தால், நம்மிடம் யாரும் வரமாட்டார்கள். நம் பக்கத்திலேகூட வர அஞ்சுவார்கள். மாணவர்களுக்கும், வாலிபர்களுக்கும், கிராமந்தோறும் ராணுவப் பயிற்சி கொடுக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

இப்பொழுதெல்லாம், குஸ்தி, சிலம்பம், முதலியவற்றில் பயிற்சி இருப்பதில்லை. பழையகாலத்தில் அப்படிப்பட்ட பயிற்சிகள் மூலம் உடல் வலிவு பெற்றதாக வைத்திருந்தார்கள். அந்தத் துறைகளில், சர்க்கார் முயற்சி எடுக்காவிட்டாலும், நம்மைப்போன்றவர்கள் முயற்சி எடுக்க வேண்டும்.

இன்றைக்கு வேறு இராச்சியங்களில் எப்படியோ, நம் ராச்சியத்தைப் பொறுத்தவரை, கட்சி பேதம் இல்லாமல் எல்லா முயற்சிகளிலும் நாம் கலந்து கொள்ளுகிறோம். ஆனால், சில இடங்களில், ஆளும் கட்சிக்காரர்கள் செய்யும் விதம், மற்றவர்களை ஒதுக்கி வைக்கிறார்களோ என்கிற உணர்ச்சி ஏற்படுகிற வகையில் இருக்கிறது. நான் திறந்த மனதோடு சொல்ல விரும்புகிறேன், அந்த நிலைமை இருக்கக் கூடாது. பாதுகாப்பு முயற்சியில் மனப்பூர்வமாக எல்லோரும் ஈடுபட்டிருக்கும் நேரத்தில், பிரித்து வைக்கிறார்களோ என்ற எண்ணம் தோன்றும் வகையில் ஆளும் கட்சிக்காரர்கள் நடந்து கொள்ளக் கூடாது.

ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அதுபற்றி கனம் முதல் அமைச்சர் மேலிடத்திற்குச் சொல்ல வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். ராணுவ ரீதியில் செயல்படும் இந்த நேரத்தில் தேர்தலைப் பற்றிப் பேச வேண்டிய அவசியம் இல்லை. தேர்தலைப் பற்றி நான் பயப்படவில்லை. அது வரும்போது வரட்டும். (குறுக்கிடு) பத்திரிகையில் வந்தது. அதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. நம்முடைய தலைவர்களே பேசும் வகை இருக்கக் கூடாது. தேர்தலைக் கண்டு பயப்படுவது கிடையாது, யாரும் பயப்படமாட்டார்கள் என்றே நம்புகிறேன். தேர்தல் வரட்டும், 66-ல்

3rd November 1965] [திரு. க. ர. நல்லசிவம்]

வரட்டும், 67-ல் அல்லது 68-ல் வரட்டும். ஆனால் இப்பொழுது அதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தால், அது பாதுகாப்பு முயற்சிக்குக் குந்தகமாக இருக்கும். அதைப்பற்றி மேலிடத்திற்கு கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொல்லுவார்கள் என்று நம்புகிறேன்.

ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிக் கொண்டு முடிக்கிறேன். பணம் வசூல் செய்தால் மட்டும் போதாது. மக்களிடம் உணர்வை உண்டாக்க வேண்டும். தேசிய நாடகம் என்றும், அது இது என்றும் ஒவ்வொரு நாளும் அதிகாரிகள் மக்களைத் தொந்தரவு செய்கிறார்கள். இன்றைக்கு மக்களுக்கு அலுப்பாகப் போய்விடுகிறது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அதிகாரி வருகிறார், இன்றைக்கு ரெவின்யூ அதிகாரி, நாளைக்கு பப்ளிக் ஒர்க்ஸ் அதிகாரி, மற்ற நாள் சேல்ஸ் டாக்ஸ் அதிகாரி என்று போகிறார்கள். இந்தக் காரியங்களையெல்லாம் மாணவர்கள் சிறப்பாகச் செய்வார்கள். பொது மக்கள் மூலம் இவற்றையெல்லாம் செய்ய வேண்டும்.

உணவுப் பிரச்சினை சம்பந்தப்பட்டவரையில், தயவு செய்து, சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்கள் தங்கள் தொகுதியில், தெருத் தெருவாகப் போய், புதிய விவசாய முறைகளை மக்களிடம் பிரசாரம் செய்து, உற்பத்தியை இரண்டு மடங்காக அதிகப்படுத்த முயற்சிகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தை மனப்பூர்வமாக வரவேற்று என் உரையை முடிக்கிறேன்.

* SRIMATHI A. SUARES : Mr. Speaker, Sir, while supporting the resolution moved by the Hon'ble the Chief Minister, which condemns the wanton aggression by Pakistan and expresses profound tribute to the Armed Forces for their heroism, valour and patriotism, I wish to say a few words on the contribution made by my community in the Army and Air Force during the Indo-Pakistan conflict.

It is a well known fact that there is a high percentage of Anglo-Indians in the Indian Air Force. Many of them have distinguished themselves in the past and have secured many awards. In this conflict they have surpassed their past achievements and many Anglo-Indians have received gallantry awards.

Flying an Indian manufactured Gnat, Squadron Leader Trevar Keelor was the first pilot in the Indian Air Force to draw blood against Pakistan. He and a few pilots went up and intercepted 5 Pakistani Sabre Jets and 2 Star Fighters—all of American-make. With the first burst of Squadron Leader Keelor's fire, a Pakistani Sabre Jet blew up in mid-air and disintegrated. For his outstanding courage and devotion to duty, he has been awarded the Vir Chakra. His brother, also a Squadron Leader, Denzil Keelor, shot down another Pakistani Sabre Jet and has also been awarded the Vir Chakra.

[Srimathi A. Suares] [3rd November 1965

Air Marshal Arjan Singh, Air Chief, in his letter to the father of the Keelor brothers said that the achievements attained by the Keelor boys would be a source of great inspiration to the other pilots of the Indian Air Force. He added that the Indian Air Force were proud of the Keelor boys.

Not only the community but the country also is proud of them. The Anglo-Indian boys are adding to the glorious traditions which they set up in 1947 when they played a decisive role in driving the Pakistanis from Kashmir. In that campaign, the first pilot to volunteer for service in Kashmir was an Anglo-Indian. That first pilot to land at Srinagar when the invaders were at its gates, was an Anglo-Indian and also the first pilot to land at Poonch was an Anglo-Indian. More than half the gallantry awards, at that time, were awarded to Anglo-Indian fighter pilots.

To-day also the Anglo-Indians are in an appreciable number in the Indian Air Force, fighting shoulder to shoulder with men of other communities. Gallantry awards have been made to many other officers. Wing Commander W. Goodman has been awarded the Maha Vir Chakra and Flight Lieutenant A. Cooke, the Vir Chakra.

True to the traditions of the community which has always shown its finest qualities of steadfastness and courage in times of crisis, they have made their contribution in the present conflict, cut of all proportion to their size. As you know, the Anglo-Indians are a microscopic minority community when compared with the millions of the population of India. In the main fighting sectors during that conflict, out of three senior Generals one was an Anglo-Indian. Major-General Pat Dunn was a senior General. He had distinguished himself in the Kutch conflict. At that time, there were no tanks, no heavy armour and they were hopelessly outnumbered. But Dunn's Jawans had destroyed 10 Patton tanks which were supposed to be invincible. They used the Indian manufactured recoilless rifles. This time Major-General Pat Dunn was promoted from Major-General to Lieutenant-General. He was a Corps Commander in the Sialkot sector. With the armour that he possessed which was not matched in numbers with that of the enemy, he made circles around the Pakistanis by superior generalship and tactics. The number of tanks captured by him are solid reminders of the shattered dreams of conquest of a military dictator. Had the war lasted for a few more days the whole Pakistani front from Lahore to Sialkot would have collapsed. Lt. Col. Hayde was decorated for gallantry and received the Maha Vir Chakra. Lt. Col. Terence Nolan died a hero's death while leading his regiment, the 2nd Mahrattas. I have mentioned just a few names of those who received awards and those who distinguished themselves but there were many more either veterans of past conflicts who were not in the front line or who were in the control room doing the very important task of guiding fighter planes and replenishing men and armour on the front line.

3rd November 1965] [Srimathi A. Suares]

The heroes of the ground forces which supported the air attacks also deserve our tribute. The brave Jawans went into the thick of the fight, disregarding personal safety. They did not hesitate to fight hand-to-hand battles. I would like to mention specially Havildar Abdul Hamid Khan who received the highest decoration in this conflict which was the Param Vir Chakra. Unfortunately this was a posthumous award.

The Hon. the Chief Minister has rightly included in his resolution a tribute to the Armed Forces who have played their part heroically during the conflict and even during the cease-fire which has been violated repeatedly by Pakistan.

We also wish to express our great appreciation of the firm stand taken by our Prime Minister with the assistance of his Cabinet and the Chiefs of the Armed Forces. India's name and the name of her Armed Forces who were able to destroy the American-made equipment, as they did during the conflict, have risen sky-high during this emergency. We hope and pray that the state of emergency will end speedily and that peace will be restored.

MR. SPEAKER: I do not think it is necessary to put the resolution to vote. So, I hereby declare that the resolution is passed unanimously.

VI.—ANNOUNCEMENTS—*cont.*

(3) BUSINESS OF THE HOUSE.

MR. SPEAKER: The programme of business of the Legislative Assembly as decided by the Business Advisory Committee at its meeting held on 3rd November 1965, is as follows:—

4th November 1965	Consideration and passing of the Madurai University Bill, 1965 (L.A. Bill No. 11 of 1965) as amended by the Joint Select Committee and some other Bills.
5th and 6th November 1965.	Official Bills.
7th November 1965 (Sunday).	Holiday.
8th November 1965	1. Presentation of the Demands for Grants for Excess Expenditure in the year 1962-63. 2. Presentation of the Second Supplementary Statement of Expenditure for the year 1965–66. 3. Official Bills.